# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily


■ சுடர்: 29 ■ கதிர்: 009 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 19, வியாழன் 05.12.2013

பக்கம் : 24

வன்னி : ரூபா.20

யாழ். : ரூபா.20

கொழும்பு : ரூபா.30

இடியுடன் கூடிய மழை

28^C 24^C



பக்கம் 06

**இந்தியாவைச் சுற்றிலும் 140 ஆயுதக் கப்பல்கள்**



பக்கம் 07

**காஷ்மீரால் மீண்டும் போர் ஏற்படக்கூடும்**



பக்கம் 23

**அடிலெய்ட்டில் பெய்லிக்கு பதிலாக ஜேம்ஸ் பல்க்னர்?**

## அமெ. உயர்மட்டக் குழு சனியன்று வடக்குக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.5

இலங்கைக்கு இன்று வியாழக்கிழமை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர்மட்ட அதிகாரிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துப் பேசுவதுடன் வடக்கு மாகாணத்துக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இந்தக் குழு நாளை மறுதினம் சனிக்கிழமை வட பகுதிக்கு வருகை தரவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இலங்கைக்கு எதிராக அடுத்த வருடம் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் பிரேரணை கொண்டு

21 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோரில் இதுவரை 87 பேரே இறந்தோராகப் பதிவு

யாழ்ப்பாணம்,டிசெ.5

காணாமற்போனவர்களை இறந்தவர்களாகக் கருதிப் பதிவு செய்யும் சட்டம் கொண்டு வரப்பட்டுஇரு வருடங்கள் கடந்துள்ள போதும் 87 பேரே இதுவரை வடக்கில் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

இந் நிலையில் இந்தச் சட்டம் மூலமான பதிவு நடவடிக்கைகள் எதிர்வரும் 10 ஆம் திகதியுடன் முடிவடையும் நிலையில் அது மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட

21 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவம் வெளியேற வேண்டும்

கொழும்பு, டிசெ. 5

"வட பகுதியில் தமிழ் மக்களின் காணிகளை விட்டு இராணுவத்தினர் உடனடியாக வெளியேற வேண்டும். அங்கு இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும்" என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்றுத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதியான கலாநிதி சலோகா பெயானி வடக்குக்கு பயணத்தை மேற்கொண்டு. போரின்போது இடம்பெயர்ந்த மக்களை உடனடியாகச் சொந்தக் கிராமங்களில் குடியமர்த்த வேண்டும் என வலியுறுத்தியிருந்தார். அத்தோடு. அங்கு இராணுவத் தலையீடு அதிகமாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் குறித்து அமைச்சரிடம் வினவியபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்:-

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐ.நா. பிரதிநிதியான சலோகா

21 ஆம் பக்கம் பார்க்க

# சகாவின் கொலையில் ஈ.பி.டி.பி கமல் கைது

### இறந்தவரின் மனைவி உட்பட மூவருக்கு 17 வரை மறியல்

### கொலைக்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் பிஸ்டலும் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 5

நெடுந்தீவு பிரதேசசபையின் தலைவரும் ஈ.பி.டி.பியின் முக்கியஸ்தருமான டானியல் றெக்ஷயன் படுகொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான அதே கட்சியைச் சேர்ந்த யாழ். மாவட்ட அமைப்பாளரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவருமான கந்தசாமி கமலேந்திரன் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

21 ஆம் பக்கம் பார்க்க





## ஈ.பி.டி.பியின் வசம் சட்டவிரோத ஆயுதம்

யாழ்ப்பாணம், டிசெ.05

ஈ.பி.டி.பியிடம் இன்னமும் சட்டவிரோத ஆயுதங்கள் உள்ளமை நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவரின் படுகொலையின் மூலம் நிரூபணமாகி உள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளரும் நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளருமான டானியல் றெக்ஷயன் கடந்த மாதம் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். இவரைக் கொலை செய்த சந்தேகத்தின் பேரில் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வடமாகாண சபை எதிர்க் கட்சித் தலைவருமான கந்தசாமி கமலேந்திரன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் 9 எம்.எம்.

21 ஆம் பக்கம் பார்க்க

## கள்ளத் தொடர்பே கொலைக்கு காரணம்

கொழும்பு, டிசெ. 5

றெக்ஷயனின் கொலை தொடர்பில் கைதான பிரதான சந்தேக நபர் கமலேந்திரன், கொலை செய்யப்பட்டவரின் மனைவியுடன் கள்ளத்தொடர்பைப் பேணி வந்துள்ளார். இதன் காரணமாகவே இந்தக் கொலைத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்று பயங்கரவாதப் புல

21 ஆம் பக்கம் பார்க்க

## எங்கள் பிள்ளைகளை கண்டுபிடிக்க உதவுக

### பெயானியிடம் அழுது புலம்பினர் பெற்றோர்

முல்லைத்தீவு, டிசெ. 05

இறுதிக்கட்டப் போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் பகுதிக்குச் சென்ற ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதி சலோகா பெயானிடம், தமது பிள்ளைகளைக் கண்டுபிடித்துத் தருமாறு கதறி அழுது கெஞ்சினார்கள் பெற்றோர்.

இரு நாள் பயணமாக வடபகுதிக்கு வருகைதந்த ஐக்கிய



21 ஆம் பக்கம் பார்க்க

## குற்றச்சாட்டுகளுக்கு பதில் கூறாவிடின் சர்வதேச சமூகம் பொறுமை இழக்கும்

### இலங்கை அரசைக் கடுமையாக எச்சரிக்கிறது அமெரிக்கா

கொழும்பு, டிசெ. 05

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை பதிலளிக்கத் தவறுமாயின், சர்வதேசம் இலங்கை மீது காட்டும் பொறுமையை இழந்துவிடும் என்று அமெரிக்கா எச்சரிக்கை செய்துள்ளது.

'உள்நாட்டுப் போரில் இடம்பெற்ற கொடுமைகள் குறித்த குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், இலங்கையிடம் அனைத்துலக சமூகம் காட்டும் பொறுமை குறைந்துவிடும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய, ஆசிய விவகாரங்களுக்கான நிஷா தேசாய் பிஸ்வால் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை வொஷிங்ரனில் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர்

21 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் டக்ளஸும் சந்திரசிறியும் மாகாண சபைக்கு முட்டுக்கட்டை

### கூட்டமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 5

"வடக்கிலுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் செயற்பாடுகளைச் செயலாளர்களினூடாக வடமாகாண அபிவிருத்திக் குழுத்தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் தடுத்துநிறுத்துகின்றனர். அத்துடன், வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தாண்டிய ஆதரவையும் அவகள் மறுத்துரைக்கின்றனர்.

21 ஆம் பக்கம் பார்க்க

# ஊழல் குறித்து 2310 முறைப்பாடுகள் இதுவரை 34 பேர் மட்டுமே கைதாகினர்

## லஞ்ச, ஊழல் ஆணைக்குழு கூறுகின்றது

யாழ்ப்பாணம்,டிசெ.5
இந்த ஆண்டு இலஞ்ச, ஊழல் தொடர்பில் 2 ஆயிரத்து 310 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் இதுவரை 34 பேரையே கைது செய்ய முடிந்துள்ளதாக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் தலைவர் ஜகத்பால பட்ட பெந்தி தெரிவித்தார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத் தேசிய நிகழ்வுகள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்க மளிக்கும் செய்தியாளர் மாநாடு, இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. இதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2012ஆம் ஆண்டு எமது ஆணைக்குழுவுக்கு 3 ஆயிரத்து 169 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. இவற்றில் முக்கியமாகக் கல்வித்துறை தொடர்பில் 440 முறைப்பாடுகளும், பொலிஸ்துறை தொடர்பில் 318 முறைப்பாடுகளும் பிரதேச செயலகம் தொடர்பில் 170 முறைப்பாடுகளும் பிரதேச சபை தொடர்பில் 122 முறைப் பாடுகளும், சுகாதாரத்துறை தொடர்பில் 99 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றன.

இந்த ஆண்டு ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையான காலப் பகுதியில் 2 ஆயிரத்து 310 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் 565 முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகளுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கல்வித்துறை தொடர்பாக 369 முறைப்பாடுகளும், பொலிஸ் துறை தொடர்பாக 225 முறைப்பாடுகளும், சுகாதாரத்துறை தொடர்பில் 98 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளில் 50 சதவீதமான முறைப்பாடுகள் எமது ஆணைக் குழுவின் விசாரணைகளும் சம்பந்தமில்லாதவை. இவற்றை நாம் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

பாடசாலை தொடர்பான முறைப்பாடுகளில் பெற்றோர் முன்வந்து சாட்சியமளிக்கத் துணியாததால் தொடர்ந்தும் முறைப்பாடுகள் அதிகரித்தே வருகின்றன.

பாடசாலைக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்காகப் பெருமளவு பணம் இலஞ்சமாகப் பெறப்படுகின்றது. எனினும் அந்தக் குற்றங்களில் அகப்படாமல் இருக்க வெவ்வேறு வழிமுறைகள் பாடசாலைகளால் பின்பற்றப்படுகின்றது.

இந்த ஆண்டு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் 111 முறைப்பாடுகள் அரசியல்வாதிகள் தொடர்பானவை. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் 9 பேர் தொடர்பான முறைப்பாடுகளும் இதில் அடங்குகின்றன.

இந்த வருடத்தில் பாலியல் குற்றச்சாட்டு தொடர்பான இரு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதில் ஒன்று பாடசாலை அதிபருக்கு எதிரானது. மற்றையது பிரதேச செயலருக்கு எதிரானது.

அத்துடன் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூலை வரை 29 சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு 34 பேரை கைது செய்ய முடிந்தது - என்றார்.

(த-5)

## சிறந்த பண்ணையாளர் தெரிவு வடக்கில்

யாழ்ப்பாணம்,டிசெ.5
வடக்கு மாகாணத்தில் 2013ஆம் ஆண்டுக்கான சிறந்த பாற் பசுப் பண்ணையாளர்களை மாவட்ட ரீதியில் தெரிவு செய்து அவர்களுக்குப் பெறுமதிமிக்க பணப்பரிசில்கள் வழங்குவதற்கு வடக்கு மாகாண விவசாய கமநலசேவைகள், கால்நடை பராமரிப்பு, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாற்பசுப் பண்ணையாளர்கள் இப் போட்டிக்கான விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் தங்களது பிரதேச கால்நடை வைத்திய அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 13 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னராகவோ தங்களது பிரதேச கால்நடை வைத்திய அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## கொடுப்பனவு வழங்கப்படவில்லை

புதுக்குடியிருப்பு, டிசெ.5
வட மாகாண சபைத் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்களுக்கான தேர்தல் கடமைக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வட மாகாண சபைக்கான தேர்தல் கடந்த செம்ரெம்பர் மாதம் இடம்பெற்றது. இந்தத் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கான கொடுப்பனவுகள் அடுத்த மாதமே வழங்கப்பட்டுவிட்டன.

ஆனால் சுமார் மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை. இது தொடர்பாக அவர்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். (த-400)



கிளிநொச்சி கோணாவில் அ.த.க. பாடசாலையில் ஆரம்பப் பிரிவு வகுப்பறைக்கு அருகில் இருந்த பெரிய மரம் காற்றுடன் கூடிய மழை காரணமாக நேற்று இரவு சரிந்து விழுந்ததால் பாடசாலையின் தற்காலிக கொட்டகை ஒன்று சேதமடைந்துள்ளது. (ஐ-426)

## கடும் மழை காரணமாக டெங்கு ஒழிப்பு பாதிப்பு

**மழை காரணமாக வீடுகளுக்குச் சென்று டெங்கு ஒழிப்பில் ஈடுபடும் பணி பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.**

யாழ்ப்பாணம்,டிசெ.5
யாழ். குடாநாட்டில் கடந்த சில நாள்களாகப் பெய்யும் மழை காரணமாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளைப் பூரணமாக முன்னெடுக்க முடியவில்லை என்று யாழ்.பிராந்திய சுகதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த வார இறுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு இன்று வியாழக் கிழமை நிறைவு செய்வதென முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் மழை காரணமாக வீடுகளுக்குச் சென்று டெங்கு ஒழிப்பில் ஈடுபடும் பணி பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் சுகாதாரப் பணிப்பாளரிடம் கேட்டபோது,

அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் மாத்திரமே இந்த வாரம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. மழை காரணமாக அந்தப் பணியை பூரணமாகச் செயற்படுத்த முடியவில்லை.

இந் நிலையில் டெங்கு ஒழிப்பைத் தொடர்ந்து முன்னெடுப்பதா என்பது தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும் என்றார்.

(த-4-86)

## மப்பும் மந்தாரமுமான காலநிலை தொடரும்

யாழ்ப்பாணம், டிசெ.5
யாழ்.குடாநாட்டில் கடந்த இரண்டு நாள்களாக பல பகுதிகளிலும் மழை பெய்துள்ளது. இன்றும் மப்பும் மந்தாரமுமான காலநிலையே தொடரும் என்று யாழ்.வளி மண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்றுக்காலை 8.30 மணிவரை 31.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. நேற்றுப் பகல் பல இடங்களிலும் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து நேற்றுவரை 52.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது - என்று அவர் மேலும் கூறினார்.

இதேவேளை - இந்த இரண்டு நாள்களாகப் பெய்த மழை காரணமாக வயல்களில் ஓரளவு நீர் தேங்கியுள்ளது.

(த-4-86)

## போர் இழப்புத் தகவல் திரட்டுவதாயின் மாகாண அதிகாரிகளை மாற்ற வேண்டும்

### வடக்கு மாகாண முதலமைச்சர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்.டிசெ.5
வடக்கில் போரினால் ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பான உண்மையான - முழுமையான தரவுகளைத் திரட்டும் பிரேரணையை செயற்படுத்துவதாயின், வடக்கு மாகாண அரச அதிகாரிகளை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் கடந்த மாத அமர்வின் போது, வடக்கில் போரினால் ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பான உண்மையானதும், முழுமையானதுமான தரவுகள் மற்றும் தகவல்களைத் திரட்டும் பொருட்டு விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரனால் முன் வைக்கப்பட்டு சபையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

இந்தப் பிரேரணையை நடைமுறைப்படுத்துவதற்காக எவ்வாறான நடவடிக்கைகள் வடக்கு மாகாண சபை முன்னெடுத்துள்ளது என்று முதலமைச்சரிடம் கேட்டபோது,

இந்த நடவடிக்கைகள் அரச அதிகாரிகளினாலேயே முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு இங்குள்ள அரச அதிகாரிகளை இடமாற்றம் செய்ய வேண்டியுள்ளது.

முதலமைச்சரின் அனுசரணையுடன், செயலாளர்கள் செயற்பட வேண்டும் என்று சட்டத்தில் சொல்லப்பட்ட போதும், நடைமுறையில் பழைய சிந்தனையிலேயே அவர்கள் செயற்படுகின்றனர்.

இதில் மாற்றத்தை ஏற்படுத்திய பின்னரே இந்த தகவல் திரட்டும் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் - என்றார். (த-5)

## கொழும்புத்துறை ஆலயத்தில் திருடர்கள் இரவு கைவரிசை

யாழ்ப்பாணம், டிசெ. 5
கொழும்புத்துறை மேற்கு வதரி பீட விநாயகர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இரவு பல பெறுமதியான பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர் திருடர்கள்.

நேற்றுமுன்தினம் இரவு பெய்த மழையை சாதகமாகப் பயன்படுத்தி ஆலயத்தின் வசந்த மண்டபம் அருகே உள்ள அறையை உடைத்து உள்ளே நுழைந்துள்ளனர் திருடர்கள்.

அங்கிருந்த பெறுமதிவாய்ந்த ஒலிபெருக்கி சாதனங்கள், பித்தளைப் பொருள்கள் என்பவற்றை அபகரித்த அவர்கள் ஆலயத்தின் உட்பக்கத்தில் இருந்த உண்டியலை உடைத்து அதற்குள் இருந்த பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இந்த ஆலயத்தில் அடிக்கடி உண்டியல் உடைக்கப்பட்டு வருவதாகவும் ஒரு மாதத்தில் மூன்றாவது முறையாக இங்கு உண்டியல் உடைக்கப்பட்டதாகவும் பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

இது குறித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-17)

## சுழியில் சிக்கி உடைந்தது படகு

வடமராட்சி,டிசெ.5
வல்வெட்டித்துறையில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற இயந்திர வள்ளம் கடும் காற்றினால் அள்ளுண்டு சுழியில் சிக்குண்டு உடைந்து முற்றாகச் சேதமடைந்தது. அதில் சென்ற மூன்று மீனவர்களும் பலத்த சிரமத்துக்கு மத்தியில் காங்கேசன்துறையில் நீந்திக் கரை சேர்ந்தனர்.

ஆதிகோவிலடியில் இருந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை 6 மணியளவில் கிருஷ்ணன் சூரியகுமார் (வயது -32) என்பவருக்குச் சொந்தமான இயந்திரப் படகில், அவருடன் அருமைராசா அன்பழகன் (வயது - 26) ஆறுமுகம் வசந்தகுமார் (வயது -30) ஆகியோர் மீன்பிடிக்கச் சென்றனர்.

கடலில் கடுமையான காற்று காரணமாக இவர்கள் சென்ற படகு பலாலிக்கு நேராக உள்ள கடற்பரப்பில் உடைந்து சேதமடைந்தது.

படகில் இருந்த மூவரும் சிரமத்துக்கு மத்தியில் நீந்திய போது நீரோட்டம் காங்கேசன்துறை நோக்கிச் சென்றமையால் அங்கு கரை சேர்ந்தனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தினால் கரை ஒதுங்கிய மீனவர்களைக் காங்கேசன்துறைப் பொலிஸார் பொறுப்பேற்று சிகிச்சை அளித்து அனுப்பி வைத்தனர்.

உடைந்து சேதமடைந்த இயந்திரப்படகினதும் வலைகளினதும் மொத்தப் பெறுமதி 7 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

(த-8)


## பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீட்டில் திருட்டு

நெல்லியடி, டிசெ.5
வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீட்டில் கடந்த திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் வீட்டினுள் ஓடு பிரித்து இறங்கி பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நவிண்டிலைச் சேர்ந்த குறித்த பிரதிக் கல்விப் பணிப்பாளரும் அவரது கணவரும் பணிக்குச் செல்ல அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தியே திருடர்கள் வீட்டினுள் புகுந்து கணினி, கமரா, கைத்தொலைபேசி ஆகிய பொருள்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் கை, கால் அடை யாளங் களை பதிவு செய்துள்ளனர்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீட்டில் இதற்கு முன்னரும் 3 தடவைகள் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-35-8)



யாழ். குருநகர் பிரதேசத்தில் நுளம்பு ஒழிப்புக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு பெருமெடுப்பிலான சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. பிரதேச சுகாதார பொதுப் பரிசோதகர் ஜே.ராஜா தலைமையில் இடம்பெற்ற சிரமதானப் பணிகளில் ஓடக்கரை பிரதான வடிகால் மற்றும் சென்.றோக்.சனசமூக நிலையச் சுற்றாடல் என்பன சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன. (வ-17)

## போதையால் வந்த வினை

தென்மராட்சி, டிசெ.5
போக்குவரத்து விதிமுறைகளை மீறியதுடன், மது போதையிலும் வாகனம் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 16 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

குறித்த நபருக்கு எதிராக பொலிஸார் நீதிமன்றில் வழக் குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதால் அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையால் மூன்று வர்த்தகர் களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் ஏனைய இருவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## மீளக்குடி வந்தோருக்கு வீட்டு வசதிகள் இல்லை

### *மூன்று ஆண்டுகளாகத் தென்மராட்சியில் துன்பம்*

தென்மராட்சி, டிசெ.5
வன்னிப் பிரதேசத்திலிருந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள தமது சொந்த நிலங்களில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு மூன்று வருடங்களாகியும் தற்காலிக, நிரந்தர குடியிருப்பு வசதிகள் எதுவும் செய்து தரப்படவில்லை என்று அவர்கள் கவலை தெரிவித்தனர்.

பிரதேச செயலகத்தில் வீடமைப்புத்திட்டங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளென அவர்களின் பெயர்ப் பட்டியல் கிராம அலுவலர் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

வன்னியிலிருந்து தமது சொந்த இருப்பிடங்களுக்கு மீளக் குடியமர்ந்த மக்கள் தமது குடியிருப்புக்களை இழந்த நிலையில் உறவினர்களுடனும் வாடகை குடியிருப்புக்களிலும் மூன்று வருடங்களாகத் தங்கியுள்ளதாகவும் தெரிவித்த பாதிக்கப்பட்ட மக்கள் இது தொடர்பாக பிரதேச செயலகத்துக்கு அலைந்தபடியே இருப்பதாகவும் தெரிவித்தனர். (வ-9)

> “ ” மீளக்குடியமர்ந்த மக்கள் தமது குடியிருப்புக்களை இழந்த நிலையில் உறவினர்களுடனும் வாடகைக் குடியிருப்புக்களிலும் மூன்று வருடங்களாகத் தங்கியுள்ளனர்



வேலணை சாட்டி சுற்றுலாக் கடற்கரையில் இடம்பெற்ற மரக்கன்று நடும் நிகழ்வில் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் மரக்கன்று நடுகை செய்தார். அருகில் வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராசாவையும் காணலாம். (ஒ-7)

# O/L தேர்வு மண்டபங்கள் அறிவிப்பின்றி மாற்றம்

### *உரிய நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சருக்கு வலி. மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் கோரிக்கை*

வலி.தென்மேற்கு, டிசெ. 5
யாழ். மாவட்டத்தில் வலிகாமம் வலயத்தில் ஜி.சீ.ஈ. பரீட்சை மண்டபங்கள் முன்னறிவித்தலின்றி மாற்றுகின்றமை மாணவர்களின் பெறுபேறுகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் பெற்றோர் மத்தியில் மன உளைச்சலையும் உருவாக்கியுள்ளது.

எனவே, இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மாணவர்கள் தமது பாடசாலைகளிலேயே பரீட்சைஎழுதுவதற்கான சூழலை ஏற்படுத்தி உதவுமாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஜங் கரன் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனாவைக் கோரி யுள்ளார்.

யாழ். மாவட்ட கல்வி வலயத்திலுள்ள இரு பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சை மண்டபங்கள் இடம் மாற்றம் என்ற தலைப்பில் தவிசாளர் கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்ததாவது:-

மேற்படி விடயம் தொடர்பில் வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள இரு பிரபல தனியார் பாடசாலைகளான வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி ஆகிய இரண்டு பாடசாலைகளிலிருந்தும் இம்முறை தோற்றுகின்ற மாணவர்களை வேறு பாடசாலைகளின் பரீட்சை மண்டபங்களுக்கு மாற்றுகின்றமை தொடர்பில் பெற்றோர் என்னிடம் முறைப்பாடு செய்துள் ளனர்.

இவ்வாறான செயற்பாட்டால் தமது பிள்ளைகளுக்கு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

மிக நீண்ட காலமாக இந்தப் பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரீட்சை, ஜி.சீ.ஈ. சாதாரண தர, உயர் தரப் பரீட்சைகள் நடை பெற்று வந்துள்ளன. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பட்டப்படிப்பு பரீட் சைகள் கூட நடைபெறுகின்றன.

இதற்கு மேலாக குறித்த இரு பாடசாலைகளும் முழுமையான கல்வி வசதியை வினைத்திறமையுடன் வழங்கக் கூடிய தகைமையை கொண்டுள்ளமை யாவரும் அறிந்த உண்மை. இந்த விடயம் மட்டுமல்லாமல் தங்களது அமைச்சின் சுற்றறிக்கைகளுக்குஅமைய ஆசிரியர்களுக்கான செயலமர்வு, கருத்தரங்கு மற் றும் மாணவர்களுக்கான போட்டிகள் குறிப்பாக கோட்ட மட்ட, வலய மட்ட, மாவட்ட மட்ட போட்டிகள் கூட இங்கு நடைபெறுகின்றமை குறிப்பிடக் கூடிய விடயமாகும்.

> “ ” மாணவர்களின் பெறுபேறுகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் பெற்றோர் மத்தியில் மன உளைச் சலையும் உருவாக்கியுள்ளது.

இவ்வாறான புகழ்பூத்த இந் தப் பாடாசாலைகளில் இம் முறை ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சை மண்டபங்கள் மாற்றப்பட்டுள்ளமை என்பதுமிகுந்தவேதனையையும் அதிர்ச்சியையும் தந்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் குறிப்பாக துறைசார் அமைச்சர் என்ற வகையில் தாங்கள் நடவடிக்கை எடுக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களுக்கான பரீட்சை மண்டபம் வட்டு மத்திய கல்லூரியிலும் உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்களுக்கான பரீட்சை மண்டபம் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியிலும் மாற்றப்பட்டுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிமனையில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக எதுவித முன்னறிவித்தலும் இல்லாமல் பாடசாலை பரீட்சை மண்டபங்கள் மாற்றப்பட்டுள்ளமை மாணவர்களுக்கு மட்டுமல்ல பெற்றோருக் கும் மன உளைச்சலை ஏற் படுத்தியுள்ளது. இந்தச் செயற்பாடு மாணவர் களின் கல்வியில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்பதற்கு மேலாக என்னைப் பொறுத்தவரையில் இது ஓர் அடிப்படை மனித உரிமை மீறலாகவே கருதுகின்றேன் -என்றுள்ளது. (வ-115)

## லட்சம் ரூபா அபராதத்தை செலுத்தினார் கசிப்புக் காய்ச்சி

பளை, டிசெ.5
கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இயக்கச்சி வாசிக்கு கிளிநொச்சி நீதிமன்றில் ஒரு லட்சத்து 45 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், ஆறு மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

கடந்த முதலாம் திகதி இரவு இயக்கச்சி மாவிலங்கைப் பகுதி பற்றைக் காட்டில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக பொதுமக்கள் வழங்கிய இரகசியத் தகவலை அடுத்து பளைப் பொலிஸ் பரிசோதகர் சிவக்குமார் தலைமையிலான பொலிஸார் அந்த இடத்துக்குச் சென்று கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபரைக் கைது செய்ததுடன் உற்பத்திப் பொருள்களையும் கைப்பற்றினர்.

அவர் கொடுத்த தகவலின் பிரகாரம் 21 போத்தல் கசிப்புடன் மற்றொருவரையும் கைது செய்தனர். திங்கட்கிழமை இருவரையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து ஒரு லட்சத்து 45 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் ஆறு மாத கடூழியச் சிறைத் தண்டனை யும் விதித்தார். கசிப்பு வைத்திருந்த நபரை 25 ஆயிரம் ரூபா பிணையில் விடுவித்தார். (வ-9)

## விபத்தில் காயம்

வடமராட்சி, டிசெ.5
பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுக்கு குறுக்கே கட்டாக்காலி நாய் ஒன்று ஓடியதால் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது. இதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார். மந்திகை சிலையடிச் சந்தியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கற்கோவளத்தைச் சேர்ந்த ப.அசோக் (வயது 20) என்பவரே காயமடைந்தவராவார். (வ-8)

## நினைவலையில் 4 ஆம் வருடம்

அமரர்

### லயனல் திலகநாயகம் போல்

( சங்கீத பூஷணம், ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் )



தோற்றம்: 1941 * 07 * 06
மறைவு: 2009 * 12 * 05

அன்புருவே சொல்
ஆயிரம் சொந்தங்கள்
இகமதில் இணைந்தாலும்
ஈடாகுமா உமக்கு?
உலகில் பாசத்தின்
ஊற்றாக உமைக் கண்டோமே.
எமக்காய் உமைவருத்தி
ஏற்றங்கள் தந்தீரே
ஐயகோ உமை பிரிந்தும்
ஒரு நான்கு ஆண்டுகள்
ஓடிச் சென்றதுவோ?
ஔடதம் உண்டோ எம் துயருக்கு?

50, சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுகளுடன் குடும்பத்தினர்.

## போரழிவுக் கணக்கெடுப்பை வீடு வீடாக நடத்த வேண்டும்

### உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.5

உள்நாட்டுப் போரினால் உயிரிழந்த அல்லது காயமடைந்த நபர்கள் மற்றும் சொத்து அழிவுகள் தொடர்பான தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகளைக் கிராம அலுவலர்கள் வீடு வீடாகச் சென்றே முன்னெடுக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் தொகை மதிப்பு, புள்ளி விவரத் திணைக்களம் என்பன இணைந்தே இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் கடந்த நவம்பர் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கை எதிர்வரும் 20ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும்நல்லி ணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் குறிப்பிடப் பட்டதற்கு அமையவே இந்த கணக்கெடுப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளின் போது 1982 ஆம் ஆண்டிலிருந்து உள்நாட்டுப் போரினால் உயிரிழந்தவர்கள் அல்லது காயமடைந்த நபர்கள் மற்றும் சொத்து அழிவுகள் என்பன தொடர்பில் கணக் கெடுக்கப்படவுள்ளன.

(த-5)

## அந்தியேட்டி அழைப்பு



### குணசிங்கம் பரமேஸ்வரி

தேற்றம்: 08.02.1955
மறைவு: 06.11.2013

கடந்த 06.11.2013 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த அன்புத் தாயின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (06.12. 2013) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுக்கு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி, தொண்டமானாறு.

குடும்பத்தினர்.
077 6176340

## மரண அறிவித்தல்

### திருமதி இந்துராணி பொன்னையா



இடைக்காடு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்து ராணி பொன்னையா நேற்று (04.12.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குருநாதபிள்ளை , செங்கம்மா, மற்றும் ஒப்பிலாமணி (மிருசுவில்) ஆகியோரின் சகோதரியும், கதிர்காமநாதன், கமாலாம் பிகை, மீனாம்பிகை (நீர்வேலி) ஆகியோரின் தாயும், மகேஸ்வரி, அப்புத் துரை (நீர்வேலி), காலஞ்சென்ற நடராசா (கோப்பாய்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின்பூதவுடல் இன்று (05.12.2013) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
கோப்பாய்.

(32742-17-14)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



திருமதி கதிரவேலு சின்னப்பிள்ளை

எமது பணிமனையில் சமூக சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு.கதிரவேலு சிதம்பரநாதன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி கதிரவேலு சின்னப்பிள்ளை 04/12/2013 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு அவரது குடும் பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்கின்றோம்.

பிரதேச செயலரும், நலன்புரி
சங்க உறுப்பினர்களும்
பிரதேச செயலகம்,
ஊர்காவற்றுறை

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே

### தங்கவேல் ஜெயந்திரன் (கண்ணன்)



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேல் ஜெயந்திரன் (கண்ணன்) 03.12.2013) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்க வேல்-நீலாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும், நாகேந்திரன்-பிரேமாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், லதாவின் அன்புக் கணவரும், ஹரிஸ்கானின் அன்புத் தந்தையும், நாகநாதன், காலஞ்சென்ற (ரவி மோகன்), பரணிதரன், ஜெயதேவி ஆகியோரின் சகோதரரும், ரவீந்திரனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2013) வியாழக் கிழமை மாலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


R. நாகேந்திரன் 56, காரைக்காட்டு லேன், வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 3240497

## மரண அறிவித்தல்

### நவரத்தினம் நல்லதம்பி

(இளைப்பாறிய வருமானவரி மேற்பார்வையாளர், பிரதேச சபை, கிளிநொச்சி)



ஆலங்கேணி, பூநகரியைப் பிறப்பிடமாகவும் குமரபுரம், பரந்தனை வசிப்பிடமாகவும் பிரம்படி வீதி, கொக்குவிலில் தற்போது வசித்து வந்தவருமான நவரத் தினம் நல்லதம்பி (04/12/2013) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் தங்கம்மா தம்பதியரின் மகனும் சங்கரப்பிள்ளை நாகம்மா தம்பதியரின் மருமகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும்.பரமு (ஓய்வு பெற்ற தபாலதிபர்), கந்தையா ( ஆலங்கேணி), சிற்றம்பலம் (ஆலங்கேணி), வேலுப்பிள்ளை (ஸ்கந்தபுரம்), கோபாலசுந்தரம் ( ஆலங்கேணி) அருந்தவநாயகி ( ஆசிரியர், கிளி/இராமகிருஷ்ண வித்தியாலயம்) சிவபாதசுந்தரம் ( சுவீஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அற்புதமலர் (உரும்பிராய்) தெய்வேந்திரன் (லண்டன்) ஜெயந்தி (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், தற்போது யாழ்.மாநகர சபை) ரவீந்திரன் ( இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம, காங்கேசன்துறை) கருணகலா (சுவீஸ்), சுபிகலா ( ஆதார வைத்தியசாலை, வவுனியா)சுரேந்திரன் (குமரபுரம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற முத்துக்குமாரு மற்றும் சாந்தினி (லண்டன்), சபாரத்தினம் (கிராம சேவையாளர் J/80,J/82 வண்ணார்பண்ணை, பெரியகடை), கலாமதி (யாழ்.மாநகர சபை) சிவறூபன் (சுவீஸ்), ஜோறியூட்டியஸ் ( உரிமையாளர்) ,BLITZ FREEZE COMPANY மாதினி (சமுர்த்தி அலுவலகர், குமரபுரம், பரந்தன்) ஆகியோரின் மாமனாரும் கஜாகரன், ஐங்கரன், ரஜிகரன், பிரவீன், திலக்ஷன், துலக்ஷிகன், சங்கீர்த்தன், சாரங்கன், நிரோஷி, நிஷாலி, யுவானா, யனிஸ் அட்சயா ஆகியோரின் பேரனும் அப்ஷராவின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ( 06.12.2013) வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குனு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருமும் ஏற்றுக் கொள்ளவும்.

இல:- 36/1, பிரம்படி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
021 222 7759

## மரண அறிவித்தல்

### வேலன் சிவசாமி (தம்பிராசா)



அச்சுவேலி தெற்கை பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் சிவசாமி (தம்பிராசா) நேற்று புதன்கிழமை ( 04/12/2014) சிவபதம் அடைந்தார்.

அன்னார் வேலன் கற்பகம் தம்பதியரின் அன்பு மகனும் வேதநாயகி (கமலா) யின் பாசமிகு கணவனும் காயத்திரி ( ஆசிரியை மன்னார் சென் சேவியர் கல்லூரி) கஸ்தூரி (கொழும்பு) சித்தார்த்தன் ( கொழும்பு ஏ.சீ.சி.ஏ மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசரத்தினம் கனகம்மா, விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்ரனிதாஸ் ( ஆசிரியர் மன்னார் அல் அஸார் முஸ்லீம்) வித்தியாலயம்)றஞ்சித்குமார் ( அலயன்ஸ் காப்புறுதி) ஆகியோரின் அன்பு மாமனும். துரைசிங்கம் சிதம்பரப்பிள்ளை, மாணிக்கவாசகர் ஆகியோரின் சகலனும், பேபி, விமலாதேவி, ஜீன், சிவம், காந்திமலர் ஆகியோரின் மைத்துனருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2013) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவசக்தி கோயிலடி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (c/14274)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பார்வதி (சின்னமணி) மாணிக்கம்



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் தியேட்டர் லேன் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி (சின்னம்மா) மாணிக்கம் நேற்று (04.12.2013) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தி நாகமுத்து தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியும், காலஞ்சென்ற பாலன் மாணிக்கத்தின் அன்பு மனை வியும், காலஞ்சென்ற பாலன் பாறி தம்பதிகளின் அன்பு மருமக ளும், லலிதா (அமெரிக்கா), சாந்தினி (சுவிஸ்), சதீஸ்குமார், சுகந்தி (பிரான்ஸ்), புஸ்பராதா ஆகியோரின் அன்புத் தாயும்,கந்தசாமி (அமெரிக்கா), காலஞ்சென்ற செல்வரத்தினம் (சுவிஸ்), மோகனதாஸ் (பிரான்ஸ்), செல்வரத்தினம், சிறிரஞ்சிதமலர் ஆகியோரின் பாசமிகு மாமியும், அம்மினி, காலஞ்சென்ற சின்னத்துரை, சரஸ்வதி, கண்மணி, மகாலட்சுமி ஆகியோரின் சகோதரியும், சின்னத்தம்பி, சின்னம்மா, லஷ்சுமி, காலஞ்சென்றவர்களான வெள்ளையர், சுந்தரம், செல்வி, சண்முகம் ஆகியோரின் மைத்துனியும், வாணி (அமெரிக்கா), ஜோன் (அமெரிக்கா), அனுபா, யுனிஸ்பா, பிரி யங்கா, அனித்தாஸ், சாதனா, சர்மிளா, சானுகா, கஜானன், கஜீபன், சஞ்சீபன், திவ்வியா, கஜனன், கயூரன், காவியன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2013) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

தகவல்:
தியேட்டர் லேன், இணுவில் கிழக்கு, இணுவில் (சி12764-23-14)
குடும்பத்தினர்.



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் 61 ஆவது கல்லூரித் தினம் கடந்த செவ்வாய்க்கிழமை கொண்டாடப்பட்டது. புனித செபஸ்தியார் பேராலயத்தில் விசேட திருப்பலியுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் பழைய மாண வர்கள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவரும், வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனும் கலந்து கொண்டார். (வ-5-12)

## வளர்ச்சித்திட்ட முன்னேற்றத்துக்கு ஒன்று கூடல் நிகழ்வு உதவும்

*வடக்கு மாகாண மீன்பிடிப் போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு*

ஒன்றுகூடல்களினால் எமது பாடசாலையின் எதிர்கால வளர்ச்சித்திட்டங்களை திட்டமிட்டு நகர்த்திச் செல்லமுடியும் என்று வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியின் 61 ஆவது கல்லூரி தினம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை புனித செபஸ்தியார் பேராலயத்தில் விசேட திருப்பலியுடன் ஆரம்பமாகியது.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் பாடசாலை மைதானத்தில் பழைய மாணவர்கள், பாடசாலைஅதிபர், பகுதித்தலைவர்கள் ஆகியோருக்கான விசேட ஒன்றுகூடல் ஒன்று இடம் பெற்றது.

இதன் போது இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பழைய மாணவர்களுக்கிடையே இருக்கும் பழைய உறவுகளைபுதுப்பித்துக்கொள்ள முடியும் இவற்றினூடாக எமது மாவட்டத்தை கட்டியெழுப்ப முடியும் இவ்வாறு அனைத்து பாடசாலைகளும் செயற்படுவதன் மூலம் நல்லதொரு ஒற்றுமையை வளர்த்துக்கொள்ள முடியும்- என்றார். (எ-12)

# பெரு மழை காரணமாக இடம்பெயரும் நிலை

*வன்னியில் வீடுகளின்றி அந்தரிப்பு*

கிளிநொச்சி, டிசெ.5

தற்போது பெய்துவரும் பருவ மழை காரண மாக வன்னிப் பகுதியில் தற்காலிக குடிசைகளில் தங்கியுள்ள குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றன.

தற்காலிக வீடுகள் ஒழுக்கு காரணமாக வும்,வீடுகளுக்குள் மழை நீர் புகுந்து விடுவதாலும் மக்கள் இடம்பெயர வேண் டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

மக்கள் மீளக் குடியேற்றப்பட்டு நான்கு வருடங்கள் கழிகின்ற போதிலும் அவர்களுக்கான நிரந்தர வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படவில்லை. இதற்கு அரச அதிகாரிகள், அரசியல் வாதிகள் "இவர்களது காணிகளுக் கான அனுமதிப் பத்திரம் இல்லை. அதனால் தான் இன்னமும் வீட்டுத் திட்டம் இவர்களுக்கு வழங்கப்படவில்லை" எனத் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் பன்னாங்கண்டி, சாந்தபுரம், மலையாளபுரம், புதுமுறிப்பு, காந்தி கிராமம், வெட்டுக்காடு, பரந்தன், சிவபுரம், கோரக்கன் கட்டு, ஊரியான், முரசுமோட்டை, ஆனை விழுந்தான், கமறிக்குடா, புளியம்பொக்கணை, கண்டாவளை, உமையாள்புரம் போன்ற பல கிராமங்களில் மக்கள் தற் போதும் தற்காலிக கொட்டகை களிலேயே அவல வாழ்க்கை அனுபவித்து வருகின்றனர் என்பது குறிப்பிட்டத்தக்கது. (ஐ-426)

## சுத்திகரிப்பு தொழிலாளருக்கு நிரந்தர நியமனம் வேண்டும்

*வடமாகாண முதல்வரிடம் கோரிக்கை மனு*

வவுனியா,டிசெ.5


வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, வவுனியா நகர சபை ஆகியவற்றில் பணி யாற்றும் தற்காலிக சுத்திகரிப் புத் தொழிலாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு வட மாகாண முதல மைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிடம்கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்ட காலமாக தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப் படவில்லை. இந்த நிலையில் அண்மையில் வவுனியாவுக்கு வட மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் வருகை தந்த போது இந்தத் தொழிலாளர்கள் அவரை நேரடியாகச் சந்தித்து கலந்துரை யாடியுள்ளனர்.

இதேவேளை அரசினால் அண்மையில் வெளியிடப் பட்ட சுற்றறிக்கை ஒன்றின் பிரகாரம் இவர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக் கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இந்த நிபந்தனை விதிக்கப்படவில்லை. இதனால் தாம் நிரந்தர நியமனத்தைப் பெற முடியாத நிலை உரு வாகியிருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (க-402)

## முசலியின் இறக்கிவிடப்பட்ட 20 யானைகள்

*அச்சத்தில் நடுங்கும் மக்கள்*



மன்னார், டிசெ.5

மன்னார் மாவட்டம் முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அரிப்பை அண்டியுள்ள கோணியன்குளம் கிராமப் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் சுமார் 20இற்கும் மேற்பட்ட யானைகள் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் வேறிடத்திலிருந்து கொண்டு வந்து இறக்கி விடப்பட்டுள்ளதாக தெரிவித்த முசலிப் பிரதேச சபை உறுப்பினர் மார்க்கஸ் நீக்கிலஸ் பெனான்டோ இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனெமடுத்து யானைகளி டம் மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவ்வாறுயானைகள்கொண்டு வந்து இறக்கி விடப்பட்டமை தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் என்னிடமும் அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

யார் இந்த யானைகளைக் கொண்டு வந்தது என்ற விடயம் தெரியவில்லை. தற்போது குறித்த கோணி யன் குளம் பகுதியில் மக்களின் குடியேற்றம் இடம்பெற்றுள்ள நிலையில் புதிய வீடுகளும் அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

குறித்த பகுதியில் அந்த மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

க்டந்த காலங்களில் முசலியில் யானைகளின் தாக்குதல்களினால் பலர் உயிரிழந்துள்ளனர். அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்ட நடவடிக் கைகள் காரணமாக யானைகளின் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

இதனால் கடந்த பல மாதங்களாக யானையின் அச்சுறுத் தல்கள் அற்ற நிலையில் அந்த மக்கள் வாழ்ந்து வந்தனர். ஆனால் தற்போது மக்கள் அச் சத்தில் உள்ளனர். விவ சாய செய்கைகளையும் தற் போது யானைகள் சேதப் படுத்தி யுள்ளன.

இதனால் அந்தப் பகுதியில் குடியேறியுள்ள மக்கள், விவசாயம் செய்வோர் என அனைவரும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

எனவேஇந்தவிடயத்தில்உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களை யானைகளிடம் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். (வ-12)

### 7 கிலோ இறைச்சியை பொலிஸ் கைப்பற்றியது

வவுனியா கனகராயன் குளம் பெரிய குளப்பகுதி யில் சட்ட விரோதமாக வெட்டப்பட்ட 7 கிலோ கிராம்நிறையுள்ளஇறைச்சி கனகராயன் குளப் பொலிஸார்கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள் ளிக்கிழமை பெரிய குளப் பகுதி யில் இடம் பெற்றது. கைப்பற்றப்பட்ட இறைச்சி என்ன வகையான இறைச்சிஎன்பதை அறிவதற்காக ஆய்வுக்கு அனுப் பியதோடு இறைச்சியை நீதி மன்றில் ஒப்படைக்கவுள்ளதாக கனகராயன் குளப் பொலிஸார் மேலும்தெரிவித்துள்ளனர். (எ-422)

# இராணுவம் அமைத்த வீடு பயனாளியிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.5

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பகுதியில் போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைக் குடும்பம் ஒன்றுக்கு 5 இலட்சத்து ஆயிரம் ரூபா செலவில் இராணுவத்தினரால் நிர்மாணிக்கப் பட்ட வீடு கையளிக்கப் பட்டுள்ளது.

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பகுதியில், போரின்போது கணவனை இழந்த நிலையில் நான்கு பிள்ளைகளையும் தாயையும் கொண்ட குடும்பத்துக்கே இராணுவத்தினரால் அமைக் கப்பட்ட குறித்த வீடு கடந்த சனிக்கிழமை கையளிக்கப்பட்டது.

*"முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பகுதியில், போரின்போது கணவனை இழந்த நிலையில் நான்கு பிள்ளைகளையும் தாயையும் கொண்ட குடும்பத் துக்கே குறித்த வீடு கையளிக்கப்பட்டது."*

முல்லைத்தீவு மாவட்ட வள்ளிபுனம் கிராம மட்ட அமைப்பு பிரதிநிதிகளில் ஒருவரான ஐ.மாதவராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முல் லைத்தீவு மாவட்ட இராணுவத் தளபதி எல்.பி. ஆர். மார்க் கலந்து கொண்டு குறித்த வீட்டை உரிமையாளரிடம் கையளித்தார். தொடர்ந்து மற்றுமொருவருக்கு வீடு அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கொரியநாட்டு பிரதிநிதியான சொன்கிங் கொன், மாகாண சபை உறுப்பினர் வீ.கனகசுந்தரசுவாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-06)

**பெயர் மாற்றம்**

மட்டுவில் மத்தி சாவகச்சேரியைச் சேர்ந்த தனபாலசிங்கம் பபிதரன் ஆகிய நான் இன்றில் இருந்து சகல ஆவணங்களிலும் தனபாலசிங்கம் பவிதரன் என்று கையொப்பமிடுவேன் என அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(33027)(7.6) த. பவிதரன்

**கேள்வி கோரல்**

எமது சங்கத்தின் பாவனையில் உள்ள NP.MH-xxxx இலக்க - Splendor plus மோட்டார் சைக்கிளினை மூடிய விலை கோரல் முறையில் விற்பனை செய்யவுள்ளோம். இதனை வேலை நாள்களில் 9 மணி தொடக்கம் 4 மணி வரை சங்க தலைமை அலுவலகம், 155ஆம் கட்டை, உலக உணவுத்திட்டம் முன்பாக, A9 வீதி, கிளிநொச்சியில் பார்வையிடலாம். கோரல் அடங்கிய கடித உறையினை 23.12.2013ஆம் திகதிக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். தங்கள் கோரல் படிவங்கள் 23.12.2013ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு திறந்து விற்பனை உறுதி செய்யப்படும்.

கோ.கஜேந்திரசிங்கம் உபதலைவர்,
வடபிராந்திய
பாரவூர்தி உ.சுவ.சங்கம் (சி/14253) (7.6)

தொ.பே:
021 320 8346
021 228 3947

**Vacancies**

எமது நெல்லியடி பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Course Counselor - Female**

பாடநெறிகள் பற்றிய விளக்கங்களை மாணவர்களுக்கு அளிப்பதுடன் மாணவர் தொடர்பு அலுவலராக பணிபுரிய உயர்தரம் மற்றும் கணனி டிப்ளோமா கற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். கொழும்பு தலைமை காரியாலயத்தில் ஆரம்ப பயிற்சிகள் அளிக்கப்படும்.

**Lecturer for Computer Programming - Male / Female**

**Management Trainee - Male**

**Instructor for Tally & QB - Male / Female**

சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்

**ASIAN COMPUTER EDUCATION**

e-mail : asianedu@dialogsl.net

# இந்தியாவைச் சுற்றிலும் 140 ஆயுதக் கப்பல்கள்

## எச்சரிக்கின்றார் இந்தியக் கடற்படைத் தளபதி

புதுடில்லி, டிசெ.5

இந்தியக்கடற்பகுதிக்கு அண்மையாக சுமார் 140 ஆயுதக் கப்பல்கள் தரித்துள்ளன என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் இந்தியக் கடற்படைத் தளபதி டி.கே.ஜோஷி.

அவ்வாறான தனியார் ஆயுதக் கப்பல்களைப் பயன்படுத்தி தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் தாக்குதல் நடத்த முற்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கடற்படை தினத்தை முன்னிட்டு புதுடில்லியில் இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"இந்தியக் கடற்பகுதிக்கு அருகே 140 தனியார் ஆயுதக் கப்பல்கள் சுற்றி வருகின்றன. அந்தக் கப்பல்களில் நவீனரக ஆயுதங்கள், வெடிபொருள்கள் உள்ளன என்ற தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளது. அது இந்தியாவின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும்.



இந்தியக் கடற்படை தினத்தை முன்னிட்டு மும்பையின் அரபிக் கடற் பகுதியில் இந்தியக் கடற்படைக் கொமாண்டோக்களின் சாகச நிகழ்வுகள் நடைபெற்றன.

தனியாருக்குச் சொந்தமான அந்தக் கப்பல்களில் உள்ள ஆயுதங்களின் தொகை மற்றும் யாருக்காக அவை கொண்டு செல்லப்படுகின்றன என்ற தகவல்கள் எமக்குக் கிடைக்கவில்லை. எனினும் இந்தியக் கடற்படை எந்தவித அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளத் தேவையான வலிமையுடன் காணப்படுகின்றது" என்று தெரிவித்துள்ளார். (ற)

# மோடியைக் கொல்ல மனித வெடிகுண்டு

## இந்திய தேசிய புலனாய்வுத்துறை தகவல்

குஜராத் முதல்வரும் பாரதிய ஜனதாவின் பிரதமர் வேட்பாளருமான நரேந்திர மோடி மீது மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்த சிமி தீவிரவாதி கள் திட்டமிட்டிருந்தனர் என்று இந்திய தேசிய புலனாய்வுத் துறையினர் தெரிவித் துள்ளனர்.

பீகார் தலைநகர் பாட்னா வில் நரேந்திர மோடி உரை யாற்றிய மைதானம், பாட்னா ரயில் நிலையம் ஆகிய இடங் களில் குண்டுகள் வெடித்தன. அதில் 6 பேர் உயிரிழந்தனர். அந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் தேசிய புலனாய்வுத் துறையின[ர்] இருவரைக் கைதுசெய்தனர்.

அவர்கள் பொலிஸாரிடம் அளி[த்]துள்ள வாக்குமூலத்தில், "மோடி மீது மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட[ப்]பட்டிருந்தது. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற மோடி பேசு[ம்] பொதுக்கூட்ட மேடைகளின் அருகில் நின்று மனித வெடிகுண்டுகள் மோடியைக் கொல்லத்தக்க நேரத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்" என்று தெரிவித்துள்ளனர் என்று தேசிய புலனாய்வுத் துறையினர் தகவல் வெளியிட்டுள்ளனர். (ற)


# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts.

**FACULTY OF AGRICULTURE**

**Senior Professor/ Professor** in Agronomy / Agricultural Biology / Agricultural Chemistry/Agricultural Economics

**Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/Lecturer (Probationary)** in Agricultural Biology / Animal Science

**SPORTS SCIENCE UNIT**

**Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/Lecturer (Probationary)** in Sports Science

**PHYSICAL EDUCATION UNIT**

*Instructor (Male) in Physical Education Grade II

* Preference will be given who have competency in any two of the following Games: Badminton/ Baseball/ Chess/ Karate/ Rowing/ Rugby Foot ball/ Swimming/Taekwondo/ Tennis/ Wrestling

**Age Limit- Not more than 45 yrs**

| Post | Salary |
|---|---|
| Senior Professor | Rs.67100-11x1425-82775 p.m. |
| Professor | Rs.56505-13x1310-73535 p.m. |
| Senior Lecturer Grade I | Rs.45545-7x1050-52895 p.m. |
| Senior Lecturer Grade II | Rs.39755-11x790-48445 p.m. |
| Lecturer (Probationary) | Rs.27775-10x645-34225 p.m. |
| Instructor Grade II | Rs.24930-19x360-31770 p.m. |

**Note:** In addition to the above salary the following allowances will also be paid.

i. Academic allowance } other than Instructor Grade II
ii. Research allowance }
iii. Special allowance – 20% of the basic salary
iv. Cost of living allowance

**Statutory benefits**

i. Sabbatical leave entitlement for the post of Senior Lecturer Grade II and above.
ii. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
iii. Gratuity payments
iv. Employees' Trust Fund benefits
v. Free medical Services

**Closing date:**

Post of Senior Professor/ Professor – 28.02.2014
Other Posts - 31.12.2013

Applications and other required documents for the Post of Senior Professor/ Professor shall be sent to the Vice-Chancellor with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/ Academic Establishments.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post on a payment of Rs.100/- per application form at the People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with **a self -addressed stamped envelope** 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one post** should make **separate applications.**

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**Registrar**
2013-12-04

(கி/14258)
(10,6)



# தினமும் 10 லட்சம் கிலோமீற்றர் தூரம்: செவ்வாய்க்கு விரைகிறது மங்கள்யான்

புதுடில்லி, டிசெ.5

செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக இந்தியாவால் அனுப்பட்ட 'மங்கள்யான்' விண்கலம் தினமும் 10 லட்சம் கிலோமீற்றர் தூரம் பயணித்துக் கொண்டிருக்கின்றது என்று தகவல் வெளியிட்டுள்ளது இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் (இஸ்ரோ).

கடந்த மாதம் 5ஆம் திகதி ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து விண்ணுக்குச் செலுத்தப்பட்ட 'மங்கள்யான்' விண்கலம், இந்த மாதம் முதலாம் திகதி புவி சுற்றுவட்டப் பாதையில் இருந்து விடுவிக்கப்பட்டு செவ்வாய்க் கிரகத்தை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது.

இந்தநிலையில் மங்கள்யான் நேற்றுமுன்தினம் காலை நிலவு வட்டப் பாதையையும் தாண்டிப் பயணிக்கின்றது. விண்கலம் தினமும் 10 லட்சம் கிலோமீற்றர் தூரம் பயணிக்கின்றது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.



பெங்களூரில் உள்ள இஸ்ரோ தரைக்கட்டுப்பாட்டு மையம்

மங்கள்யானின் செயற்பாடுகள் பெங்களூரில் உள்ள இஸ்ரோ தரைக்கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ற)

## ஜனவரி மாதம் டி.எஸ்.எஸ்.வி. விண்கலம் விண்ணுக்கு

புதுடில்லி, டிசெ.5

தொழில்நுட்பக்கோளாறு காரணமாகத் தடைப்பட்டிருந்த ஜி.எஸ்.எஸ்.வி. டி - 5 ரொக்கெட் எதிர்வரும் ஜனவரி மாதம் விண்ணில் செலுத்தப்படும் என்று இஸ்ரோ அறிவித்துள்ளது. எனினும் அதற்கான திகதி குறிப்பிடப்படவில்லை.

குறித்த ரொக்கெட்டை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் விண்ணில் செலுத்தத் திட்டமிட்டிருந்தது. எனினும் இறுதி நேரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அந்த முயற்சி தடைப்பட்டது. (ற)

# அ.தி.மு.க. அரசு உடன் பதவி விலக வேண்டும்

## வலியுறுத்துகின்றார் விஜயகாந்த்

சென்னை, டிசெ.5

மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத அ.தி.மு.க. அரசு உடனடியாகப் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்.

தமிழகத்தில் தற்போது நிலவும் மின்வெட்டுத் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தற்போது மின்பற்றாக்குறை காணப்படுகின்றது. முன்னறிவிப்பின்றி மின்சாரம் நிறுத்தப்படுகின்றது.

அவற்றை நிவர்த்தி செய்வதற்கு எந்தவித நடவடிக்கையையும் எடுக்காத அ.தி.மு.க. அரசு ஏனைய கட்சிகள் மீது குற்றஞ்சாட்டி வருகின்றது. மக்களின் குறைகளைத் தீர்க்காத அ.தி.மு.க. அரசு உடனடியாகப் பதவியில் இருந்து விலக வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## சீனாவை உளவு பார்க்கும் அமெரிக்க விமானங்கள்



நியூயோர்க். டிசெ.5
சீனா அறிவித்துள்ள வான் பாதுகாப்பு மண்டம் காரணமாக அந்தப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை அடுத்து அமெரிக்காவின் நவீன உளவு விமானங்கள் அந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளன. சீனா அறிவித்துள்ள வான் பாதுகாப்பு மண்டல அறிவிப்புக்கு ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.
இந்தநிலையில் ஜப்பானுக்கு உதவும் பொருட்டு அமெரிக்காவின் இரு அதிநவீன உளவுவிமானங்கள் அனுப்பப்பட்டுள்ளன. (ற)



பெல்ஜியத்தின் தேசிய நெடுஞ்சாலை ஒன்றில் 130க்கும் அதிகமான வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. அதில் ஒருவர் உடல் நசுங்கி உயிரிழந்தார். பலர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 54 பேரின் உடல்நிலை மோசமாக உள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் தெரியவரவில்லை. இதேபகுதியில் 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற விபத்தில் 100க்கும் மேற்பட்ட வாகனங்கள் மோதிக் கொண்டதுடன் 10 பேர் உயிரிழந்திருந்தனர். (ற)


## 35 ஆண்டுகளின் பின்னர் பிறந்தது பெண் குழந்தை

*பிரெஞ்ச் தீவு மக்கள் பெரு மகிழ்ச்சி*

லண்டன், டிசெ.5
பிரெஞ்சு தீவில் 35 ஆண்டுகளுக்குப் பின்னர் பெண் குழந்தை ஒன்று பிறந்துள்ளதால் அந்தத் தீவு மக்கள் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். அட்லாண்டிக் பெருங்கடலில் அலி டீ செயின் என்ற பிரெஞ்சு தீவு ஒன்று உள்ளது. அந்தத் தீவில் 1978 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் தான் பெண் குழந்தை பிறந்துள்ளது. அதற்கு இங்கு வாழ்பவர்கள் வயதில் முதியவர்கள் என்பதும். அங்கு போதிய அளவு மருத்துவ வசதிகள் இல்லாததுமே காரணம் என தெரிவிக்கப்படுகிறது.
அந்தத் தீவின் மொத்த மக்கள் தொகை 215. அங்குள்ள ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் நடுநிலைப் பாடசாலைகளில் 7 மாணவர்களே கல்வி கற்கின்றனர். (ற)

## ‘பிளாஸ்டிக்’ அறுவை சிகிச்சைக்குத் தடை

*ஜேர்மனி அதிரடி முடிவு*



பெர்லின், டிசெ.5
ஜேர்மனியில் சிறுவர்கள் 'பிளாஸ்டிக்' அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளக் கூடாது என்று அந்த நாட்டு அரசு தடை விதித்துள்ளது.
ஜேர்மனில் 20 வயதிற்குட்பட்ட 10 சதவீதத் தினர் அழகிற்கும், நாகரிகத் திற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கத்தில் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சையை நாடு கின்றனர்.
இந்நிலையில் அந்த நாட்டில் 10,000 பேரிடம் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை குறித்து கருத்தாய்வு நடத்தப்பட்டது. அதில் 9 வயது முதல் 14 வயதுள்ள சிறுவர், சிறுமியர் தம்மை மேன்மேலும் அழகூட்டுவதற்காக 'லிபோசக்ஷன்' முக சீரமைப்பு, மூக்கின் நுனியழகு போன்றவற்றை அழகுபடுத்துவதற்காக மாற்று சீரமைப்பு போன்ற சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிய வந்துள்ளது.
இதுகுறித்து கிறிஸ்துவ ஜனநாயக சுகாதார தலைவர் ஜென்ஸ் ஸ்பேன் கூறுகையில்,
"இந்தச் சிகிச்சை சிறுவர்களின் உடலையும், மனதையும் பாதிக்கும் ஒன்றாகும். மருத்துவர்களால் இது அவசியம் என பரிந்துரைக்கப்பட்டால் மட்டுமே இந்தப் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சையை மேற்கொள்ள அனுமதிக்கப்படும். மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# காஷ்மீரால் மீண்டும் போர் ஏற்படக்கூடும்

## *எச்சரிக்கின்றார் பாக். பிரதமர்*



இஸ்லாமாபாத், டிசெ.5
காஷ்மீரை மையமாக வைத்து இந்தியா - பாகிஸ்தான் இடையே எந்த நேரத்திலும் போர் ஏற்படக்கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்.
பாகிஸ்தான் எல்லைக்குட்பட்ட காஷ்மீரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது,
"இந்தியா - பாகிஸ்தான் இடையேஎந்த நேரத்திலும் போர் மூளுவதற்கான தீப்பொறியாக காஷ்மீர் உள்ளது. இந்தப் பிரச்சினைக்கு அங்குள்ள மக்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு தீர்வு காண வேண்டும். இந்தியா ஆயுதப் போட்டியை ஏற்படுத்தி உள்ளது. அதற்கு ஈடாகப் பாகிஸ்தானும் அந்த ஓட்டத்தில் பங்கு கொள்ள வேண்டி உள்ளது.
காஷ்மீரை ஒரு சுதந்திர நாடாகப் பார்க்க வேண்டும். எனது வாழ்நாளுக்குள் அதனைப் பார்த்துவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது" என்று தெரிவித்துள்ளார்.
இந்தத் தகவல் பாகிஸ்தான் ஊடகங்களில் வெளியாகியுள்ளது. அதேவேளை, பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேற்குறித்த கருத்துக்கள் காணப்படவில்லை என்று கூறப்படுகின்றது. (ற)

## பாகிஸ்தான் அமெரிக்க உறவில் விரிசல்

நியூயோர்க், டிசெ.5
பாகிஸ்தான் ஊடாக ஆப்கனில் உள்ள தமது படையினருக்கான விநியோக மார்க்கத்தை இடைநிறுத்தியுள்ளது அமெரிக்கா.
அமெரிக்கா அண்மையில் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதல்களின்போது பாகிஸ்தான் பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டனர். அதனால் பாகிஸ்தானில் அமெரிக்காவுக்கு எதிராகக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.
இந்தநிலையில் பாகிஸ்தான் ஊடாக பொருள்களை ஏற்றியிறக்கும் அமெரிக்கா வாகன ஓட்டுநர்களுக்கு அச்சுறுத்தல் காணப்படுவதை அடுத்தே அந்த விநியோக மார்க்கத்தை இடைநிறுத்தியுள்ளது அமெரிக்கா. (ற)




## கனடாவின் நண்பன் இஸ்ரேல்

*-கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர்*

ரொறண்றோ, டிசெ.5
கனடாவின் நண்பன் இஸ்ரேல் என்று தெரிவித்துள்ளார் கனே டியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர். ஸ்டீபன் ஹார்ப்பர் அடுத் தாண்டு இஸ்ரேலுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள் ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சமூகத் தலைவர்கள் மற்றும் இஸ்ரேல் ஆதரவாளர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் பொருட்டு இடம்பெற்ற விருந்து நிகழ்வின் போதே இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார் ஹார்ப்பர். (ற)

**வீடு வாடகைக்குத் தேவை**

கச்சேரி, நல்லூர், ஸ்ரான்லிக் கல்லூரி, யாழ் நகரை அண்மித்த பகுதிகளில் உத்தியோகம் பார்க்கும் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.

(40830) (10.6) தொடர்பு: 077 135 7302

**நிரு ரீயூசன் சென்ரர் கோண்டாவில்**

**கல்வியாண்டு 2014**
தரம் 4 முதல் O/L வரை
ஆரம்பம்
**08.12.2013**
(40834) (10.6) (ஞாயிறு 7.00 மணி)

## மின்சார வசதி இன்றி வை.எம்.சி.ஏ. குடியேற்றத் திட்டம்

பளை, டிசெ.5

இயக்கச்சி வை.எம்.சி.ஏ. குடியேற்றத்திட்டத்துக்கு இன்னமும் மின்சார வசதி செய்து தரப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

விநாயகபுரம் என அழைக்கப்படும் இந்தக் கிராமத்துக்கு இதுவரை காலமும் மின்சாரம் வழங்கப்படவில்லையெனவும் கிராமத்தில் 35 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அயல் கிராமங்களுக்கு மின்சார விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் இந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளுக்கு பல தடவைகள் முறையிட்ட போதிலும் எந்தவொரு பயனும் கிடைக்கவில்லை யெனவும் தெரிவித்தனர்.

பளை பிரதேசத்தில் பெரும்பாலான கிராமங்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ள போதிலும் தமது கிராமத்தில் மின் விநியோகம் வழங்க எவரும் முன்வராதது குறித்து இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். (ரு-௨)

## கிராம அலுவலர் நியமனம்

வரணி, டிசெ. 5

வரணி கரம்பைக்குறிச்சி கிராம அலுவலராக இடைக்குறிச்சி கிராம அலுவலர் திருமதி எம்.தீபா தனது கடமைகளுடன் மேலதிகமாக அந்தப் பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பிரிவில் கடமையாற்றிய கிராம அலுவலர் வீ.வேல்முருகு சேவையில் இருந்து அண்மையில் இளைப்பாறியதைத் தொடர்ந்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(வ-122)

# சுமந்திரன் எம்.பியை புலியென கூறமுடியாது

### நாடாளுமன்றில் அரசு நற்சான்றுப்பத்திரம்

"தமிழ்க் கூட்டமைப்பில் உள்ள ஓர் உறுப்பினர், புலிகள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் - நல்லவர்கள் என்கிறார். ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் புலிகள் குரூரமானவர்கள் என்று கூறுவதுடன், அவர்கள் செய்த கொலைகளுக்கும் மன்னிப்புக் கோருகின்றார். எனவே, சுமந்திரனைப் புலி என்று கூறமுடி யாது."

இவ்வாறு ஆளுந்தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

புலிகளை வீரர்கள் என்று கூறுபவர்களும், அவர்கள் கொடூரமானவர்கள் என்று கூறுபவர்களும் எப்படி ஒரே கட்சியில் இருக்கமுடியும்? இப்படிப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின்வாலில்ஐ.தே.க ஏன்தொங்க வேண்டும் என்றும் அவர் கேள்விகளை எழுப்பினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற சட்டம் ஒழுங்கு மற்றும் பாது காப்பு, நகர அபிவிருத்தி அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது இராணுவத்தினரைப் போன்ற மனித நேயம் மிக்கவர்களை இரண் டாம் உலக யுத்தத்தில்கூடக் கண்டதில்லை. அப்படியானவர்கள்தான் தண்டிக்கப்படவேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள். இராணுவத் தளபதி யாக இருந்த சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கோரிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால்இராணுவத்தினர்மீதுஎவ்வாறு குற்றஞ்சாட்ட முடியும்? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெளிநாட்டுத் தலைவர்களைத் தவறாக வழிநடத்துகின்றனர். எமதுஇராணுவத்தை போர்க்குற்ற நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்கின்றனர். போரின் போது தம்மிடம் வந்த பொதுமக்களை மனித நேயம் மிக்க எமது இராணுவத்தினர் தமது தோள்களில் சுமந்து கொண்டு வந்தனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் கமரூனுடன் திரிந்தாலும் சரி, ஐரோப்பிய நாட்டுத் தலைவர்களுடன் திரிந் தாலும் சரி தீர்வை நாங்கள்தான் தர வேண்டும். - என்றார். (ச-சி)

# வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழுள்ள கிளிநொச்சி மாவட்ட பொது நூலகத்தின் பாடசாலை மாணவர்கள் மற்றும் நூலக வாசகர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களது பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலை மட்ட பொது அறிவு போட்டி முடிவுகள் வருமாறு:-

தரம் 6 முதலாம் இடம் - ச.வருணன்(கிளிநொச்சி மகா வித்தி.), இரண்டாமிடம் - யோ.பிரவிந்தன் (கிளிநொச்சி மகாவித்தி.), மூன்றாமிடம் - வி.பானுஜா (புனித திரேசா மகளிர் கல்லூரி)

தரம் 7 முதலாம் இடம் - ஜெ.லியான்சியா (கிளிநொச்சி மகா வித்தி.), ப.பதுமிதா (கிளி நொச்சி மகா வித்தி.), ப பரணிதரன் (திருவையாறு மகா வித்தி)

தரம் 8 முதலாம் இடம் - ஶ்ரீ. கௌதமன் (கிளிநொச்சி மகா வித்தி.), இரண்டாம் இடம் - ச.இசைவாணி (கிளி நொச்சி மகா வித்தி.), மூன்றாம் இடம் - ச.றிக்சன் (மத்திய கல்லூரி)

தரம் 9 முதலாம் இடம் - க.பானுஜன் (இந்துக் கல் லூரி), இரண்டாம் இடம் - சி.பவித்திரன் (கிளிநொச்சி மகா வித்தி .), மூன்றாமிடம் - அ.பிரியங்கா (இந்துக் கல்லூரி).

தரம் 10 முதலாம் இடம் - ரீ. டர்சிகன் (மத்திய கல்லூரி), இரண்டாம் இடம்- ந.டிலக்சன் (மத்திய கல்லூரி), மூன்றாம் இடம் - ச.கோவர்த்தன் (உருத்திரபுரம் மகா வித்தி.)

தரம் 12 முதலாம் இடம்- செ.கீர்த்திகா (திருவையாறு மகா வித்தி.), இரண்டாம் இடம்- கு.பார்த்தீபன் (கிளிநொச்சி மகா வித்தி.). மூன்றாம்இடம்-க.கௌரிசுதன் (கிளிநொச்சி மகா வித்தி .)

தரம் 13 முதலாம் இடம் - கு.வசந்தன் (கிளிநொச்சி மகா வித்தி.), இரண்டாம்இடம்-தி.குகாயினி (உருத்திரபுரம்மகாவித்தி.), மூன்றாம் இடம் - செ. சிந்துஜா (உருத்திரபுரம் மகா வித்தி.)

கட்டுரைப் போட்டி

முதலாம் பிரிவு

தரம் 6 முதலாம் இடம் - மோ. புகழினி (கிளிநொச்சி மகா வித்தி.), இரண்டாம் இடம் - ப. அகல்விழி(புனிததிரேசா மகளிர் கல்லூரி). இரண்டாம்இடம்-மமாதங்கி (கிளிநொச்சி மகா வித்தி.)

தரம் 7 முதலாம் இடம் -ம.யுகன் (கிளிநொச்சி மகா வித்தி.), இரண்டாம் இடம்-ஜெ. லியான்சியா (கிளிநொச்சி மகா வித்தி.). மூன்றாம்இடம்- ச. வைஸ்ணவி (கிளிநொச்சி மகா வித்தி.)

தரம் 8 முதலாம் இடம் - க.பிரவின் (மத்திய கல்லூரி), இரண்டாம் இடம் - ந.அபிராமி (திருவையாறு மகா வித்தி.).

மூன் றாம் இடம் - யோ. சதனிகா (உருத்திரபுரம்மகாவித்தி.)

இரண்டாம் பிரிவு

தரம் 9 முதலாம் இடம் - சி. பவித்திரன் (கிளிநொச்சி மகா வித்தி.), இரண்டாம் இடம் - சி.கஜானி (இந்துக் கல்லூரி) மூன்றாம் இடம்- ந. பிரசாஜினி விவேகானந்தா வித்தி.

தரம் 10 முதலாம் இடம் - தி.கீர்த்தனா (இந்துக் கல்லூரி) இரண்டாம்இடம்-இ.சங்கீர்த்தனா (உருத்திரபுரம் மகா வித்தி.), மூன்றாம் இடம் - இ.யாழரசி (இந்துக் கல்லூரி), ச. நர்த்தனா (கிளிநொச்சி மகா வித்தி.)

தரம் 11 முதலாம் இடம் - ந.விதுசன் (பாரதி வித்தி.)

மூன்றாம் பிரிவு தரம் 13 முதலாம் இடம் - க.ரிசாந்தினி (கிளிநொச்சி மகா வித்தி.), இரண்டாம்இடம்-அ.அனுசியா (புனித திரேசா மகளிர் கல்லூரி), மூன்றாம்இடம்-கு.பார்த் தீபன் (கிளிநொச்சி மகா வித்தி.)

சிறுகதைப் போட்டி முடிவுகள்

முதலாம்இடம்-யோ. அனுசியா (தொண்டமான்நகர்கிளிநொச்சி), இரண்டாம் இடம்-ம. அர்ச்சனா (கனகபுரம், கிளி நொச்சி), மூன்றாம் இடம்- ம.கேசன் (7 ஆம் வாய்க்கால் உருத்திரபுரம்). ம.அருள் யோன் சன் (சோலை நகர், புது முறிப்பு). (ஐ-426)

## முதல்வருக்கு வாழ்த்து

வடமராட்சி, டிசெ. 5

தங்களது தலைமையில் தமிழர்கள் இந்த நாட்டிலே தலை நிமிர்ந்து வாழ இறையருள் கிட்ட வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம் என பருத்தித்துறை, வியாபாரிமூலை, பழுவத்தை கிராம மக்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

"தாங்கள் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பதவியை அலங்கரிப்பதானது ஈழத்தமிழர்களின் வரப்பிரசாதமாகும். உறவுகளை, அவயவங்களை, இல்லிடங்களை, சொத்துக்களை இழந்து அல்லாடுகின்ற ஏதிலிகளை ஏற்றிக் கரைசேர்க்கும் கட்டு மரமாகத் தங்களைப் பார்க்கின்றோம்.

நாட்டைப் பிளவுபடுத்தாது உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் தமிழர்களும் சிங்களவர்களுக்குச் சமமாக வாழ வேண்டும் என்ற தங்களின் நீதியான கோரிக்கை நிறைவேற வேண்டும்" என அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ரு-8)

## பாடநூல், சீருடை விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ. 5

தீவகக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான இலவசப் பாடநூல்கள் மற்றும் சீருடை என்பன கிடைத்தமை தொடர்பாக அதிபர்கள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)


## பாராட்டி வாழ்த்து

திரு.திருமதி முகுந்தன் தம்பதியரின் செல்வப் புதல்வனும், யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய மாணவனுமாகிய செல்வன் சந்தோஷ் 2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 175 புள்ளிகளைப் பெற்ற (பா.ம.நி1) இவரை மனதார வாழ்த்துவதோடு, மேலும் பல சிறப்புக்கள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அம்மம்மா, தங்கைமார்.

தும்பளை




## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சி.சிவதாசன் (ஆசிரிய ஆலோசகர், J.P)



செ.பரணீதரன் (ஆசிரியர், J.P)

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சி.சிவதாசன், செ.பரணீதரன் ஆகிய இருவரும் 27.11.2013 புதன்கிழமை அன்று சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் சமாதான நீதிவான்களாகச் சத்தியப் பிரமாணம் செய்தமையை மனதார நேசிப்பதுடன் தங்களின் அர்ப்பணிப்பான சேவை சமூகத்திற்கு மேலும் கிடைக்க எமது வாழ்த்துக்கள்.

வாழ்த்துவோர்:

வே.சந்திரலிங்கம் (அதிபர்) குடும்பம், ச.சுரேஸ் குடும்பம்

பா.ஶ்ரீதரன் குடும்பம் (திருகோணமலை), சு.முல்லைமாறன் குடும்பம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை

எமது பாடசாலையில் 2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து புலமைப் பரிசில் பெறத்தகுதிபெற்ற மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவச் செல்வங்களை மனதார பாராட்டி வாழ்த்துவதோடு அவர்களை நெறிப்படுத்திய அதிபர் மற்றும் தரம் 1இல் இருந்து கல்வி புகட்டி வழிப்படுத்திய ஆசிரியர்களையும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.




2013ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெறும் மாணவர்கள்

செல்வி சி. பிரணவி 168, செல்வி க.டிலக்ஷனா 164

செல்வன் மு.நிதுஜன் 159, செல்வி சி.பவிதா 159

செல்வன் கு.ஆகாஷ் 156, செல்வன் ஶ்ரீ.கோகுலன் 156

செல்வி சி.லக்ஷனா 154, செல்வி ந.ஜதுர்ஷா 154

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜெ.அபிக்காந் | 152 | நா.லக்சனா | 125 | வி.மபிஷ்காந் | 109 |
| அ.கார்த்திகேயன் | 147 | உ.நிதர்சனா | 125 | தே.தேனு ராஜ் | 105 |
| பு.டிலக்ஷன் | 141 | செ.கபில்சன் | 122 | க.சுலக்ஷன் | 104 |
| சி.கயாளினி | 140 | ர.விதுர்சன் | 119 | ர.ரக்ஷனா | 104 |
| செ.துவாரகன் | 139 | கு.திருஷாந் | 118 | மோ.கிஷானி | 104 |
| சா.சிந்துசா | 133 | ம.கோல்ராமேரி | 118 | மு.இந்துயா | 101 |
| ம.மயூரதி | 130 | தே.ஜதுசியா | 117 | தே.பகிர்தா | 100 |
| சி.விஜயதர்சினி | 127 | ப.திருமகள் | 116 | ஆ.அபிரா | 100 |
| சி.கிதுஷனா | 126 | ச.பபிராஜ் | 109 | | |

பாடசாலைச் சமூகம்

அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை

(சி/14280)(7.6)

# பாத்தீனியம் ஒழிப்பு கோப்பாயில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 5


வடமாகாணத்தில் கோப்பாய் பிரதேசத்திலேயே அதிகளவிலான பாத்தீனியச் செடிகள் இனங் காணப்பட்டுள்ளன. அதற்கான ஒழிப்பு நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வடமாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

டிசெம்பர் மாதம் முழுவதும் பாத்தீனிய ஒழிப்பு மாதமாக வடமாகாண விவசாய அமைச்சு பிரகடனப்படுத்தயுள்ள நிலையில் அதற்கான ஒழிப்பு நடவடிக்கைகளை விவசாயிகளும் பொது மக்களும் மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் பாத்தீனியச் செடி பரவலடைந் திருப்பது கேப்பாய் பிரதேசத்தில் இனங் காணப் பட்ட நிலையில் அதனை அழிக்கும் நடவடிக்கைகளை மேற் கொண்ட போதும் அது வெற்றியளிக்கவில்லை. தற்போது பாத்தீனிய ஒழிப்பு மாதத்தில் மீண்டும் அதை அழிக்கும் நடவடிக்கைகளை விவசாய அமைச்சு மேற் கொண்டு வருகின்றது. டிசெம்பர் மாதம் முழு வதுமான காலப் பகுதி யில் பாத்தீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். கோப்பாய் தவிர்ந்த உடுவில், நல்லூர் பிர தேச செயலர் பிரிவுகளிலும் பாத்தீனியச் செடிகள் இனங் காணப்பட்டுள்ளன- என்றும் தெரி வித்தார். (வ-14)

> “ – ”
> கோப்பாய் தவிர்ந்த உடுவில். நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளிலும் பாத்தீனியச் செடிகள் இனங் காணப்பட்டுள்ளன



பளையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் பாதை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த மாத முற்பகுதியில் கிளிநொச்சியிருந்து பளை வரையிலான ரயில் பாதை அமைக்கும் பணிகள் முடிவடைந்திருந்தன. கடந்த முதலாம் திகதி தொடக்கம் சிலிப்பர் கொங்கிறீற்கட்டைகள் வைக்கப்பட்டு தண்டவாளங்கள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் வரையிலான ரயில் பாதை கற்கள் இட்டு செப்பனிடும் பணிகள் முடிவ டைந்துள்ளதால் இம்மாத இறுதிக்குள் பெரும்பாலான வேலைகள் பூர்த்தியடைந்து விடும் என நம்பப்படுகிறது. (வ-9)

# பழவத்தைக் காளியம்மன் ஆலயப் பாதைத் தடையை நீக்கவும்

## *போக்குவரத்தில் ஏற்படும் சிரமங்களைப் போக்குமாறு முதலமைச்சருக்கு கோரிக்கை*

வடமராட்சி, டிசெ.5

பருத்தித்துறை, வியாபாரி மூலை பழவத்தைக் கிராமத்தில் காளி அம்மன் ஆலயத்துக்குத் தென்புறமாகவுள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைத் தடையை பிரதேச சபை ஊடாக நீக்குமாறு வடக்கு மாகாண சபை முதலமைச்சருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பழவத்தை கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கையொப்பமிட்டு முதலமைச்சருக்கு கோரிக்கையை அனுப்பி வைத்துள்ளனர். அந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

பழவத்தைப் பகுதியில் கிளுவை மரத்தில் வீற்றிருந்த காளி அம்பாளுக்கு அடாத்தாகப் பிடித்த காணியில் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. அது குறித்து காணி உரிமையாளரால் நீதி மன்றில் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது.

இன்னொரு புறத்தில் பொது மக்களின் பாவனையில் உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான பிரதான பொதுப் பாதைக்கு கூரை போடப்பட்டு கோவிலாக்கப்பட்டுள்ளது.

அந்தப் பாதையை அபகரிக்கும் முன்முயற்சிகள் நடைபெற்ற காலத்தில் இருந்தே பல தடவைகள் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர், செயலாளர் ஆகியோருக்கு இந்தப் பாதைத் தடையை விலக்கி உதவுமாறு எம்மால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் பயன் அளிக்கவில்லை.

பாதையைத் தடை ஏற்படுத்தியவருக்கு எதிராக பருத்தித்துறை பிரதேச சபையால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் தொடுக்கப்பட்டது. எதிரியின் செல்வாக்கில் பணிந்து பிரதேசசபையினர் தொடுத்த வழக்கை வாபஸ் பெற்று விட்டனர். வழக்கை வாபஸ் பெறுவதற்கு வேறு நியாயமான காரணம் எதுவுமே இல்லை.

பாதைத் தடையால் வாகனங்கள் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. மோட்டார் சைக்கிளிலோ, சைக்கிளோ அல்லது கால்நடையாகவோ செல்வதிலும் பல இடையூறுகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. சாவுவீடுகளுக்குச் சென்று திரும்புகையிலும் மீன் முதலிய அசைவப் பொருள்களை வாங்கிவரும் போதும் கோயில் மண்ட பத்துக்கு ஊடாக வர இந்துக்களாகிய எம்மால் இயலவில்லை. முக்கியமாகப் பெண்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மாற்று வழியூடாக நீண்ட தூரம் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளோம்.

எனவே பருத்தித்துறை பிரதேசசபை ஊடாக குறித்த பாதைத் தடையை மிக விரைவில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் என்றவகையில் தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது. கோரிக்கையின் பிரதிகள் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (வ-8)

யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
ஆரம்பப் பிரிவு
Congratulations!
2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்



உதயகுமார் ஜெனிஸ்ரன் - 173
ராகவன் மாதுளன் - 172
கூரைதாஸ் கலையினியன் - 169
நந்தகுமார் கரீசன் - 168
ஜீவபாலன் பிரணவன் - 167
பாஸ்கரன் தருஜன் - 163
ஜெகதீசன் சாகித்தியன் - 162
ஞானசேகரன் தனஞ்சயன் - 161



அமிர்தலிங்கம் கௌசிங்கர் - 160
கோபிகிருஸ்ணானந்தன் சஞ்சய் - 160
செந்தன் வஜீகரன் - 159
தங்கவடிவேல் கௌசிகன் - 158
உதயகுமார் தர்மிகன் - 155
ராஜகுமார் கிருபாகரன் - 155
வசிங்கராஜா அபிசேக் - 154

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் - 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றோர்.

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யூ.நிகேஷ்பெல்ஜியன் | - 152 | த.நிலக்ஷன் | - 141 | சி.சஸ்ரான் | - 133 | ஸ்ரீ.அஸ்விநந் | - 129 | ச.அனுஸ்ரன் | - 121 | சு.டிலான் | - 112 | ப.பாஸ்கரன் | - 105 |
| சி.சியாமளன் | - 149 | நி.சிர்சோன் | - 141 | அ.பக்ஷான் | - 131 | த.அன்ரனி | - 126 | க.துசிகிருஸ்ணா | - 121 | வி. அரினாஸ் | - 110 | த.சதுஜன் | - 104 |
| ஜெ.டினோஜன் | - 147 | சி.சஜீவன் | - 139 | ப.கஜலக்ஷன் | - 130 | ஆ. அபிஷேக் | - 126 | த.வெற்றான்ரோய் | - 119 | அ.அஸ்ஷன் | - 109 | த.பிரியதர்சன் | - 103 |
| ர. டினுஜன் | - 147 | பு.கரிஷன் | - 139 | ஜீ. ஐதர்ஷன் | - 129 | நி. நிலோஜன் | - 124 | ந.ஜதுஷன் | - 118 | சி.லக்ஷரியன் | - 107 | ச.டிலக்ஷன் | - 102 |
| ஆ.வைந் | - 146 | ஜெ. விதுசன் | - 138 | இ.அபிஷ் | - 129 | கி.கரிஸ்ராஜ் | - 123 | தி.கௌதம் | - 115 | ர.விந்துஜன் | - 105 | ஜே. யுவராஜ் | - 102 |


எமது பிள்ளைகளின் சாதனைகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வழிப்படுத்திய கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர், உப அதிபர், ஆரம்பப்பிரிவு உதவி அதிபர், ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் யாவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்கள்
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவு

(சி.14244) (45.6.3)

# ஆக்கிரமிப்பை நிறுத்து

## திருக்கோவிலில் மீனவர்கள் நேற்று பெரும் கவனவீர்ப்புப் போராட்டம்



அம்பாறை.டிசெ.5
அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கோவில், விநாயபுரம் மீனவர்கள் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்றுப் புதன்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது மீனவ நடவடிக்கைகளுக்கும் படகுகளை நிறுத்தி வைப்பதற்கும் கடந்த பல வருடங்களுக்கு முன்பிருந்து இயங்கி வந்த விநாயபுரம், தாளையடி இறக்குதுறைப் பிரதேசத்தையும், பாதையையும் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த தனிநபர் ஒருவர் ஆக்கிரமித்துள்ளார் என்றும், அந்தப் பிரதேசத்தை அவர் முட் கம்பி வேலி அடைத்துள்ளதைக் கண்டித்தும், இது தொடர்பாக பிரதேச செயலருக்கும் திருக்கோவில் பொலிஸாருக்கும் தாம் அளித்த முறைப்பாட்டுக்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைக் கண்டித்துமே கவனவீர்ப்புப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் விநாயபுரம் 3 ஆம், 4 ஆம் கிராம சேவையாளர் பிரிவு கடற்றொழிலாளர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாக நடைபெற்றது.

போராட்டம் நடைபெறுவதை அறிந்து திருக்கோவில் பிரதேச சபைத் தவிசாளர் வி.புவிதராஜன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரும், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளருமான செல்லையா இராசையா ஆகியோர் குறித்த இடத்துக்கு வருகை தந்து மீனவர் பிரச்சினையைக் கேட்டறிந்தனர்.

இந்தப் போராட்டத்தின் இறுதியில் மீனவர் சங்கத் தலைவர் கனகசுந்தரம் கந்தசாமி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் டி.எஸ்.றோஹண பெரேரா மற்றும் தவிசாளர்களான புவிதராஜன் செல்லையா இராசையா ஆகியோரிடம் மனு வைக் கையளித்தனர்.



இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட மீனவர்கள் "கொடுத்த முறைப்பாட்டுக்கு எடுத்த நடவடிக்கை என்ன?, மீனவர்களின் வயிற்றில் அடிக்காதே, கரையோரப் பாதுகாப்புச் சட்டம் எங்கே?, கடல் பாதுகாப்புச் சட்டம் பணத்துக்கு விலை போவதா?" போன்ற பல வாசகங்கள் எழுதிய சுலோக அட்டைகளை ஏந்தி கோஷமிட்டனர். (ச-30)

## 'மகாபிமானி' சான்றிதழ்

மட்டக்களப்பு.டிசெ.5
கிழக்கு மாகாணமட்ட தேசிய நிர்மாணத்துறை தொழில்சார் வல்லுநர்களுக்கான 'மகாபிமானி' சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மாளிகைக்காடு பிஸ்மில்லாஹ் உணவகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண நிர்மாணத்துறை சம்மேளன உப தலைவர் ஏ.எல்.முஹம்மட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பிரதம பொறியியலாளர் யு.எல்.ஏ.நஸார், கல்முனை பிராந்திய கட்டட நிர்மாண நிறைவேற்றுப் பொறியியலாளர் ஏ.எம்.ஸஹீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேசிய ரீதியில் கட்டட ஒப்பந்தக்காரர்களின் மாநாடு இன்று வியாழக்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தென் கிழக்கு பல்கலையின் விஞ்ஞான ஆய்வரங்கு

தென் கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் இரண்டாவது வருடாந்த விஞ்ஞான ஆய்வரங்கு செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.எம்.இஸ்மாயில் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் 36 ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நீரில் மூழ்கி மீனவர் உயிரிழப்பு



மட்டக்களப்பு.டிசெ.5
வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேத்தாழை ஆற்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

பேத்தாழை மாரியம்மன் கோயில் வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான தாமோதரம்பிள்ளை அற்புதன் (வயது-43) என்பவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

பேத்தாழை, துறையடியில் செவ்வாய்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மூன்று பேருடன் ஆற்றில் இறங்கி மீன் பிடித்துக் கொண்டிருந்த போதே அவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த நான்கு நாள்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்து வரும் மழையினால் ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நான்காவது நாளாகவும் மட்டக்களப்பில் அடைமழை

### தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்



மட்டக்களப்பு.டிசெ.5
மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்காவது நாளாக தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழையால் காத்தான்குடி பிரதேசத்திலும் அதனை அண்டியுள்ள பிர தேசங்களிலும் பல வீதிகள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளன.

கடும் மழையுடன் காற்றும் வீசி வருவதால் கடற் கொந்தளிப்பும் காணப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடி, காத்தான்குடி, புதிய காத்தான்குடி, ஏத்துக்கால், பாலமுனை, கிரான், கல்லாறு, பெரியகல்லாறு, துறை நீலா வணை, களுவாஞ்சிக்குடி, பட்டிப்பளை, வவுணதீவு ஒள்ளிக்குளம், மண்முனை, சிகரம், புல்லுமலை, ஏறாவூர், ஓட்ட மாவடி, வாழைச்சேனை, நாவலடி, வாகரை உட்பட பல பகுதிகளில் இடைவிடாது மழை பெய்து வருவதால் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக பெய்துவரும் அடை மழையால் ஆறு, கடல், குளம் மற்றும் கிணறு, நீர்நிலைகள் அனைத்தின் நீர் மட்டங்களும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஒடும் ரயிலில் ஏறிய இளைஞன் சில்லினுள் அகப்பட்டுச் சாவு

ஏறாவூர்.டிசெ.5
இளைஞன் ஒருவன் ஓடும் ரயிலில் பாய்ந்து ஏறியபோது ரயிலில் சிக்கி உயிரிழந்த சம்பவம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

ஏறாவூர், ஐயன்கேணியைச் சேர்ந்த கலந்தர் தாவுத் அஸீஸ் (வயது-17)என்ற நபரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார். (ச)

**அரியாலை முதியோர் இல்ல அனுமதிக்கான விண்ணப்பம் கோரல்**

இல.272, ஆனந்தன் வடலி வீதி, அரியாலையில் அமைந்துள்ள முதியோர் இல்லத்துக்கு அனுமதிகள் கோரப்படுகின்றன. யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆதரவற்ற 60 வயதுக்கு மேற்பட்ட ஆண் முதியவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பப்படிவங்களை மேற்கூறிய முகவரியில் அமைந்துள்ள முதியோர் இல்லத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை நேரிலோ/தபால் மூலமோ 11.12.2013 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

**LOLC**

மாபெரும் வாகனச்சந்தை கிளிநொச்சியில்

LANKA ORIX FINANCE

LOLC மைக்ரோ கிரெடிட்

உங்களுக்கு உகந்த வகையில் உபயோகிக்கப்பட்ட அநேகவிதமான மோட்டார்சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், உழவு இயந்திரங்கள் டிமோபட்டா உள்ளடங்கலாக 50 வாகனங்கள், அவ்விடத்திலேயே கொள்வனவு செய்யக்கூடியதொரு அரிய சந்தர்ப்பம்.

2013 டிசெம்பர் மாதம் 09ம் திகதியிலிருந்து 2013 டிசெம்பர் மாதம் 20ம் திகதி வரை.

A-9 ,கண்டி வீதி,கரடிப்போக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள வாகன தரிப்பிடத்தில்

தொடர்புகளுக்கு
மயூரன் - 0776 50 68 39
சந்திமா - 0665 11 80 80

(C/14128)

**மு/கோம்பாவில் விக்கினேஸ்வர வித்தியாலய புலமைப் பரிசில் பாராட்டு விழா 2013**



2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களாகிய
து.புருசோத்மன் 177, அ.டோமினிசா 170,
மு.கீர்த்தனன் 160, இ.நிருத்திகா 158,
க.பிரசாந்த் 157, ஆகியோரையும்
70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும், பாராட்டி வாழ்த்துவதுடன், இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களான *திருமதி இ.கருணாகரன், திருமதி மே.அருளானந்தம்* ஆகியோரையும் பாராட்டி

வாழ்த்துபவர்கள்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம். (சி/14264)(7.6)

**தென்னம்பிள்ளை விற்பனைக்குண்டு**

எம்மிடம் நல்லினத் தென்னம் நாற்றுக்களும் குறைந்த காலத்தில் பயன்தரக் கூடிய ஏனைய நல்லின நாற்றுக்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 659 2044 (33029) (7.6)

# வடக்கில் இராணுவத்தை குறைத்து சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துக!

## தமிழர் மனங்களை வெல்ல இதுவே வழி - பிரபா எம்.பி



வடமாகாணத்தில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்து அங்கு சிவில் நிர்வாகத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமே தமிழ் மக்களின் மனங்களை வெற்றிகொள்ள முடியுமென நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரபா கணேசன் மேற்கண்டவாறு கூறியுள் ளார்.

மேலும் அவர் தனதுரையின் போது குறிப்பிட்டவை வருமாறு:-

கொழும்பு மாநகரத்தில் பல அடிமட்ட வர்க்கத்தினர் வாழும் தோட்டப்புறங்கள் உள்ளன. குறிப்பாக வட கொழும்பு, கொலன்னாவ, பொரளை, கொழும்பு கிழக்கு போன்ற தேர்தல் தொகுதிகளிலேயே இவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இதில் பெரும்பான்மையாக சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களே வாழ்கின்றார்கள். நகரத்தை அழகுபடுத்தும் பொழுது இவர்களது வீடுகள் அகற்றப்பட்டு மாற்று இடங்கள் வழங்க வேண்டி உள்ளது. ஆனால் இவர்கள் கடந்த காலங்களில் அரசுக்கு வாக்களித்தவர்கள் அல்ல.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஐம்பதாயிரம் வீட்டுத் தொகுதிகளைக் கட்டிக் கொடுப்பதற்கான பொறுப்பை நகர அபிவிருத்தி சபைக்கு வரவு செலவு திட்டத்தின் மூலம் ஜனாதிபதி வழங்கியுள்ளார். நகர அபிவிருத்தி சபையின் மூலமாக மட்டுமே தகுதி வாய்ந்த வீடுகளைக் கட்டி முடிக்க முடியும் என்பதை கொழும்பு தெமட்டகொட பகுதியில் கையளிக்கப்பட்ட 500 வீட்டுத் தொகுதிகளை நேரடியாகப் பார்த்து நான் தெரிந்து கொண்டேன்.

இருப்பினும் மத்திய மாகாணசபை தேர்தலின் போது தோட்டத்தொழிலாளர்களுக்கு 7 பேர்சஸ் காணியில் வீடமைத்துக் கொடுக்கப்படும் என்ற ஜனாதிபதியின் உறுதி மொழி சரிவர நிறைவேற்றப் படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால் தொடர் மாடி வீடுகளை ஒரு போதும் மலையகத்தில் கட்டுவதற்கு எம்மால் அனுமதிக்க முடியாது.

வட மாகாணத்திலிருக்கும் இராணுவ பிரசன்னத்தைக் குறைக்க வேண்டும். மீண்டும் ஒரு பயங்கரவாதம் தலைதூக்குவதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை என்ற நிலையில் வட மாகாணத்துக்கான சிவில் அதிகாரங்களை முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். இதன் மூலமாகத் தான் நாம் வடமாகாண மக்கள் மனதிலே இடம் பிடித்துக் கொள்ள முடியும். தமது இடங்களை மீண்டும் பெற்றுக் கொள்ளும் பொழுது தான் வடமாகாண மக்கள் முழுமையாக திருப்தி யடைவார்கள்.

வடமாகாண ஆளுநர் விவகாரத்திலும் கூட அவர் இது வரை செய்த சேவையினை நான் பாராட்டுகின்றேன். இருப்பினும் வட மாகாண மக்கள் முதலமைச் சரைத் தெரிவு செய்த பின்பு இராணுவம் சாராத வடமாகாண ஆளுநரை தெரிவு செய்வதன் மூல மாகவே எதிர் கட்சியினரும் சர்வதேசத்தினரிடமும் விமர்சனங்களை இல்லாதொழிக்க முடியும் என்று நான் நினைக்கின்றேன்.

விடுதலைப் புலிகளின் போராளிகளுக்கு இன்று புனர் வாழ்வு அளித்து அவர்களை மக்களோடு மக்களாக வாழ வழி செய்த பாதுகாப்பு அமைச்சுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்ளும் அதேவேளை இன்று சிறைச்சாலைகளில் விசாரணை யின்றி வாடும்ள தமிழ் கைதிகளையும் விடுதலை செய்தோ அல்லது புனர்வாழ்வளித்தோ இப்பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும். இதன் மூலமாக எதிர் கட்சிகளின் விமர்சனத்திற்கு மட்டுமல்ல சர்வதேசத்தின் விமர்சனத்திலிருந்தும் நாம் தப்ப முடியும். இதையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கவனத்திற் கொண்டு செயல் படுவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

எதிர் காலத்தில் இந்த அரசின் மூலமாகத்தான் எமது தமிழ் மக்களுக்கான தீர்வினைத் பெற்றுக் கொள்ள முடியும் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன் - என்றார்.

## நாட்டில் மரணக் கோடாக மாறும் வறுமைக்கோடு

நாட்டின் வறுமைக் கோடு இன்று மரணக் கோடாக மாறி வருகிறது. நடுத்தர வர்க்கத்தினர் அனை வரும் வறுமைக் கோட்டின் கீழ்தான் இருக்கின்றனர். எண்ணங்களாலும், எதிர் பார்ப்புகளாலும் மட்டுமே அவர் கள் நடுத்தர வர்க்கத்தின ராக இருக்கின்றனர் என ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெரான் விக்கி ரமரட்ண தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம் பெற்ற பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய போது மேற் கண்டவாறு தெரி வித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் பொருளாதார ரீதி யில் பெரும் பாதிப்புக்கு உள் ளாகி வருகின்றனர். நாட்டின் பொருளாதாரத் துக்கு அமைய தனிநபர் ஒருவர் வாழ்வதற்கு நாளாந்தம் 155 ரூபா போதுமென்கின்றனர். இப்படிக் கூறுபவர்கள் இலங்கையில் அல்ல, கனவு உலகத்தில் தான் வாழ்கின்றனர். சாதாரண நபர் ஒரு வருக்கு நாளொன்றுக்கு 3 டொலருக்கு அதிகமாகவும், மாதமொன்றுக்கு 95 டொலர் களுக்கு அதிகமாகவும் வருமானம் தேவைப்படுகிறது. ஆனால், நாட்டின் சனத்தொகையில் 23 சதவீதமானோர் நாளொன் றுக்கு 260 ரூபாவுக்கும் குறைவாகவே வருமானத்தை ஈட்டுகின்னர்- என்றார்.

## கொழும்பு தேசிய வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையில் சுகாதார சீர்கேடு

### *முகாமையாளருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம்*

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் இயங்கும் சிற்றுண்டிச் சாலையை அசுத்தமாக வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்ட அச்சிற் றுண்டிச் சாலையின் முகா மையாளருக்கு மாளிகா கந்தை நீதிவான் திருமதி நதீரா போகஹாதெனிய ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

கொழும்பு மாநகரசபையின் பொதுசன சுகாதாரப் பரீட்சகர்களும் ஆகாரப் பரீட்சகர்களும் இணைந்து மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனையின்போது இந்த சிற்றுண்டிச்சாலை யின் சமையலறையும், கழிவு நீர்க்கான்களும் மிகவும் அசுத்தமாகவும் சுகாதாரத்துக்கு அச்சுறுத் தலாகவும் இருந்தமை கண்டுபிடிக்கப் பட்டது. அதனையடுத்து சிற்றுண் டிச் சாலையின் முகாமையா ளருக்கு எதிராக இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

கொழும்பு மாநகரசபை யின் ஆகாரப் பரீட்சகர் லால்குமார மாநகரசபை யின் சார்பில் நீதிமன்றத் தில் முன்னிலையாகியிருந்தார்.

## மனித உரிமை பற்றிய விவாதத்தை நிராகரித்தார் இலங்கைத் தூதுவர்



இலங்கையின் மனித உரிமை கள் நிலை குறித்து நடத்தப்பட்ட குழு விவாதத்தில் பங்கெடுக்க விடுக்கப் பட்ட அழைப்பை பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் கிறிஸ் நொனிஸ் நிரா கரித்து விட்டார்.

புறொன்ட்லைன் கிளப்பில் நடந்த இந்த குழு நிலை விவா தத்தில், இலங்கையின் முடிவு றாப் போர் ஆவணப் படத்தின் தயாரிப்பாளர் பிரான்செஸ் ஹரிசன், இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப்படங்களின் தயா ரிப்பாளர் கெலும் மக்ரே, சித்திரவதையில் இருந்து விடுதலை அமைப்பின் கொள்கை மற்றும் ஆலோசனை முகாமையாளர் சோனியா ஸ்கீறஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்து வெளியிட்ட கெலும் மக்ரே,

"இலங்கை அரசு மேற்கொள்ளும் எந்த விசாரணைகளிலும் நம்பகத்தன்மை இல்லை. இலங்கைக்கு விசா ரணை ஆணைக்குழுக்களை நிய மிக்கும் நீண்ட முடிவற்ற வரலாறு உள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் நடக்கவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வுக்கு முன்னதாக இன்னும் பல ஆணைக்குழுக்களை நாம் பார்க்க முடியுமென நினைக் கிறேன்.

துரதிர்ஷ்டவசமாக தென்னாபிரிக் காவின் உதவியுடன் போலியான தொரு உண்மை நல்லிணக்க ஆணைக்குழு அமைக் கப்படும் என நினைக்கிறேன். கடந்த காலங்களில் அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார் கள் என் பதன் அடிப்படையில், எந்த விசாரணையும் போலியானதாக இருக்கும் என்று உத்தரவாதம் அளிக்க முடியும்" என்று தெரிவித்துள் ளார்.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்றது குறித்து கருத்து வெளி யிட்ட கெலும் மக்ரே, "இப்போது நாம் அழுத்தங்களைத் தொடர வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

(சி)

இதோ!
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல்,சளி,இளைப்பு மற்றும் நுரையீரல்,சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஒளஷதம்
சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை இருமல் பாணி
யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும்,கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567
(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அண்மையில்)
(சி/13577)(7.6.3)

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை ஐம்பது சதவீதத்தால் குறைந்துள்ளது

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2013 ஆம் ஆண்டில் நாடெங்கும் டெங்கு நோயால் பீடிக்கப் பட்டவர்களின் எண் ணிக்கை 50 சதவீதத்தால் குறைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள் ளது.

இது தொடர்பில் சுகா தார அமைச்சு வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:-

2012ஆம் ஆண்டு நாடெங்கும் 48 ஆயிரம் டெங்கு நோயாளிகள் இனம்காணப் பட்டனர். அவர்களுள் 170பேர் உயிரிழந்தனர். 2013 ஆம் ஆண்டில் நாடெங் கும் இனங்காணப்பட்ட டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை 28ஆயிரத்து 255. உயிரிழந்தவர்க ளின் தொகை 75. இதன் பிரகாரம் 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 இல் டெங்கால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் அரைவாசியாகக் குறைந் துள்ளமை திருப்திப் பட வேண்டிய விடயம்.

அதேசமயம், இலங் கையில் டெங்குநோய் வைரஸ்களில் பல்வேறு மாற்றங்கள் உருவாகி வருவதாக சந்தேகம் எழுந் துள் ளது.

இந்த மாற்றத் தைப்பற்றி அறிந்துகொள் ளவும் அதற்கான நடவடிக் கைகளை மேற் கொள்ளவும் தினசரி 300 டெங்கு நோயாளர்களின் இரத்த மாதிரி கள் தீவிர பரிசோதனைக்கு உட்ப டுத்தப்பட்டு வருகின்றன - என்றுள்ளது.

(சி)

## ஐ.ம.சு.மு. ஆளுகைக்குட்பட்ட வத்தளை பட்ஜட்டும் தோல்வி

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆளுகைக் குட்பட்ட வத்தளை பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நேற்று மூன்று மேலதிக வாக்கு களினால் தோல்வியடைந்துள்ளது. வரவு - செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக 8 வாக்குகளும் எதிராக 11 வாக்குகளும் கிடைத்தன. இதற்கு எதிராக ஆளும் கட்சியைச் சேர்ந்த உப தலைவர் உள்ளிட்ட மூவர் வாக்களித் துள்ளனர்.

After O/L or A/L கணினி டிப்ளோமா கற்கை நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma in Information Technology DiTec
Diploma in Office Automation DOA
Diploma in Desktop Publishing DTP
Adv. Dip. in Hardware & Networking ADHN
Dip. in Video Production & Multimedia DVPM
Dip.in Web Designing & Development DWD
Dip. in Computerized Accounting DCA
Tally, JAVA, PHP, VB.net, Maya
☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.
DMI COMPUTER EDUCATION
IELTS Book 9
(Duration: 50 hrs with 5 mock exams)
Latest training materials.
Skills development in all four categories.
Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
Depend on individual needs, the student can access other English Modules FREELY.

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, Tel. : 021-227 0775
சுன்னாகம் No.130, K.K.S. வீதி, (NSB வங்கி அருகில்) Tel. : 021-224 1970

சமையலாளர் தேவை
கரந்தன் பகுதியில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றுக்கு சமையல் வேலை செய்வதற்கு பணியாளர் தேவையாக உள்ளது. தங்கி நின்று பணியாற்றக் கூடிய கணவன் மனைவியாக இருப்பது விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 021 321 6449
தொடர்பு கொள்ள வேண்டிய நேரம்:
காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் டாக்டர் பெயானியின் வருகை

"பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்றவ வானினும்
நனி சிறந்தனவே" என்று பாடினார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

வலி.வடக்கில் மட்டுமன்றி வடக்கு, கிழக்கில் தாம் பிறந்து வளர்ந்த மண்ணில் இருந்து போரின் காரணமாக வெளியேறி–அல்லது வெளியேற்றப் பட்டு அங்குமிங்குமாக அலைந்து கொண்டும் இடைத்தங்கல் நிலையங்களில் இருந்து காலத்தைக் கடத்திக் கொண்டும் மீளவும் தம் சொந்த மண்ணுக்குத் திரும்புவதற்கு ஏங்கிக் கொண்டிருக்கும் மக்கள், பிறந்த பொன் நாடு என்பதை பிறந்த பொன் மண்ணும் என்று மாற்றிப் பாடிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லத் தோன்றுகின்றது.

வலி.வடக்கில் கோணப்புலம் நலன்புரி நிலையத்தில் ஐ. நா. சிறப்பு அறிக்கையாளர் டாக்டர் சலோகா பெயானியிடம் இதைத்தான் இடித்துக் கூறியிருக்கிறார்கள் அவர்கள். இடம்பெயர்ந்து தம் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் இருக்கும் அனைத்து மக்களது குரலாகவும் இது ஒலித்துள்ளது.

"எங்களுக்கு வேறு இடம் வேண்டாம். சொந்த மண்ணில் தான் எங்களைக் குடியமர்த்த வேண்டும்" என்று அவர்கள் மன்றாடி இருக்கிறார்கள்.

சில தினங்களுக்கு முன் வடக்கு, கிழக்குக்கு பயணம் மேற்கொண்ட ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் டாக்டர் சலோகா பெயானி வடக்கில் மாகாண ஆளுநரும், ஓய்வுநிலை படை அதிகாரியுமான மேஜர் ஜெனரல் சந்திரசிறி, அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகிய அரச தரப்பு பிரதிநிதிகளையும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிவில் சமூகத்தினர் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் ஒரு பகுதியினரையும் சந்தித்து உரையாடி இருக்கிறார்.

டாக்டர் பெயானி வருகை தந்ததின் நோக்கம் போருக்குப் பின் இங்கு ஏற்பட்டுள்ள மாற்றங்கள், இனிமேலும் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகளை பலரிடமும் கேட்டு தெரிந்துகொள்வது மட்டுமன்றி சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று மக்களின் அவல நிலைகளை அறிந்து கொள்வதுமாக இருந்துள்ளது.

பெயானி போருக்குப் பின்னரான விடயங்கள் தொடர்பாக ஆராய்வதில் நிபுணர் என்பதால் ஒரே இடத்தில் அமர்ந்து மக்கள் பிரதிநிதிகளை விசாரிக்கும் நடைமுறையைக் கைவிட்டு பெய்து கொண்டிருந்த மழையையும், சேறு மற்றும் நடைபாதை இடையூறுகளை பொருட்படுத்தாமலும் மக்களின் இருப்பிடங்களை போய்ப் பார்த்துள்ளார். அதேபோல் இங்கே இராணுவம் நிலைகொண்டு செய்து வரும் காரியங்கள் குறித்து சகல தரப்பினரது வாய் மொழிகளை கேட்டறிந்ததுடன், வலி.வடக்கில் இராணுவம் செய்து கொண்டிருக்கும் 'பணி' களையும் நேரில் பார்த்திருப்பார் என்று நம்ப வேண்டும்.

டாக்டர் பெயானி தமது ஆய்வுகளின் பின்னர் வெளியிட்ட கருத்தில் வலி.வடக்கு மக்கள் அவர்களின் சொந்த இடங்களுக்குத் திரும்ப வேண்டும், அவர்களின் இழப்புகளுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருப்பதாக செய்தி வந்திருக்கிறது.

எதுவானாலும் டாக்டர் பெயானி தாம் நேரில் நடத்திய ஆய்வுகள்–அவை தொடர்பான தமது கருத்துக்களை பூர்வாங்க அறிக்கை ஒன்றின் மூலம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தாக்கல் செய்வார் என்று தெரிகிறது. பின்னர் விரிவான அறிக்கை ஒன்றும் அந்தச் சபையில் அவரால் தாக்கல் செய்யப்படும்.

வரும் மார்ச்சில் ஜெனிவாவில் ஆரம்பமாக இருக்கும் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பிக்க இருக்கும் விரிவான அறிக்கையில் டாக்டர் பெயானியின் ஆய்வு விவரம் மற்றும் அதுபற்றிய அவரது கருத்துக்களும் இடம் பெறும் என்று எதிர்பார்க்கலாம்.

# பிழைத்துக் கொள்ளுமா வட மாகாண சபை ?

ராஜராஜன்

**முதலமைச்சர் மற்றும் அமைச்சர் களுக்கான செயலாளர்களை ஆளுநர் தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு நியமித்துள்ளார். செயலாளர் பதவிகளில் நியமிக்கப்படுபவர்கள் முதலில் நம்பிக்கைக்கு உரியவர்களாக விளங்க வேண்டும். தமக்கு மேல் உள்ளவர்களுக்கு விசுவாசம் காட்டுபவர்களாகவும் இருத் தல் வேண்டும். இதனால் முதலமைச் சர்களோ அல்லது அமைச்சர்களோ தமது நம்பிக்கைக்குரியவர்களை அந் தப் பதவியில் அமர்த்துவதற்கே விரும்புவார்கள்.**

வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பாக நிலவிய சந்தேகங்கள் நிஜமாக மாறி வருவதை அங்கு இடம் பெறும் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

வடபகுதி மக்கள் எத்தனையோ இடையூறுகளுக்கு மத்தியில் மாகாண சபைக்கான உறுப்பினர்களை தமது வாக்குப் பிரயோகத்தின் மூலமாகத் தெரிவு செய்துள்ளனர். வாழ்வா, சாவா என்றதொரு நிலைகூட மக்களுக்கு இருந்தது. இந்த நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைத் தேர்தலில் இமாலய வெற்றி பெற்று மக்களுக்கு நம்பிக்கை ஒளியை வழங்கியது. முற்றிலும் தகுதியான ஒருவர் முதலமைச்சர் கதிரையில் அமர்த்தப்பட்டார். அமைச்சர்கள் தெரிவும் இவ்வாறே இடம்பெற்றது. கூட்டணிக் கட்சியினர்களுக்கிடையில் சிறு சிறு அபிப்பிராய பேதங்கள் நிலவிய போதிலும் ஒற்றுமை குலைந்து விடவில்லை. கூட்டமைப்பு நிலைத்து நீடித்து வருகின்றது.

மக்களும் பெருத்த எதிர்பார்ப்புக்களுடன் மாகாண சபையின் செயற்பாடுகளுக்காகக் காத்திருக்கும் இந்த வேளையில் கசப்பான தகவல்களே அவர்களை எட்டியுள்ளன.

### திட்டமிட்ட புறக்கணிப்பு

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இதற்குப் பிள்ளையார் சுழி போட்டு வைத்துள்ளது. இந்தக் கூட்டத்தில் வட மாகாணத்தின் முதலமைச்சருக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை. கூட்டத்தின் இணைத் தலைமைப் பதவி அவருக்கு உரியது என்ற போதிலும் அதுகூட அவரை எட்டவில்லை. திட்டமிடப்பட்ட வகையில் அவர் புறம் தள்ளப்பட்டுள்ளார். அரசின் விசுவாசிகளான உயர் அதிகாரிகள் சிலரும் இதற்கு உடந்தையாகச் செயற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இந்த நிலையில் ஆஸ்திரேலியா செல்வாரென எதிர்பார்க்கப்பட்ட ஆளுநர் தமது அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கு ஆரம்பித்துவிட்டார். மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையின் முதலமைச்சருடன் கலந்துரையாடாது அவரது செயலாளரை ஆளுநர் தன்னிச்சையாக நியமித்துள்ளார். இவ்வாறே அமைச்சர்களுக்கான செயலாளர் நியமனங்களும் இடம்பெற்றுள்ளன. மேலும் இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை ஆகியவற்றை ஆளுநரே தம்வசம் கொண்டிருப்பதால் வடமாகாண சபையில் பணி புரிபவர்கள் மாகாண சபை நிர்வாகத்தை மதிக்க வேண்டிய தேவையில்லாததோடு ஆளுநரின் உத்தரவுகளுக்குள் கீழ்ப் படிந்தாலே போதுமென்ற மனோபாவத்துக்கும் உள்ளாக்கப்பட்டு விடுவார்கள். மேலும் ஆளுநர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளுவார் என்ற துணிவில் தவறுகள் செய்வதற்குத் தயங்க மாட்டார்கள். இதையெல்லாம் கைகட்டிக் கொண்டு பார்த்திருக்க வேண்டிய நிலை முதலமைச்சருக்கும், அமைச்சர்களுக்கும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலை நீடிக்குமானால் மக்களால் இந்த மாகாண சபை தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய அவசியமே இல்லையென்றுதான் கூற வேண்டும். ஏனென்றால் பெயரளவில் மட்டுமே மாகாண சபை இருப்பதில் எவருக்கும் பயன் ஏற்படப்போவதில்லை.

### ஆளுநரின் செயற்பாட்டால் மக்கள் அதிருப்தி

தற்போது வடபகுதி மக்களின் எதிர்பார்ப்புக்களில் விரிசல் ஏற்பட ஆரம்பித்துள்ளது என்றுதான் கூற வேண்டும். ஏனென்றால் இங்கு இடம்பெறும் சம்பவங்கள் அவர்களின் மனங்களில் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. ஏற்கெனவே ஆளுநரின் நடவடிக்கைகளால் அதிருப்திக்குள்ளாகியிருந்த மக்கள் மாகாண சபை அமைக்கப்பட்டதும் அவர் இங்கிருந்து அகன்று விடுவார் என்றே நம்பியிருந்தனர். ஆனால் அவர் எங்கும் செல்லாமல் வழக்கம் போலவே தமது நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதைக் காண முடிகின்றது.

முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கான செயலாளர்களை ஆளுநர் தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு நியமித்துள்ளார். செயலாளர் பதவிகளில் நியமிக்கப்படுபவர்கள் முதலில் நம்பிக்கைக்கு உரியவர்களாக விளங்க வேண்டும். தமக்கு மேல் உள்ளவர்களுக்கு விசுவாசம் காட்டுபவர்களாகவும் இருத்தல் வேண்டும். இதனால் முதலமைச்சர்களோ அல்லது அமைச்சர்களோ தமது நம்பிக்கைக்குரியவர்களை அந்தப் பதவியில் அமர்த்துவதற்கே விரும்புவார்கள். இதனால்தான் ஆளுநர் இவர்களுடன் கலந்தாலோசித்த பின்னர் இந்த நியமனங்களை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் இங்கு எதுவுமே கடைப்பிடிக்கப்படவில்லை. இதனால் பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன.

### குவிந்து கிடக்கும் அதிகாரங்கள்

மேலும் ஆளுநரே முன்னரைப் போன்று அதிகாரங்கள் யாவற்றையும் தம்மிடம் குவித்து வைத்துக் கொண்டிருக்கும் நிலையில் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள மாகாண சபையொன்று தேவைதானா என்ற கேள்வியும் கூடவே எழுகின்றது.

வடமாகாண சபையின் ஆளுநர் தொடர்பாக மக்கள் நன்கறிவார்கள். அரசின் நம்பிக்கைக்கு உரித்தான அவர் தெற்கிலிருந்து பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை கனகச்சிதமாக நிறைவேற்றி வைப்பதில் வல்லவர். இங்கு கட்டளைத் தளபதியாக அவர் பணியாற்றியபோது இதனையே அவர் மேற்கொண்டிருந்தார். ஆகவே இதனையே அவர் தொடர்ந்து மேற்கொள்வார் என்பதில் சந்தேகமே தேவையில்லை.

### ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை

வழக்கம் போல வடமாகாண சபைக்கு போதிய ஒத்துழைப்பு வழங்கப்படுமென தெற்கிலிருந்து உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கு நடப்பதோ வேறு. வலிகாமம் வடக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந் திருந்த இந்து ஆலயங்களும் முக்கியமான பாடசாலையொன்றும் இடித்துத் தரைமட்டமாக்கப்படுவதாக வெளி வந்த செய்திகளை அறிந்த முதலமைச்சர் அங்கு விரைந்தார். ஆனால் அவர் குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்ல முடியாது இடைநடுவில் இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்பட்டார். ஒரு மாகாணத்தின் முதலமைச்சருக்கு இதைவிட வேறு அவமானம் என்ன வேண்டும்? தமிழர்களாகப் பிறந்துவிட்டால் இவற்றையெல்லாம் சகித்துக் கொள்ள வேண்டுமென்ற நியதி உள்ளதை இந்தச் சம்பவம் துல்லாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது.

### ஆளும் வர்க்கத்தின் விரும்பாத குழந்தை

ஒரு ஜனநாயக நாட்டில் மக்களின் உரிமைகளுக்குத்தான் முதலிடம் வழங்கப்பட வேண்டும். ஜனநாயகம் என்ற சொல் இதனைத்தான் எடுத்துக் கூறுகின்றது. ஆனால் எமது நாட்டில் எல்லாமே தலைகீழாகக் காணப்படுகின்றது. மக்களின் விருப்பங்கள் துச்சமாக மதிக்கப்படுகின்றன. மாவீரர் தினங்களில் இவையெல்லாம் இங்கு தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மாகாண சபையால் எதையாவது பெரிதாகச் சாதிக்க முடியுமா என்ற கேள்வியும் மெல்ல மெல்ல எழ ஆரம்பித்துள்ளது.

இந்த மாகாண சபை என்பது இந்த நாட்டின் ஆளும் வர்க்கத்தின் விரும்பாத ஒரு குழந்தை என்றே கூறவேண்டும். இதன் பிறப்பை அப்போது தமிழர் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் ராஜீவ்–ஜே.ஆர். ஒப்பந்தம் இதனைத் திணித்தது. இப்போது மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது அனைத்துத் தரப்பினரும் தவிப்பதைக் காண முடிகின்றது. ஆனால் இந்தத் தவிப்பு தமிழ் மக்களிடையேதான் அதிகளவில் காணப்படுகின்றது. தென்பகுதி மக்களுக்கு மத்திய அரசு உள்ளது. மாகாண சபை அரசு என்பது அவர்களால் ஒரு பொருட்டாகக் கொள்ளப்படுவதில்லை. இரண்டாம் தர அரசியல்வாதிகளின் புகலிடமாகவே அங்கு மாகாண சபைகள் காணப்படுகின்றன. ஆனால் தமிழ் மக்கள் அவ்வாறு எண்ணவில்லை. கடலில் மூழ்கியவன் ஒரு சிறு துரும்பைக் கண்டாலும் பற்றிப் பிடிப்பது போன்று தொடர்ந்து துன்பங்களையே எதிர்கொண்ட தமிழ் மக்கள் மாகாண சபை மூலமாகவேனும் தமது துயரங்கள் தீர்க்கப்படுமா என்ற நம்பிக்கையில் உள்ளனர். கிழக்குத் தமிழர்கள் ஏமாற்றப்பட்ட நிலையில் வடபகுதி மக்கள் துணிச்சலான நடவடிக்கை மூலமாகத் தமக்கென மாகாண சபையொன்றை அமைத்துள்ளனர். தமிழர் ஆட்சி இதுதான் என இறுமாப்பும் கொண்டுள்ளனர். இந்த நிலையில் சபை இயங்க முடியாது முடங்கிக் கிடப்பதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியுமா என்பது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. வடமாகாண சபையின் மூலமாக தமிழ மக்களின் பழைய காயங்கள் ஆற்றப்பட்டு அவர்களுக்கென நிம்மதியானதொரு வாழ்வு அமைய வேண்டும். இதற்கு முழு அளவில் மாகாண சபை இயங்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இது நடக்காது போய்விடுமாயின் மாகாண சபையை மறந்துவிடும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டு விடுவார்கள் என்பதே யதார்த்தமாகும்.

# பாதீனியத்தை ஒழிப்போம்

②

மனி தன் உலகைச் சுற்ற ஆரம்பித்ததிலி ருந்து இது தறிகெட்ட வேகத்தில் நிகழ்ந்து வருகிறது. உயிரினங்கள் அவை பரிணமித்த இயற்கை வாழி டங்களிலிருந்து பிடுங்கப்பட்டு அவை தேவைப்படாத புதிய சூழலுக்குள் விடப்படுகின்றன.



பாதீனிய ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது

பாதீனியம் (parthenium hysterophorus) மூக்குத்திப் பூண்டு. சீதேவியார் செங்கழுநீர், செவ்வந்தி போன்ற தாவரங்களின் குடும்பத்தைச் (asteraceae) சேர்ந்த ஒரு செடி. ஒன்றரை மீற்றர் உயரத்துக்கும் மேலாக வளரக்கூடிய இலைகள் மிருதுவான மயிர்களால் மூடப்பட்டு, ஆழமான சோனைகளாக பிளவுண்டிருக்கும் வெண்ணிறமான பூக்கள் சிறிய மூக்குத்திகள் போலச் செடி பூராவும் நிறைந்திருக்கும். ஈழத்தில் சமீபத்தில் நுழைந்த அந்நிய இனம் என்பதால், பொது மக்கள் இலகுவில் விளங்கிக் கொள்வதற்கு ஏற்ற தமிழ்ப் பெயர் இதற்கு இல்லை. விஞ்ஞான பெயராலேயே அழைக்கப்படுகிறது. இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பரவியதால் கம்யூனிஸ்டுக்கள் இதனை 'காங்கிரஸ் களை' என்று அழைத்தார்கள். பதிலுக்கு, எதற்கும் உதவாத இதற்கு 'கம்யூனிஸ்ட் களை' என்பது தான் பொருத்தமாக இருக்கும் என்று காங்கிரஸ் காரர்கள் அழைக்க இரண்டு பெயர்களுமே நிலைத்து விட்டன. ஆனால் இந்த அந்நியக் களையை வெறுமனே 'களை' என்று சொல்வது அதன் பராக்கிரமங்களைக் குறைத்து மதிப்பது போலாகிவிடும். களைகளுக்கெல்லாம் தலைவனான அரக்கக் களை இது.

## மிளகாயும், வெங்காயமும் அந்நியப் பயிர்களே

உலக நாடுகளை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் சூழற் பிரச்சினைகளில் அதிகம் ஆபத்துத் தருகின்ற ஒன்றாக அந்நிய இனங்களின் ஊடுருவல் உள்ளது. உயிரினங்களின் புலப்பெயர்வு புவி வரலாற்றுக் காலம் முதலே நிகழ்ந்து வருகின்ற ஒன்றுதான். ஆனால், மனிதன் உலகைச் சுற்ற ஆரம்பித்ததிலிருந்து இது தறிகெட்ட வேகத்தில் நிகழ்ந்து வருகிறது. உயிரினங்கள் அவை பரிணமித்த இயற்கை வாழிடங்களிலிருந்து பிடுங்கப்பட்டு அவை தேவைப்படாத புதிய சூழலுக்குள் விடப்படுகின்றன. குறிப்பாக, ஐரோப்பிய வெள்ளையர்கள் வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா கண்டங்களில் குடியேறியபோது தங்களுடன் ஏராளமான தாவர, விலங்கு இனங்களையும் எடுத்துச் சென்றார்கள். இன்று எமது சமையலில் இரண்டறக் கலந்துவிட்ட பச்சை மிளகாய் தென் அமெரிக்க நாடுகளிலிருந்தும் வெங்காயம் பெர்ஷியா எனப்படும் தற்கால ஈரானில் இருந்தும் இறக்குமதியான இனங்கள் தான். ஆனால் மிகுந்த அவதானத்துடன் தேர்வு செய்யப்படாத அந்நியங்கள். எல்லாமே உள்ளூரின் உயிர் பல்வகைமைக்கும் (bio diversity) பொருளாதாரத்துக்கும் நாசம் தருவனவாகவே உள்ளன. அமெரிக்கவின் புளோரிடா மாநிலத்தில் அவர்கள் அழைத்து வந்த செடி, கொடி இனங்களை கட்டுப்படுத்துவதற்கென்றே ஆண்டுதோறும் 50 மில்லியன் டொலர் செலவழித்து வருகிறார்கள். ஆஸ்திரேலியாவின் மேற்கு மாநிலத்தில் கரும்புத் தவளைகளை எதிர்கொள்வதற்கு இராணுவமே அழைக்கப்பட்டுள்ளது. ஒரு பதச் சோறாக ஆஸ்திரேலியாவைப் பாடாய்ப் படுத்தி வரும் கரும்புத் தவளைகளைப் பற்றி விளங்கிக் கொண்டாலே பாதீனியத்தின் நாசகாரித்தனத்தை சுலபத்தில் புரிந்து கொள்ள முடியும்.

## கரும்புத் தவளைகளின் ஆக்கிரமிப்பு

கரும்புத்தவளை இனம் (Bufo marinus) தென் அமெரிக்க மற்றும் மத்திய அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தது. அரை அடி நீளத்துக்கும், நான்கு இறாத்தல் எடைக்கும் மேலாகக் கொழுத்து வளரக்கூடிய இராட்சதத் தவளை இனம் இது. தவளை இனங்களில் பகாசுரன் என்பதால் கரும்புகளைத் தாக்கும் வண்டுகளை அழிப்பதற்காக 1935 இல் குயின்ஸ்லாந்துக்கு எடுத்து வந்தார்கள். பொதுவாகத் தவளை இனங்கள் எல்லாமே இரைகளின் மேல், அவற்றின் அங்க அசைவுகளை அடையாளம் கண்டே தங்களுடைய பசை நாக்கை வீசுகின்றன. ஆனால் கரும்புத் தவளைகள் வாசனையின் மூலமும் இரைகளைக் கண்டறியும் வல்லமை பெற்றவை. இதனால், அசையும் அசைவ இரைகள், அசையாத சைவ உணவுகள் என்று அனைத்தும் உண்ணிகளாக (Carnivores) வாய்க்குள் அடங்கக் கூடிய எல்லாவற்றையுமே விழுங்கிப் பெருக்கின்றன. நாய்களுக்கு சமைத்துப் போடும் உணவுகளைக்கூட இவை விடுவதில்லை. உணவு ஒரு பிரச்சினையாக இல்லாதபோது சந்ததிப் பெருக்கத்துக்கு ஏது தடை? தண்ணீரைக் கண்ட போதெல்லாம் இவை கலவிக்குத் தயாராகின்றன. பெண் தவளை ஒரு தடவையில் 36,000 முட்டைகள் வரையில் இடுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இவற்றுக்கெல்லாம் மேலாக, கரும்புத் தவளைகளுக்கு ஆஸ்திரேலியாவின் இயற்கை எதிரிகள் என்று எதுவுமே இல்லை. இவை பரிணமித்த பூர்வீக நாடுகளில் இவற்றுக்கு இரையைத் தந்த இயற்கை, இவற்றை இரையாக்கவும் உயிரினங்களைப் படைத்து எண்ணிக்கையை எப்போதுமே ஒரு சமநிலையில் பேணிவருகிறது. இயற்கையின் கணக்கு இது. ஆனால் வலுக்கட்டாயமாகப் புகுத்தப்பட்ட புதிய சூழலில் இரைகளைத் தவிர இரைகௌவிகள் இல்லாததால் கரும்புத் தவளைகள் கற்பனைக்கும் எட்டாத எண்ணிக்கையில் பெருகி வருகின்றன. தாய் நிலமான தென் அமெரிக்காவில் 100 சதுர மீற்றர் பரப்பளவில் 20 தவளைகள் தென்பட, குயின்ஸ்லாந்திலோ அதே அளவு பரப்பில் 2,000 தவளைகள் வரையில் விளைந்து போய் உள்ளன. இதிலிருந்து புகுந்த இடத்தில் புதிய இனங்களில் விஸ்வரூபத்தை புரிந்துகொள்ள முடியும்.

## தலைக்குள் விஷம்

கரும்புத் தவளைகள் படையெடுக்கும் இடமெல்லாம் உயிர்ச் சூழலுக்கு கெடு காலம் தான். குண்டோதரர்களாக அளவுக்கணக்கின்றி பூச்சி புழுக்களை விழுங்கி வருவதால், இயற்கை தன்னுடைய சமநிலை கருதி மில்லியன் கணக்கான ஆண்டுகளாகப் பேணி வந்த பூச்சிகள் எல்லாம் திடீரென அழியத் தலைப்பட்டுள்ளன. இவற்றின் குறைவு அனைத்தும் உண்ணிகளான இந்த வந்தேறு குடிகளைப் பாதிக்கப் போவதில்லை. ஆனால் இந்த இரைகளை மட்டுமே நம்பி வாழுகின்ற உள்ளூர்த் தவளை, தேரை இனங்கள் பட்டினி கிடக்க நேரிடுகிறது. பசியால் மடிவதோடு, இந்தப் பெரும் தவளைகளுக்கு இரையாகியும் அவை மடிகின்றன. கரும்புத் தவளைகள், தவளைகள் உலகின் கருநாகம் போன்றவை. இவற்றின் கண்களுக்குப் பின்புறமாக பெரிய நஞ்சுச் சுரப்பிகள் உண்டு. இவை சுரக்கின்ற நஞ்சு (Bufo toxin) தவளைகளை விழுங்க முயலும் பாம்புகள், பூனைகள் போன்ற விலங்குகளைச் சில நொடிகளில் சாகடிக்கும் அளவுக்கு வீரியமானது. முட்டைகள், வாற்பேய்கள் என்று கரும்புத் தவளைகளின் எல்லாப் பருவங்களிலுமே இந்த நஞ்சு ஊறிக் கிடக்கிறது. இதனால் இவற்றை உண்ணுகின்ற மீன்களும் இறந்து வருகின்றன. முதலைகளுக்கும் இதே கதிதான். தவளைகளைப் பிடித்து விழுங்கியதில் விக்டோரியா ஏரியில் இருந்த முதலைகளில் முக்காற் பங்குக்கும் மேலாக அழிந்து போயின. உணவுச் சங்கிலிகளின் மூலம் நஞ்சு கடத்தப்படுவதால், நன்னீர் ஆமைகளை அதிக அளவில் உண்ணுகின்ற ஆஸ்திரேலிய அபோரிஜின் பழங்குடிகள் இவற்றால் பாதிக்கப்படலாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் மேற்கு மாநிலத்தில் கரும்புத் தவளைகளை எதிர்கொள்வதற்கு இராணுவமே அழைக்கப்பட்டுள்ளது. ஒரு பதச் சோறாக ஆஸ்திரேலியாவைப் பாடாய்ப் படுத்தி வரும் கரும்புத் தவளைகளைப் பற்றி விளங்கிக் கொண்டாலே பாதீனியத்தின் நாசகாரித்தனத்தை சுலபத்தில் புரிந்து கொள்ள முடியும்.

## தோல்வியில் முடிந்த 'ஒப்பிரேஷன் தவளை'

குயின்ஸ்லாந்தின் உயிர்ப் பல்வகைமையைக் கரும்புத் தவளைகள் ஒற்றை இனமாக நின்று வேட்டையாடி வருவதைத் தாமதமாகவே அறிய நேரிட்டது. அதற்குள் தவளைகள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் பெருகிவிட்டிருந்தன. பிராணிகள் நல அமைப்புகளின் எதிர்ப்புகளையும் மீறிக் கண்டதும் தடியால் அடித்துக் கொல்ல ஆரம்பித்தார்கள். அதி ஊதாக் கதிர்களைப் பாய்ச்சி அழிக்க முயன்றார்கள். ஆனால் தவளைகள் விழ விழப் புதிய தவளைகள் வரிசைகட்டி வந்து கொண்டேயிருந்தன. கிருமிப் போராக ஒரு வகை வைரஸ், கரும்புத் தவளைகளின் மீது ஏவப்பட்டது. கரும்புத் தவளைகளோடு உள்ளூர்த் தவளை இனங்களையும் வைரஸ் பாதித்தமையால் அம்முறையும் கைவிடப்பட்டது. எல்லா அஸ்திரங்களும் தோல்வி கண்டுவிட்ட நிலையில் ஆஸ்திரேலிய அரசு தவளைகளின் மரபணுக்களில் கைவைக்கும் எத்தனங்களில் இறங்கி உள்ளது. கிருமி நோய்களுக்குப் பதிலாக தவளைகளின் மரபணுக்களில் மாற்றங்களை ஏற்படுத்தி பாரம்பரிய நோய்களை உண்டு பண்ணும் ஆய்வுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இதுவரையில் தவளைகளை ஒழிப்பதற்கென பல மில்லியன் டொலர் செலவழிக்கப்பட்ட போதும் தவளைகளின் பாய்ச்சலில் ஓர் அடியேனும் தடுத்த பாடில்லை. ஆண்டுக்கு சராசரியாக 30 கிலோமீற்றர்கள் பரவி இப்போது மேற்கு மாநிலத்தில் எல்லைகளை இவை தட்டத் தொடங்கியுள்ளன. மேற்கு மாநிலத்தை தவளைகளின் முற்றுகையில் இருந்து தடுக்கும் தீவிர முயற்சிகளில் மாநில அரசு குதித்துள்ளது. கரும்புத் தவளைகளின் கலவிக் கூப்பாடுகள் வெகு தொலைவில் ஒலிக்கும் போதே கர்ண கடூரமாக இருக்கும். ஒலிவாங்கிச் சாதனங்கள் மூலம் இந்த இரைச்சல்களை பதிவு செய்து தவளைகளின் ஊடுருவல்களை அடையாளம் கண்டு அழிக்கும் பணிக்கு இராணுவம் அழைக்கப்பட்டு இருக்கிறது.

## சற்றும் சளைக்காத பாதீனிய அரக்கன்

கரும்புத் தவளைகளின் சூழல் விரோத நடவடிக்கைகளுக்கு பாதீனியம் எது விதத்திலும் குறைந்தது அல்ல. மிகப் பெரும் எண்ணிக்கையில் பரவி, நெருக்கமாக முளைத்து, நிமிர்ந்து சடைத்து, விரைவிலேயே பச்சை இராட்சதக் கம்பளம் போல நிலத்தை மூடி விடுகின்றது. இவற்றின் மூர்க்கத்தனமான வளர்ச்சியின் கீழ் சுதேசிய செடி கொடிகளினால் தலையெடுக்க முடிவதில்லை. தண்ணீருக்காவும், வெளிச்சத்துக்காகவும், வேர்ப்பிடி மண்ணுக்காகவும் போராடிச் சரிகின்றன. இவற்றின் மேல் பாதீனியம் நஞ்சூட்டியும் வருகின்றது. கரும்புத் தவளைகளுக்கு தலையில் மட்டும் தான் விஷம். ஆனால் பாதீனியத்துக்கு உச்சி முதல் வேர்க்கால் வரை விஷம். உடம்பு பூராகவும் இருந்து பாதீனின் (Parthenin), அம்புரோசின் (Ambrosin) போன்ற நஞ்சு வேதிகளை சுரக்கின்றது. இந்த நஞ்சுகளிடம் தாக்குப் பிடிக்க முடியாமல், பாதீனியம் படையெடுத்த இடங்களில் எல்லாம் உள்ளூர்ச் செடி இனங்கள் இல்லாது போகின்றன. கடைசியில், 'எதற்கும் அடங்காமல் எதனையும் அடக்காமல்' பல்லூழி காலமாக இயற்கைச் சமநிலையில் பெரும் பங்காற்றி வந்த உள்ளூர் இனங்களின் சாம்பல் மீது நின்று கொண்டு பாதீனியம் கோலோச்சத் தொடங்குகின்றது.

வேளாண்மையில் பயிரோடு சேர்ந்து வளருகின்ற எந்த ஒரு பூண்டும் உற்பத்தியைப் பாதிக்கின்ற போது, கெடு செடி பாதீனியத்தின் பயங்கரவாதம் எவ்வளவு அதிகமாக இருக்கும்? நெடு நெடுவென வளர்ந்து பயிர்களின் தேவைகளைத் தட்டிப்பறிப்பதோடு, மண்ணில் கசியவிடும் நஞ்சுகளின் மூலமும் வளர்ச்சியைக் குறுகத் தறித்து விடுகிறது.

*(வளரும்)*

*(நன்றி: ஏழாவது ஊழி)*

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். சகோதரவகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிக ரிக்கும்.

**இடபம்:** உணர்ச்சி வேகத்தில் அவசர முடிவு கள் எடுக்க வேண்டாம். விமர்சனங்களைக் கண்டு அஞ்சாதீர்கள். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் கூடுதலாக வேலை பார்க்க வேண்டி வரும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வெளிவட்டாத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத் தில் நாட்டம் அதிகரிக்கும்.

**கடகம்:** திறமையுடன் செயற்பட்டு சில காரி யங்களை முடிப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங் கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட் டைப் பெறுவீர்கள். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும்.

**சிங்கம்:** சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றி அடைவீர்கள். வெளிவட்டாரத் தில் மதிக்கப்படுவீர்கள். வீண் பதற்றம், அலைச் சல் நீங்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

**கன்னி:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். வாழ்க்கைத் துணையின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிருங்கள். நட்பு வட்டாரம் விரிவடையும்.

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்க ளால் இருந்துவந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக் கப்படுவீர்கள். எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர்ப் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** சில நேரங்களில் வெறுப்பாக பேசுவீர் கள். குடும்பத்தில் எதிர்ப ாராத செலவுகள் வந்துப் போகும். அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் வழங்க வேண்டாம். உத்தியோ கத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

**மகரம்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலை களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள் களால் மறைமுகப் பிரச்சி னைகள் வரக்கூடும். உத்தியோகத்தில்அவசர முடிவுகள்எடுக்கவேண்டாம்.

**கும்பம்:** எண்ணம்போல் செயற்பட வேண்டும் மென எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**மீனம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். ஆன்மிகத் தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங் களால் ஆதாயம் உண்டு.

# மனத்தின் சக்தி



விவேகானந்தரின் சிந்தைகளிலிருந்து

காரணமே காரியமாகிறது. காரணம் என்பது ஏதோ தனியாக நிற்கும் ஒன்றல்ல, காரிய மும் காரணத்தால் விளையும் மற்றொன்று அல்ல. காரணம் அரும்பு; காரியம் மலர். காரணமே எப்போதும் காரியமாகிறது. தனித்த ஒரு காரணத்தின் விளைவே காரியம், என்பதுதான் சாதாரணமாக மக்களிடையே நிலவிவரும் கருத்து. இது சரியல்ல. காரியம் காரணத்தின் செயல் நிலை.

பிரபஞ்சம் உண்மையில் ஒருமை இயல்பான ஒன்று. வேற்றுமைகள் யாவும் வெளித் தோற்றமே. இயற்கையில், பல்வேறு பொருள்களும்பல்வேறுசக்திகளும்இருப்பதுபோல்தோன்றுகின்றன. ஆனால் எல்லாமே ஒன்றுதான்.

ஓர் அறையினுள் நுழைந்தால், அங்குள்ள மனிதர்களும் பொருள்களும் பறப்பது போல் தோன்றும்படி அந்த அறையின் சூழ்நிலையை வசியம்செய்துவிடலாம். முன்னரே ஒவ்வொரு வரும் ஓரளவு வசியப் பட்டே இருக்கின்றனர். இவர்கள்சுதந்திரமடையவும், தங்கள்உண்மை இயல்பை அறியவும் வேண்டுமானால் இந்த வசியம் நீங்க வேண்டும்.

மனத்தை அடக்க முற்றிலும் வேண்டப்படுவது தூய ஒழுக்கமே. முற்றிலும் தூய ஒழுக்கமுள்ள ஒருவன், அதற்கு மேல் எதுவும் செய்யவேண்டியதில்லை. அவன் சுதந்திர மானவனே. முற்றிலும் தூய ஒழுக்கமுள்ள ஒருவன் யாருக்கும் தீமை செய்யமாட்டான் ; எதற்கும் தீங்கு செய் மாட்டான். சுதந்திரம டைய விரும்புபவன் தீமை செய்யாதவனாக இருக்க வேண்டும்.

ஒரு குகையுள் வாழ்ந்து வந்த முதிய யோகி ஒருவரை எனக்குத் தெரியும். அவரது உடைமை எல்லாம் உணவு தயாரித்துக் கொள்வதற்கான இரண்டொரு சட்டிகள் தாம். உண்பது சிறிதே; உடுப்பதும் ஒரு கோவணமே. வேறெதுவும் இல்லை. நேரம் முழுவதையும் அவர் தியானத்திலேயே கழித்தார். அவரது பார்வையில் எல்லாம் ஒன்றே. கொல்லாமை கைவரப் பெற்றவர் அவர். இந்தப் பிரபஞ்சத்தின் தலைவனாகிய பரமாத்மாவை அவர் ஒவ்வொரு பொருளிலும் கண் டார்; ஒவ்வொரு மனிதருள்ளும் கண்டார்; ஒவ்வோர் உயிரிலும் கண்டார். மிருகத் தையும் 'எனது பிரபுவே' என்றுதான் அவர் அழைத்தார். மிருகத்தையோ, மனித னையோ அவர் வேறு விதமாக அழைத்ததில்லை. ஒருநாள் திருடன் ஒருவன் வந்து அவருடைய சட்டிகளில் ஒன்றைத் திருடிச் சென்றான். அதனைக் கண்ட அவர் அவன் பின்னால் ஓடினார். நீண்ட தூரம் அவனைவிரட்டிச்சென்றார். முடிவில்திருடன் மூச்சுத் திணறி நிற்கவேண்டியதாயிற்று. அவன்முன்சென்றுஅவனுடையகாலடிகளில் விழுந்தார் யோகி. "பிரபோ! என் இருப்பிடம் வந்து எனக்குப் பெருமை அளித்தீர்கள். மற்றொரு சட்டியையும் வைத்துக் கொள்ளுங்கள். அதுவும் தங்களுடையதே" என்று கூறினார். இந்தக் கிழவர் இறந்துவிட் டார். உலகில் உள்ள ஒவ்வொன்றையும் அவர் நேசித்தார். வேண்டுமானால் ஓர் எறும்புக்காகவும் அவர் இறக்கத் தயாராய் இருந்தார். இந்த மனிதர் தங்களுடைய நண்பர் என்பதைக் காட்டு மிருகங்கள் உணர்ந்திருந்தன. பாம்புகளும், கொடியவிலங்குகளும் அவருடைய குகைக்குச் சென்று அவருடன் தூங்கும். அவை யாவும் அவரை நேசித்தன .அவர் முன் அவை சண்டையிடாது.

பிறரது தவறுகளைப் பற்றி பேசாதீர்கள்; எவ்வளவு கெட்டதானாலும் அதைப்பற்றி பேசாதீர்கள். அப்படிப் பேசுவதால் பயனொன்றும் இல்லை. ஒருவனுடைய தவறுகளைப் பற்றி பேசுவதன் மூலம் நீங்கள் அவனுக்கு ஒருபோதும் உதவுவதில்லை. அதற்குப் பதிலாக நீங்கள் அவனுக்குத் தீங்கு செய்கிறீர்கள். உங்களுக்கும் தீங்கிழைத் துக் கொள்கிறீர்கள்.

ஆன்மிகப் பாதைக்குத் துணை புரியும் வரையில் உணவுக் கட்டுப்பாடுகளும், கடின சாதனைகளும் நல்லவைதாம். ஆனால் இவையே குறிக்கோளாகாது; இவை வெறும் துணைகளே.

## நாளை

கார்த்திகை-20 வெள்ளிக்கிழமை
06.12.2013
திதி: சதுர்த்தி மு.இ.09.36 வரை
நட்சத்திரம்: உத்தராடம்
பி.இ.12.15 வரை
சுபநேரம்:
06.17 - 07.47 வரை
இராகுகாலம்: 10.47 - 12.17 வரை

# மூளைகள் பலவிதம்

ஆண்கள் மூளை வரைபடம் வாசிப்பதில் திறனுள்ளது. பெண்கள் மூளையோ, பல பணிகளை ஒரே சமயத்தில் செய்யத் திறனுள்ளாக இருப்பதாகக் கூறுகிறது புதிய ஆய்வு


ஆண்கள் மற்றும் பெண்களின் மூளையைப் பற்றி நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் ஆண்கள் மற்றும் பெண்களின் திறனைப் பற்றி கூறப்படும் சில பாரம்பரியமான கருத்துகள் உண்மை என்று கண்டறியப்பட்டுள்ளன.

ஆண்களால் ஒரு வரைபடத்தை வாசிக்க முடியும். இதற்கு மாறாக, பெண்களோ வழி கேட்பார்கள். ஆனால் ஒரே நேரத்தில் பல பணிகளைச் செய்வதிலும் சிறந்து விளங்குவார்கள்.

பெண்களின் மூளைகளில் இடது மற்றும் வலது அரைக் கோளத்துக்கு இடையே உள்ள நரம்பு இணைப்பு சற்று அதிகளவில் காணப்படுவதாக ஆய்வாளர்கள் ஆயிரம் மூளைகளில் நடத்தப்பட்ட ஸ்கான் என்ற பரிசோதனை மூலம் கண்டறிந்துள் ளனர்.

இதற்கு மாறாக, முன்னிருந்து பின் பக்கம் இணைக்கப்பட்டுள்ள ஆண்களின் மூளை, நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துச் செய்கிறது. உணர்ந்து அறிந்து கொள்ளும் ஆற்றலைப் பெற்றுள்ளது.

ஆனால் குழந்தையிலிருந்து வளரும்போது ஒருவரின் பாலின வேறுபாடுகள் சற்று தாமதமாகவே தோன்றும். 13 வயதுக்கு கீழ் இருக்கும் சிறார்களில் சிலரில் தான் இந்த வேறுபாடுகள் காணப்பட்டன. ஆனால் பதின்மபருவத்தினரிடமும் இளைஞர் களிடமும் இந்த வேறுபாடுகள் தெளிவாகக் காணப்பட்டன.



# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 3 | | | | | 5 |
| | | 5 | 8 | | | 4 | 6 | 9 |
| 2 | 9 | | | | | 3 | | 8 |
| | | 6 | | 3 | | | 4 | 2 |
| 9 | | | 6 | | 1 | | | 7 |
| 3 | 5 | | | 7 | | 6 | | |
| 5 | | 7 | | | | | 1 | 6 |
| 4 | 2 | 9 | | | 8 | 7 | | |
| 6 | | | | | 5 | | 8 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இங்க ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் [illegible] அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவ[illegible]ா நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரக பரவலாக்[illegible]து. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 6 | 5 | 9 | 3 | 1 | 7 | 2 |
| 2 | 9 | 3 | 1 | 4 | 7 | 8 | 6 | 5 |
| 7 | 5 | 1 | 6 | 2 | 8 | 9 | 3 | 4 |
| 8 | 3 | 4 | 9 | 6 | 5 | 2 | 1 | 7 |
| 6 | 7 | 2 | 3 | 8 | 1 | 5 | 4 | 9 |
| 5 | 1 | 9 | 4 | 7 | 2 | 6 | 8 | 3 |
| 3 | 2 | 5 | 7 | 1 | 6 | 4 | 9 | 8 |
| 9 | 6 | 7 | 8 | 5 | 4 | 3 | 2 | 1 |
| 1 | 4 | 8 | 2 | 3 | 9 | 7 | 5 | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை



## முகப்புத்தகப் பாவனை
# தீமையே தரும்

இன்றைய தலைமுறை சமூக வலைத்தளங்களின் உறவில் பின்னிப் பிணைந்துள்ளது. இன்று இணையத்தள உலகில் கூகுளுக்கு அடுத்த இடத்தில் ஆதிக்கத்தைச் செலுத்துவது எது என வினவினால் 'பேஸ்புக்'தான். ஒருநாள் கூட 'பேஸ்புக்' பார்க்காமல் நம்மவரால் இருந்திட முடிவதில்லை. அந்தளவுக்கு 'பேஸ்புக்' அடிமைப் பட்டுள்ளார்கள்.

முகப்புத்தகம் குறித்து நன்மை, தீமைகள் பற்றி அறியாமல் அதனுள் ஆழமாக எந்தநேரமும் இருப்பதனால் பல தீங்குகள் ஏற்படும். வன்முறைகள், காதல், தற்கொலை, மனரீதியான பாதிப்பு, தேவையற்ற பிரச்சினைகள் என தீமைகள் நீண்டு கொண்டே செல்கிறது. 'பேஸ்புக்' மூலம் வணிக விரிவாக்கம், சில பிரிந்த உறவுகள் சேருதல், சில உண்மையான அன்புப் பரிமாற்றம், வாழ்த்து பரிமாற்றம் எனப் பல நன்மைகள் இருப் பது பலரும் அறிந்திருந்தாலும் நம்மவர்களில் யார் நீரில் பாலைப் பிரித்துண்ணும் அன்னமாக இருக்கிறார்கள். அதனால் தீமைகள் பல கலாசார சீரழிவைத் தருவதால் அதனை ஆராய வேண்டியுள்ளது.

"காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு" என்றார் அன்று பாரதியார். இன்றோ இளம் தலைமுறையினர் " காலை எழுந்தவுடன் பேஸ்புக் பின்பு கனிவு கொடுக்கும் நல்ல சற்றிங் என்கிறார்கள். இளைஞர்கள் தான் இவ்வாறு தவறான முறையில் பயன்படுத்துகிறார்கள் என்றால் முதியவர்களும் அவ்வாறே செயற்படுகிறார்கள். தினம் கண்டு பேசி பழகி உருவாகும் நட்பே புரிதல் இல்லாது பிரிவுகளை சந்திக்கையில் இணையத்தில் நட்பு, காதல் என மாறினால் இவை நிறைவேறுமா என்றால் இல்லை.

'பேஸ்புக்' மூலமான உறவில் அரட்டை அடித்தல் மூலமே பிரச்சினைகள் உருவாகி உயிரை மாய்க்கும் கொடூரங்கள் நடைபெறுவது அனைவரும் அறிந்ததே. பெற்றோர், பிள்ளைகள், சகோதரர்கள், முகப்புத்தகத்தில் புனைப் பெயர்களில் வலம் வருவதால் தங்களுக்குள் இருக்கும் உறவுமுறைகளை மறந்து அடையாளம் தெரியாமல் அநாகரிக உறவு கொள்கிறார்கள். இவை தொடருமானால் குடும்ப உறவு சீர்கேட்டைத் தரும். 21 ஆம் நூற்றாண்டில் கால் வைத்து விஞ்ஞான விந்தையான உலகில் வாழும் நாம் தீயவற்றிலிருந்து விலகுவோம் என திடசங்கற்பம் பூணுவோம்.

*எஸ். சாரு, சாவகச்சேரி.*

## விமர்சனம்


நீங்களும் எழுதலாம்....

முகப்புத்தகப் (பேஸ்புக்) பாவனை

**நன்மையா?**
**தீமையா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.



## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................................

முகவரி :- ..........................................................

..........................................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வீரம்....

வீரம் என்றவுடன் நாம் பார்த்து ரசித்த சினிமாவில் வருவது போல ஒரே நேரத்தில் பத்து பதினைந்து பேரை பந்தாடுவதல்ல. வீரம் என்பது ஓர் உணர்ச்சி.

இன்றைய இளைஞர்கள் வீரம் என்ற பெயரில் சண்டை பிடித்துத் திரிகின்றனர். அப்பாவிகளை வதைப்பது, கற்பிக்கும் ஆசிரியரை எதிர்ப்பது, தான் விரும்பும் பெண்ணுக்காக சண்டை போடுவது, பெற்றோரை அவமதிப்பது இதுபோன்ற செயல்களையே இன்றைய இளைஞர்கள் வீரம் என்று நினைக்கிறார்கள்.

வீரம் என்பது அதுவல்ல. எவனொருவன் பணக்கஷ்டத்திலும் நேர்மையாக உழைக்கிறானோ அவனிடம் உள்ளது வீரம். எவ்வளவு துன்பம் வந்தாலும் சொந்த உழைப்பில் மனைவி, பிள்ளைகளை காப்பாற்றுகின்றானோ அவனிடம் உள்ளது வீரம். எல்லாப் பெண்களையும் விலை மாது போல பார்க்காமல் மன சஞ்சலமில்லாமல் நட்பாடுவதிலுள்ள வீரம்.

தான் கைப்பிடித்தவளுடன் எந்த எதிர்ப்பையும் தாண்டி வாழ்ந்து காட்டுவதிலும் தனக்கான உரிமை மறுக்கப்படும் போது கொதித்தெழுவதில், பிறர் துன்பம் தீர்க்க முனைவதில், தம் மக்களுக்காக குரல் கொடுப்பதில் உள்ளது வீரம். இதை விடுத்து தந்தை பணத்தில் மது அருந்துவது வீரமல்ல. அது தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் செயல்.

ஒரு நாடு மாற்றமடைய வேண்டுமென்றால் மாற்றம் ஒவ்வொரு குடும்பத்திலும் இருந்து ஆரம்பிக்க வேண்டும். பிறரை மயக்க வித்தைகள் புரிவதை விட நாம் நாமாக இருந்தால் போதுமானது.




*ச. செந்தில்குமரன்,*
*யாழ். இந்துக் கல்லூரி.*

## நட்பின் பிணைப்புக்கள்

விழியோடு விழிமோதி
கனவோடு கதைபேசி
கழிவான அந்த நாள்கள்...
சுவரேறித் தடுமாறி
அமுதேயுன் பெயர் கீறி
அலைவான அந்த நாள்கள்
நிழலோடு அருகோடு
பல கதை பேசி
வழியில் நடந்த அந்த நாள்கள்
உணவுப் பொட்டலங்களை
ஊர்க்கதை பேசி
ருசித்துப் பார்த்த அந்த நாள்கள்
பள்ளிக்குப் போகாமல்
கள்ளமடித்து பொய்க் கடிதம் எழுதிய
அந்த நாள்கள்
பரீட்சைக்கு முதல் நாளிரவு
தூக்கமில்லாமல்
துக்கமுடன் படித்த அந்த நாள்கள்
சில நிகழ்வுகளிற்கு
அழகாக விழாக்கோலம் பூண்டு
அழியாத சாதனைகள் படைத்த அந்த
நாள்கள் விழிமீது துளியூற
துளிமீது ஒளியூற
வழிபோன அந்த நாள்கள்...
அழியாது அழியாது
வழி மீது பழியேது?
அழி நீரில் ஆடும் பூக்கள் நாம்



*த. குணாஜினி,*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்*
*கல்லூரி, கோப்பாய்.*

## ஊர் மீட்ட நினைவு.....

செம்மண் மணற்படுக்கைகளில்
பட்டுச் சிவந்தன கால்கள்!
நெருஞ்சியின் வருடலில்
கருஞ்சிவப்பு குருதி
பொட்டு வைத்தது
தரையெங்கும்........
காலம் புரட்டிப் போட்ட
புழுதிச்சாலை,
கோலமிழந்து கிடக்கும்
எல்லைக் கோயில்!

சூரியக் கிரணங்கள் சூடேற்றி
வறுத்த வயல் நிலமெங்கும்-
மரத்த கிடைச்சிக் கட்டைகளின்
ஆக்கிரமிப்பு!

தூரத்தே கேட்கும் துயரக் குயிலின்
சோக கீதத்தில் புதைந்த மனது
எதையோ கிளறியது!

அப்பா தலையைக் கோதினார்!
நிமிர்ந்தேன்!
அவரே தான்!
நிசப்தமான இரவுகளில் மட்டும்
வருபவர் இப்போது ஏன் வந்தார்?
பிறந்த ஊரில், கிடந்த நிலத்தில்
எதையேனும் தேடி வந்தாரோ?
குருதி கொப்பளித்து
சதைகள் சிதலமாகி
விழிகள் பிதுங்கி
வேரறுந்து பதுங்கிக் கிடந்த
நினைவுகள் ஓடி வந்து தழுவின
தளர்ந்த நரம்புகள் இறுகி விரிந்தன

குண்டுமணி பொறுக்கிய
மணியத்தார் வளவு
குரும்பட்டி அடித்த குஞ்சக்கா வீடு?
நெஞ்சத்தின் துவாரங்களை
நிரப்பிய நினைவுகள்
வேப்பம் பழத்தில் பிதுங்கிய
வித்தாக வெளியே வந்தது
உயிர் உருகி
உடல் வெதும்பி மனமுடைந்து
சன்னங்கள் கிழித்த,
புண்களின் ரணங்களில்
கதறத் திறந்த குரல்வளைகள்
சிதறிப் போன கணங்களில்,
கருகிப் போன வாழ்வின்
பசுந்துளிர்களை
வசந்தத்தின் பின்னிரவுகளில்
தேடிப் பார்க்கின்றேன்

அப்போதெல்லாம் அந்த
உயிர்த்துடிப்புள்ள ஆன்மாக்களில்
அலறல், என் காதுகளில் அலை
அலையாய்
அடித்துக் கொண்டே இருக்கும்

நீண்ட காலம்- தன்
கறுத்தப் போர்வைக்குள்
வரலாறுகளின் தடங்களையும்
நாம் சுமந்த ரணங்களையும்
மறைத்துப் போட்டிருக்கலாம்!
எம் உடல் கிழித்த கரங்களுக்கும்
உயிர் குடித்த சாத்தான்களுக்கும்
மாலையிட்டு நாம் மகிழலாம்?

நாளப் பாதையில் நகரும்
குருதி கருகும் வரைக்கும்
தான் கூறிக்கொண்டே இருப்பேன்!
யாரும் நம்பப் போவதில்லை- நான்
'மனநலமுள்ள சிறுவன்' என்று!
கொடிய காலமே, என் உயிருக்கு
விடுதலை தா! இல்லையேல் எம்
உணர்வுகளின் பயனைத் தா!

எதுவும் இங்கு இல்லையெனில்
விரலுக்கு வீக்கமென்றால்
குடலுக்கு மருந்து போடும் உலகில்;
என் நினைவுகளின் அசைவுகளோடும்
இந்த ஒற்றைக் கால் உடலோடும்
வாழ்ந்து விட்டுப் போகின்றேன்!

*ஜீ. ஷஜீவன்*
*யாழ். இந்துக் கல்லூரி*

## கும்பாபிஷேகம்

வடமராட்சி, டிசெ. 5
சுமார் 80 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புலோலி தெற்கு, புற்றளைச் சித்தி விநாயகர் ஆலய அதி சுந்தர திரிதள பஞ்சகலய நூதன மகா இராஜகோபுரத்தின் திருக்குட திருமஞ்சன பெரும் சாந்தி விழா நாளை வெள்ளிக் கிழமை காலை 7.50 மணி தொடக்கம் 8.20 மணி வரையான சுப வேளையில் நடை பெறவுள்ளது.
ஆலயத்தின் பிரதம குருவான சிவஸ்ரீ சோமஸ்கந்த ஜெயபால சுந்தரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். கும்பாபிஷேகத்துக்கான அருள் ஆசியை சோதிட ஆசான் கிரியா சாந்தன் வைத்திய கலாநிதி தியாக கெங்காதரக் குருக்கள் வழங்குவார். (ந-8)

★ ★ ★

சரவணை - பள்ளம்புலம் முருக மூர்த்தி ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்று விழாக்கிழமை மாலை 5 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகும். கிரியைகளை பிரதம குரு சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக்குருக்கள் நடத்துவார். (ந)

## தொண்டர் கௌரவிப்பு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை சர்வதேச தொண்டர் தினத்தையொட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். அலுவலகத்தில் தொண்டர் கௌரவிப்பு நிகழ்வை நடத்தவுள்ளது. (வ-7)

## மிருசுவில் புனித நீக்கொலார் ஆலய திருவிழா ஆரம்பம்

மிருசுவில் புனித நீக்கொலார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 27 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. இன்று மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பித்து நற்கருணை ஆராதனையுடன் இறுதிநாள் திருப்பலியும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அன்றைய நாள் புனித நீக்கொலார் கழகத்தினுடைய ஒழுங் கமைப்பில் புதிய ஆலயம் அமைப் பதற்கான செயலணியினரால் "மிருசுவிலும் புனித நீக் கொலார் ஆலயமும்" எனும் வரலாற்று ஆவண குறும்படம் ஒன்று திரையிடப்படவுள்ளது.
இந்தக் குறும்படம் மிருசுவில் கத்தோலிக்க மத வரலாற்றையும் புனித நீக்கொலார் ஆலய கட்டுமானப் பணி களையும் வரலாற்று ரீதியாக விளக்குவதாக அமைகின்றது. தொடர்ந்து ஆலயக் கட்டுமான நிதிசேகரிப்புக்காக விநோத முறையில் அமெரிக்க ஏலவிற்பனை முறை யிலான விளையாட்டுக்களும் - இடம்பெறும்.
திருநாள் திருப்பலி நாளை காலை 6.15 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பித்து யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் திருநாள் திருப்பலியும் தொடர்ந்து திருச் சொரூப பவனியும் ஆசீர்வாதமும் இடம் பெறும். அதன் பின்பு கட்டட நிதிக்கான விளையாட்டு நிகழ்வு இடம்பெறும். (வ)

## மாணவர் கௌரவிப்பு

தென்மராட்சி, டிசெ. 5
கொடிகாமம் மத்தி கிராம அபிவிருத்திச்சங்கத்தின் பொதுக் கூட்டமும் சங்க எல்லைப் பரப்பில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மிருசுவில் போக்கட்டி றோ.க. த.க. பாடசாலையில்இடம்பெறும். சங்கத் தலைவர் அ.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் சு.ரவிகரனும், சிறப்பு விருந்தினர்களாக போக்கட்டி றோ.க.த.க. பாடசாலை அதிபர் கே.ரவீந்திரன், கிராம அலு வலர் கு.பரமானந்தம் ஆகி யோரும் கலந்து கொள்வர். (ந-9)

★ ★ ★

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவருக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறும்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொள்வார். (வ)

## நூல் வெளியீடு

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி பீடாதி பதி க. பேனாட் எழுதிய "பொற்றோரியம்" எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு வவுனியா தேசியக் கல்வியற் கல்லூரி கிறிஸ்தவ மன்றத்தின் ஒழுங் கமைப்பில் இடம்பெறவுள்ளது.
இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக உளவளத் துணையாளர் பி.ஏ.சி. ஆனந்தராஜா கலந்து கொள்ளவுள் ளார்.
நூலிற்கான நயப்புரையை அதிபர் திருமதி பத்மாவதி ஜெயச்சந்திரன் வழங்கவுள் ளார். (ஜ-402)

**சாதனையில் வெற்றி பெறுவதற்கு மனிதன் தனது தன்னிஷ்டத்தைப் பிரயோகிக்கலாமா?**

*மனிதனுக்குச் தன்னிஷ்டம் இருக்கின்றது என நம்புவது முற்று முழுதான பிழையாகும். தனது சாதனைகளையெல்லாம் தன்னிஷ்டத்தாலும், மன உறுதியாலும் வென்றுவிடலாம் என்று மனிதன் நம்புகிறான்.*
*அகங்காரத்தினால் ஏற்பட்ட சித்தப்பிரமையாலும், கர்திறிற்வா - செய்பவன் தானே என்ற பிழையான எண்ணத்தின் பிரதிபலிப்பாலும் ஏற்பட்ட விளைவு இது.*
*மனிதன் தனது சாதனைகளில் வெற்றி பெறுவதற்கு தெய்வீக அருள், உதவி, துணையும் வேண்டும்.*



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது
சாயி சிந்தனை

## ஒளி விழா

யாழ்ப்பாணம், டிசெ.5
இளவாலை மாரீசன் கூடல் ஆர்.சி.ரி.எம். பாடசாலையின் ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் ம.மகேந்திரன் தலைமையில் நடைபெற வுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசாவும் சிறப்பு விருந்தினராக அருட்பணி ச.யோ.கு. ஜெயரஞ்சன் அடிகளாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். ஆசியுரையை மாரீசன்கூடல் பங்குத்தந்தை அருட்பணி யே.அ.அருள்தாசன் அடிகளார் நிகழ்த்தவுள்ளார். மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி கனகதயாநந்தி சிவானந் தராசா வழங்குவார். (வ)

★ ★ ★

வவுனியா மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் ஒளி விழா நிகழ்வு இன்று வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தின் இளைஞர் பயிற்சி நிலையத்தில் கல்வி பயிலும் மூவின மாணவர்களின் கலாசார நிகழ்ச்சிகள் ஒளி விழாவில் இடம்பெறவுள்ள தாக வவுனியா மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப் பாளர் எஸ். எம். சிசிர செனவிரத்தின தெரி வித்துள்ளார். (ஜ-402)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ. 5
ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளி விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் ஆ.சிறிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உப அதிபர் வண டி.எஸ்.சொலமன், சிறப்பு விருந்தினராக ஏழாலைப் பங்குத் தந்தை றெக்ஸ் சவுந்தரா. பங்குத்தந்தை போதகர் புவனேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ. 5
சில்லாலை றோ.க.த. பாடசாலையும், புனித கதிரை மாதா முன்பள்ளியும் இணைந்து நடத்தும் ஒளிவிழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் யோ.எ.பங்கிராஸ் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செய லாளர் சரா புவனேஸ்வரன் கலந்து கொள்வார். (வ)

# மரண அறிவித்தல்

## செல்லப்பா வைத்திலிங்கம்



பழை, (மாவிட்டபுரம்) தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா வைத்திலிங்கம் நேற்று (04.12.2013) புதன் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆச்சிமுத்துவின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான பழை செல்லப்பா-அன்னப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் நாகம்மா, விசயரத்தினம், அங்கமுத்து ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சந்திரபாலன் மற்றும் பாக்கியநாதன் (கனடா), பத்மநாதன் (கொக்குவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் லீலாவதி, நிரஞ்சலா ஆகியோரின் மாமனாரும், சங்கீதா, சாமந்தி, சாளினி (ஆஸ்திரேலியா), சஞ்செயன், கௌசிகன், கீர்த்திகன் (கனடா), ருக்ஷாயினி, ருபலவன், கிந்துஷன் ஆகியோரின் பேரனும், ஆரவி, சதுர்ஷன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2013) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொக்குவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி முதலாம் ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
T.P:077 494 8012, 021 492 5159.

தகவல்:
பத்மநாதன் (மகன்)

(40833)(4.6.3)



# அகில இலங்கை யாழ் கோண்டாவில்
# சபரீச ஐயப்ப தேவஸ்தானம்
## தேர்ச் சிறப்பு மலர் – 05.12.2013
### முற்பகல் 10.00 மணிக்கு இரதோற்சவம்

**ஒன்பதாம் நாள் விழா**
**சிறப்புற வாழ்த்துக்கள்**

யாழ்ப்பாணத்தில் கோண்டாவில் முதன்மையாக உள்ள ஈழத்து சபரி மலையான் பெயர் கொண்டிருக்கும் சபரீச ஐயப்ப தேவஸ்தானத்தின் விஜய வருடம் நடைபெறும் மகரஜோதி மண்டல பெருவிழாவின் மகோற்சவமான ஒன்பதாம் நாள் வருடந்தோறும் நடைபெறுவது போன்று இம்முறையும் சிறப்பாக நடைபெற சபரீச ஐயப்பனை வேண்டி நல்லாசி கூறுகின்றோம்.



"அனைவரும் வருக ஐயன் அருள் பெறுக"
**கி.ஹரிஹர சுதசிவாச்சாரியார்**
**தேவஸ்தான முதன்மை குருசுவாமி**

**தேரேறி அருள்மழை பொழிக**

பிரமோற்சவத்தில் இரதோற்சவமானது பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றான அழித்தல் தொழிலை குறிக்கின்றது.
ஆணவ மலத்தை நீக்கி அடியார்களுக்கு நல்லருளை பாலிப்பதே இதன் நோக்கமாகும். இந்த வகையில் ஈழத்து சபரிமலை எனும் பெயர் பெற்ற கோண்டாவில் சபரீச ஐயப்ப ஆலயத்தில் இன்றைய தினம் தேர்த்திருவிழாவாகும். சபரீச ஐயப்பன் தேரில் ஆரோகணித்து சுவாமிமார்கள் ஐயப்ப பக்தர்கள், அடியார்கள் அனைவருக்கும் நல்லருள் புரிய ஐயனின் பாதங்களைப் பணிந்து நல்லாசி கூறுகின்றேன்.



**பிரம்மஸ்ரீ க.மு. சோமசுந்தரக்குருக்கள்**
**வேத சிவகாம ஞானபானு**

லிங்கன் கிறீம் ஹவுஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்
RAJASWARIE TEXTILE

ஐயப்பா நகைமாடம்
Iyappa Nakai Madam
Manufacturers Of Gold jewels
T.P. No.: 077 2627818
224, Kasthuriyar Road, Jaffna

V.M.K Brothers
வீ.எம்.கே பிரதர்ஸ்
170, Palaly Road Kondavil Junction Kondavil
T.P: 021 492 0825
021 222 0232

கல்கமுவ ஸ்ரோர்ஸ்
Galgamuwa Stores
பலசரக்கு பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
இல. 133/1, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 0966
077 183 6625

நவீன அழகிய 22 கரட் தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 6972,
Fax.No: 222 8869
இணை நிறுவனம்:
SARANGAN NAGAIYAKAM
சாரங்கா
நாணயமாற்று சேவை
Sharanga Money Exchange (Pvt) LTD.
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6972

Premium American
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
ESP
587, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
T.P: 021 221 7277

சிறி நதியா
நகை மாளிகை &
டிஜிற்றல் கலர் லாப்
N.S.R கட்டடத் தொகுதி, இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே - 021 2222709
Sree Nathiya
Nagai Maligai & Digital Colour Lab
உங்கள் வாழ்வின் அழகிய நிகழ்வுகளை நவீன டிஜிற்றல் தொழிநுட்பத்துடன் வீடியோ, புகைப் படங்களையும், சிறந்த தரத்திலான புகைப்பட பிரதிகளை குறைந்த நேரத்தில் பெற்றுக்கொள்ளவும், டிஜிற்றல் அல்பங்கள் அழகிய நவீன முறையில் செய்து பெற்றுக் கொள்ளவும் சிறந்த ஸ்தாபனம்
லக்ஸன் பிளாஸா கட்டடம்
108, நாவலர் வீதி, யாழ்.
தொ.பே-021 2228412

**14.01.2014 மகரசோதி தினமான அன்று சபரி மலை ஐயப்பனிடம் செல்ல முடியாதவர்கள் இறுதிக்கடமைகளை கோண்டாவிலில் உள்ள ஐயப்ப தேவஸ்தானத்தில் செய்துகொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.**

# சாவகச்சேரி நகரசபையின் அபிவிருத்தி: 83.7 மில்லியன் ரூபாவுக்கு முன்மொழிவு

சாவகச்சேரி, டிசெ.5

சாவகச்சேரி நகர சபை எல் லைக்குட்பட்ட பகுதிகளில் அடுத்த ஆண்டு (2014) 83.7 மில்லியன் ரூபா செலவில் மூலதன வேலைத் திட்டங் களை மேற்கொள்ள சபையின் உத்தேச வரவு - செலவுத்திட்டத்தில் அபிவிருத்தி வேலை கள் மேற்கொள்ள முன்மொழிவுகள் சமர்ப் பிக்கப்பட்டுள்ளன.

சபை நிதியில் இருந்து 29 வேலைத் திட்டங் களுக்கு 50.4 மில்லியன் ரூபாவும் குறித் தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன் கொடை வேலைத் திட்டங்களுக்கு 33.3 மில்லி யன் ரூபாவும் ஒதுக்கீடு செய்ய முன் மொழி வுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

20 வீதிகள் திருத்தம் மற்றும் மறுதாரிடல் வேலைகளுக்கும் சபை நிதியிலிருந்த ஓர் உறுப் பினருக்கு 15 லட்சம் ரூபா வீதம் 30.8 மில்லியன் ரூபாவும், குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடைகள் வேலைத்திட்டத்தில் பத்து வீதிகள் திருத்த வேலைகள் மேற்கொள்ள 18.8 மில்லியன் ரூபாவும், உத்தேச வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றுடன் சபை நிதியி லிருந்து பொதுச் சந்தைக்கு சுற்றுமதில் அமைத்தல் மற்றும் திருத்த வேலைக்கு 7 மில்லியன் ரூபாவும், சபை எல்லைக்குட்பட்ட சிறிய குளங்களுக்கு சுவர் அமைக்க 50 மில்லியன் ரூபாவும், வீதி வெளிச்சம் மின் னிணைப்புக்கு 20 மில்லியன் ரூபாவும், அலுவலக தளபாட உபகரணங்கள் கொள்வனவு, சுகாதாரத் தொழிலாளர் உடை மாற்றும் அறை, வேலைப் பகுதி பொது சுகாதார பரிசோதகர் அலுவலகம் ஆகியவற்றின் திருத்த வேலைகளும் நூலக தளபாட உபகரணம் கொள் வனவு போன்றவையும் குறித் தொதுக் கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத் திட்டத்தில் இரு சனசமூக நிலையங்களுக்கான கட்டடங்கள் அமைத்தல், தனியார் பஸ்தரிப்பிடங்கள் அமைத்தல், சுகாதார சேவையை மேம்படுத்தல், உழவு இயந்திரமும் பெட்டியும் கொள்வனவு செய்வதற்கும் உத்தேச வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (ந-9)

## குழந்தைகள் கிளினிக்கை தொடர்ந்து நடத்துக;

### *மக்கள் கோரிக்கை*

தென்மராட்சி, டிசெ.5

சாவகச்சேரி ஆதார வைத்தி யசாலையில் பிரதி வெள்ளிக் கிழமைகளில் நடத்தப்பட்டு வந்த குழந்தைகள் சிகிச்சை நிலையத்தைத் தொடர்ந்து நடத்துமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

இந்த கிளினிக்கினை நடத்தி வந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் மேற் படிப்புக்காக வெளிநாடு சென்றுள்ளதால் இந்தக் கிளி னிக்குக்கு வரும் பொது மக் களே இந்தக் கோரிக்கையை வைத்தியசாலை நிர் வாகத்திடம் முன்வைத்துள்ளனர்.

இந்த விசேட வைத்திய நிபுணர் வைத்திய சாலை கிளினிக்குக்கு வரும் சிறு பிள்ளை களுக்கு மேலதிக சிகிச்சை தேவைப்படு வோரை யாழ்ப்பாணம் , கொழும்பு ஆகிய வைத்தியசாலைகளுக்கு அனுப்பி சிகிச்சை பெறச் செய்துள்ளார்.

சிகிச்சைக்கு வரும் போசாக்கு குறைவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை விடுதியில் அனுமதித்து வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் மூலம் போசாக்கு உணவுகள் பெற்றுக் கொடுத்துள்ளார். இவரின் இடத்துக்கு வேறு குழந்தைகள் வைத்திய நிபுணரின் சேவை வைத்தியசாலைக்கு வரும் நோயாளர் களுக்குக் கிடைக்கக் கூடிய வகையில் உரிய அதி காரிகள் செயற்படல் வேண்டு மெனவும் கேட்டுள்ளனர். (ந-9)

## 3 சனசமூக நிலையங்கள் வலி.மேற்கில் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.5

வலி.மேற்கு பிரதேச சபை நிர்வாகத்துக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இடையிலான போட்டியில் மூன்று சிறந்த சனசமூக நிலை யங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி. மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 3 சனசமூக நிலையங்களில் 24 சனசமூக நிலையங்கள் பரீசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதில் இருந்து மூன்று சன சமூக நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டன.

முதலாமிடம் தொல்புரம் கிழக்கு விக்கினேஸ் வரா சனசமூக நிலையம், இரண்டாமிடம் பண்ணாகம் ஸ்ரீ முருகன் சன சமூக நிலையம், மூன்றாமிடம் வட்டுக்கோட்டை கலைநகர் நேரு சனசமூக நிலையம் ஆகியனவே தெரிவுசெய்யப்பட்டன. (ந-50)


மண்ணில் மலர்ந்து மடிந்த
8ஆம் ஆண்டு நினைவாராதனையும்
27ஆம் ஆண்டு பிறந்த நாள் நினைவலைகளும்



மலர்ந்தது 01.02.1986
மடிந்தது 05.12.2005

அமரர் விஜேந்திரன் பிரதீபன்
(யா/மத்திய கல்லூரி மாணவன்)

படித்து முடித்து நீவந்து உண்டு
படுத்து உறங்குவாய் என
வழியோரம் விழிவைத்து நான்
களித்துக் காத்திருந்தது ஒரு காலம்
விழியோரம் நீர் கசிய நிர்க்கதியாய் நான்
தனித்திருந்து உண்டு உறங்குவது
இதுவும் ஒரு காலம்.
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

வவுனியா. அன்னை

(40318) (7.6.3)

ஈரவிழிகளுடன்
10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தம்பிஐயா பொன்னம்பலம்

மண்ணில் 22.11.1932
விண்ணில் 26.11.2003

திதி: பூர்வபக்க திருதிகை

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்து
எம்மை அன்புடன் அரவணைத்து வாழ
நன்னெறி காட்டிய அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

14, கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு.

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(40779) (15.3.6)

31ஆம் நாள் நினைவு கூர்தல்



மலர்வு 29.10.1951
உதிர்வு 05.11.2013

திருமதி சிவகெங்கை லட்சாதிபதி

05.11.2013 செவ்வாய்க்கிழமை அன்று இறை பதம் அடைந்த எனது ஆருயிர் அன்பு மனைவி சிவகெங்கை அவர்களின் சோகமே உரு வான நிலையில் நினைவு கூர்கின்றேன்.

மாதனை,
பருத்தித்துறை.

கணவர் லட்சாதிபதி

(#/14236) (7.6.3)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 05.04.1935
மறைவு 05.11.2013

கடந்த 05.11.2013 அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத்
தலைவி
அமரர்
கதிர்காமு பூரணம்
அவர்களின் வீட்டுக்கிருத்திய
சபிண்டீகரணம் இன்று
(05.12.2013) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்

மட்டுவில் தெற்கு வளர்மதி
சனசமூக நிலைய ஸ்தாபகர்
அமரர் பொன் நாகமணி அவர்களின்
17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வளர்மதிக்காய் துளிராக 16.07.1936
வான்மதிக்காய் உதிர்வாக 05.12.1996

அமரர்
பொன் நாகமணி

தொடரும் நினைவுகளில்...
காலவெள்ளத்தில் கரைந்து போனது -உனது முகம்
கரையவில்லை உனது நினைவுகள்
உன்னால் செதுக்கப்பட்ட - சமூகம்
மலர்ந்து கொண்டே இருக்கிறது
காலச்சுவடுகளில் - நீ
நடந்த பாதைகளில் இன்று நாங்கள் நடக்கின்றோம்
உன் நினைவுகளை சுமந்து செல்லும்- தென்றல்
உன் உயிர் மூச்சு பட்டதால் தூய்மையாகிவிட்டது
தூயவனே- நீ காலமெல்லாம் எம்முடன் வாழ்வது
தொடராக ...... தொடராக... முடிவு பெறாத
தொடராக சாந்தி பெறுக.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

நிர்வாகம்
வளர்மதி சனசமூக நிலையம்
ஏனைய உப அமைப்புக்கள்

(40835) (6.4)

முதலாம் ஆண்டுத்திவச அழைப்பு



அமரர்
நவரத்தினம் முத்துலட்சுமி

மண்ணில் 04.06.1951
விண்ணில் 15.12.2012

15.12.2012 அன்று இறையடிபுகுந்த எமது குடும்பத்தலைவி அமரர் நவரத்தினம் முத்துலட்சுமி அவர்களின் முதலாம் ஆண்டுத் திவசம் இன்று (05.12.2013) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தங்களையும் இந் நிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு பணிவுடன் அழைக்கின்றோம்.

நவம் பந்தல் சேவை,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

(40822) (3.4)

வ. நவரத்தினம்
குடும்பத்தினர்.

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 18.10.1944
இறப்பு 27.11.2011

திதி : 05.12.2013

செல்லத்தம்பி தருமராசா

எங்கள் அன்புத் தெய்வம்
எங்களை விட்டு மறைந்து
ஆண்டுகள் இரண்டானாலும்
அவர் நினைவு என்றும்
எங்களை விட்டு நீங்காது.

2ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

(40832) 7.6)

என்றும் நினைவில்
மகன், பெறாமக்கள்,
மருமக்கள்.

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 01.07.1933
ஆண்டவன் அழைப்பில் 08.12.2010

சின்னையா சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற லிகிதர்-கச்சேரி, வவுனியா)
திதி: திருதியை (05.12.2013)

எமைப் பிரிந்து மூன்றாண்டு
ஆனாலும் என்ன
எம்மோடு எப்போதும்
வாழ்கின்றீர் அப்பா
தினம் தினம் உங்கள் முகம்
பார்த்து மகிழ்ந்த காலம்

சிந்தனையில் வந்து விட்டால்
நெஞ்சில் சோகம் அப்பா
மரணமது வாழ்வின் ஒரு பகுதி
என்றே மனதை நாம்
திடப்படுத்தி வாழ்கின்றோம் அப்பா

உங்கள் பிரிவால் துயருறும்

ஏழாலை கிழக்கு,
இலந்தகட்டு, ஏழாலை.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(40818) (10.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17.03.1934 — மறைவு 16.11.2012

அமரர்

### இராசா வள்ளிப்பிள்ளை

கருவிலே எமைச் சுமந்து
காலம் எல்லாம் எம் உயர்வுக்காய்
அயராது உழைத்த எம் அன்புத் தெய்வமே!
எம்மைப் பிரிந்து ஓராண்டு நிறைவில்
உங்கள் பாதங்களை வணங்கி நிற்கின்றோம்...

மாசிவன் சந்தி,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

(40837)
(10.6)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி ராணி வேலுப்பிள்ளை

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராணி வேலுப்பிள்ளை நேற்று (04.12.2013) புதன் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், பத்மநாதன் (ASIAN INTERNATIONAL SCHOOL) திருமதி பத்மஅருள்வதனா, அருட்பணி, பத்மதயாளன் (தென்னிந்தியத் திருச்சபை-C.S.I CHURCH, COLOMBO) ஆகி யோரின் அன்புத் தாயும்.திருமதி தேவ மனோகரி (ஆசிரியை), குண சிங்கம் (ஆசிரியர், HOLY FAMILY CON VEND BAMPALAPITIYA), திருமதி விஜயநந்தினி (ஆசிரியை, விபுலாநந்தா த.ம.வி.கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும், பிறேம்சங்கர், கவிதாஞ்சன், ஸ்ரீபன் ராஜ், சாரா, பெரித் சௌம்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.12.2013) வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக் கப்பட்டு மாலை 4.00 மணிக்கு நல்லடக்க ஆராதனை இடம் பெற்று கல்கிசை பொதுக் கல்லறைத்தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 9506631, 077 0224830
0785249289.

தகவல்:
பிள்ளைகள்.

## பீமரத சாந்தி விழா அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் விஜய வருடம் கார்த்திகை மாதம் 20ஆம் நாள் (06.12.2013) வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல்
கோப்பாய் வீரபத்திரர் ஆலய பிரதமகுருவும்
யாழ் பல்கலைக் கழக பரமேஸ்வரன் ஆலய பிரதம
குருவும் வலிகிழக்கு சைவ சமய அருள்நெறி மன்ற
தலைவருமாகிய எமது தந்தையார்

சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்

தம்பதியரின் எழுபதாவது அகவை பூர்த்தியை ஒட்டிய பீமரத சாந்தி வைபவம் கோப்பாய் வீரபத்திரர் ஆலயத்திற்கு அருகில் உள்ள வலிகிழக்கு சைவ சமய அருள்நெறி மன்ற மண்டபத்தில் நிகழ திருவருள் கூடியுள்ளதால் அத்தருணம் அனைவரையும் தவறாது வருகை தருமாறு அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு : அன்று முற்பகல் 11 மணியளவில் "தர்ம சாஸ்திரம் கூறும் வாழ்க்கை நெறி" எனும் நூல் வெளியீடும் இடம் பெறும்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி/14259) (7.6)

## மரண அறிவித்தல்



### திருமதி அன்னபூரணி வைத்திலிங்கம்

யாழ்ப்பாணம் நீராவியடியை வசிப்பிடமாக கொண்டவரும், தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான திருமதி அன்னபூரணி வைத்திலிங்கம் நேற்று (04.12.2013) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-காரைக் காலம்மை தம்பதியரின் அன்பு மகளும், அம்மையப்பர், சம்பந்தர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் (கம்யூனிஸ்ட் கட்சி மூத்த உறுப்பினர், முன்னாள் அதிபர்-உரும்பிராய் இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும், சிவகாமி, கோபால் சங்கரப்பிள்ளை, லீலா, விமலா, அம்பிகா, மோகன் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.12.2013) புதன்கிழமை மாலை 4 மணியளவில் கொழும்பு, பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

61/2, அப்துல் கபூர் மாவத்தை, கொழும்பு-03.
தொலைபேசி: 0112573638

(4084) (10.8)

தகவல்:
குடும்பத்தினர்.

# இருவருக்கு பிணை

யாழ்ப்பாணம், டிசெ.5

இந்தியாவிலிருந்து கஞ்சா போதைப் பொருள் கொண்டு வந்தவர்களுடன் கடலில் இருந் தவாறு தொலைபேசியில் தொடர்பு கொண்ட குற்றச் சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு பேரும் யாழ்.மேல் நீதி மன் றால் திங் கட்கிழமை பிணை யில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இருவர் சார்பிலும் பிணை விண்ணப்பம் மேற்கொள்ளப் பட்டிருந்தது.

இந்தியாவிலிருந்து படகில் கஞ்சா போதைப் பொருள்களை இலங்கைக்கு கொண்டு வந்தவர்களுடன் நெடுந்தீவுக் கடலில் படகில் இருந்தவாறு குறித்த இருவரும் கைத் தொலை பேசியில் உரையாடியுள்ளனர் என்ற குற்றச் சாட்டு சுமத்தப்பட்டு கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதியி லிருந்து விளக்கமறியலில் வைக்கப்பட் டிருந்தனர்.

பிணை விண்ணப்பத்தை பரிசீலித்த மேல் நீதிமன்று இருவரையும் தலா 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 50 ஆயிரம் ரூபா பெறு மதியான மூன்று ஆள் பிணை களிலும் விடுவித்தது. (வ-4)

# கப்பலின் உப கப்டன் நள்ளிரவில் அட்டகாசம்

*மடக்கிப் பிடித்தனர் மக்கள்*

யாழ்ப்பாணம், டிசெ.5

காங்கேசன்துறை துறை முகத்துக்கு வந்த கப்பலின் உப கப்டனாகப் பணியாற்றும் பெரும்பான்மை இனத் தைச் சேர்ந்த ஒருவர் நள்ளிரவில் பொதுமக்களின் வீட்டுக் கதவுகளைத் தட்டி அட்டகாசம் புரிந்துள்ளார். பொதுமக்கள் ஒன்றுசேர்ந்து அவரைப்பிடித்து உரிய கவ னிப்பு வழங்கிய பின்னர் சுன் னாகம் பொலி ஸில் ஒப்ப டைத்தனர். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு ஏழாலை சூராவத்தை பகுதியில் இடம் பெற்றுள்ளது.

காங்கேசன்துறை துறை முகத்தில் கப்பல் நங்கூரமிட்ட பின்னர் கப்பலின் உப கப்டன், இலங்கை மின்சார சபையின் அலுவலகம் ஒன்றில் பணிபுரியும் அவரது நண்பரான பெரும்பான்மை இனத்தவர் ஒருவருடன் நேற்று முன்தினம் இரவு மது அருந்தி யுள்ளார்.

இதன் பின்னர் நள்ளிரவில் அந்தக் கப்பல் உப கப்டன் வெளியே சென்று அந்தப் பகுதியில் உள்ள பொது மக்களின் வீட்டுக் கதவுகளைத் தட்டிச் சிங்களத்தில் பேசியுள் ளார். இதனால் பொதுமக்கள் பீதியடைந்தனர். இவரை யார் என்று விசாரிக்க முற்பட்டவர்களையும் அவர் தாக்கி யுள்ளார்.

இதனால் பொதுமக்கள் இவரைத் திருடன் என நினைத்து ஒன்று திரண்டு மடக்கிப் பிடித் துள்ளனர். பின்னர் உரிய கவனிப்பின் பின்னர் அவர் சுன்னாகம் பொலிஸில் ஒப்ப டைக்கப்பட்டார். பொலி ஸார் விசாரணை களை மேற் கொண்ட போதே அவர் உப கப்டன் என்பது தெரிய வந்தது. பின்னர் அவர் விடுவிக்கப் பட்டார். (த-4-86)

# அபராதம்

சொந்தப் பாவனைக்கு போதைப் பொருளான கஞ்சா வைத்திருந்த நாவற்குழி வாசிக்கு சாவகச்சேரி நீதிமன் றில் 10 ஆயிரம் ரூபா அபராதம் நேற்று முன் தினம் விதிக்கப்ப ட்டது.

கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி பொலி ஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறித்த நபரிட மிருந்து கஞ்சாவைக் கைப்பற்றியதுடன் நப ரையும்கைதுசெய்தனர். குறித்த நபரை மறு நாள் நீதிவான் முன்னி லையில் முற்படுத்திய போது ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார். வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது 10 ஆயிரம்ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

### நவரட்ணம் ஜீவரத்தினம்

[பளை பிரதேச சபை முன்னாள் உத்தியோகத்தர்]

எம்முடன் பல வருடங்கள் கடமையாற்றி இறைவனடி சேர்ந்த நவரத்தினம் ஜீவரத் தினம் அவர்களின் பிரிவினால் துய ருற்றி ருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த் திக்கின்றோம்.

பிரதேச சபை,
பளை.

(சி/2797)
(7.6)

செயலாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தில்லைநாதன்(காந்தி)

(இளைப்பபாறிய நெடுந்தீவு பிரதேசசெயலகம் பணியாளர்)



நெடுந்தீவு மேற்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப் பிடமாகவும் 309, கரும் புள்ளியான் நட்டாங் கண்டலை வதி விடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தில் லைநாதன் நேற்றுமுன்தினம் (03.12.2013) கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-பராசக்தி ஆகியயோரின் அன்பு மகனும், கமலாவதியின் அன் புக் கணவரும், பகீரதன், வகீஸ்வரன், கிரு வேணி, சிறீரமணன், திலகவேணி, மயூரன், விஜயவேணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுப்பிரமணியம்-வள்ளியம்மை தம்பதி யரின் பாசமிகு மருமக னும், கிருஸ்ணவேணி, நிரோஜா, றதீஸ்வரன், ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

(40841)(17.14)

தகவல்:குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னப்பிள்ளை கதிரவேலு



வசந்தபுரம் இளவாலையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பிள்ளை கதிரவேலு நேற்று (04.12.2013) புதன்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர வேலுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், குலவீரசிங்கம் (Y.S.O) மற்றும் செல்வநாயகம், சறோஜாதேவி, செல்வறட்ணம் (ஆசிரியர், இளவாலை, கன்னியர் மடம் மகாவித்தியாலயம்), சிதம்பரநாதன் (சமூகசேவை அலுவலகர் பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற வர்களான மாணிக்கம், கதிரேசு மற்றும் கதிரேசு, லதா, செல்வி, சிவகுமார், பிறேமலதா, தர்மினிஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய றான்ஸ்போமர் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.


(40841)
(10.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற நிலஅளவை பட வரைஞர் - நில அளவை திணைக்களம், கொழும்பு)



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிட மாகவும், நல்லூர் இராசாவின் தோட் டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை மயில்வாகனம் 30.11.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-முத்துப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென் றவர்களான பாலசிங்கம்-சிவயோகம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், சகுந்தலாவின் அருமைக் கணவரும், ஹரிகரன் (கனடா), துவாரகா (ஆசிரியை, யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயமதி (கனடா), செந்தில்நேசன் ஆகியோரின் அன்பு மாமனும், அனிஷாவின் பாசமிகு பேர னும், காலஞ்சென்றவர்களான இராஜநாயகம், சின்னத்தம்பி, செல்வநாயகம், இராசம்மா, தங்கம்மா, தம்பிஐயா மற்றும் விவேகானந்தன் (கைதடி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.12.2013) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் (யோகபிருந்தா) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

130/9, இராசாவின்தோட்ட வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

நாகராசா முரளிதாசன் ஆகிய,எனது 873194510V இலக்க NIC, லைசன்ஸ், இன்சூரன்ஸ், ரக்ஸ் ஆகிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் காரைநகர், சங்கானை, மானிப்பாய் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். தொடர்பு:- 0775315765

# அனுமதியின்றி பந்தயக் கார் இறக்குமதி

கொழும்பு,டிசெ.5

மோட்டார் கார்ப் பந்தயங்களில் பயன்படுத்தப்படும் 'ரேஸிங் கார்கள்' அனுமதிப் பத்திரங்கள் மூலமாகவே இறக்குமதி செய்ய வேண்டும் என்ற நடை முறையே இதுவரை உள்ளது.

கடந்த முதலாம் திகதியிலிருந்து அந்த நடைமுறையை நீக்கி விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கு முன்னர் காணப்பட்ட சட்டத்துக்கு அமைய, 'ரேஸிங்' கார்கள் 'ஸ்டேஸன் வெகன்' மற்றும் இரண்டாண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிப் பத்திரங்களைப் பெறவேண்டியிருந்தது.

எனினும் புதிய சட்டத்துக்கு அமைய அவற்றை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரங்களைப்பெற வேண்டியதில்லை.

சுங்கக் கட்டணங்களைச் செலுத்தியதன் பின்னர் அந்த வாகனங்களை விடுவித்துக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் கடந்த நவம்பர் மாதம் 21 ஆம்திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (ச-22)


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## Personal Class

புதிய கல்வியாண்டிற்கான தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கு (No age Limit) வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (அனுமதிகளுக்கு இன்றே விரையுங்கள்)

தொடர்பு : K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (40843)
071 904 1576 (பிரபல ஆசிரியர்) (7.6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31.03.1946 | 05.11.2013 |

### அமரர் வீரகத்தி நடராஜா

அன்பின் உறைவிடமே அப்பா!
இப் பூவுலகில் எமைத் தவிக்கவிட்டு எங்குதான் போனீரோ?
காலங்கள் கடந்தாலும் நாம் கொண்ட
கோலங்களே மாறினாலும் உம் நினைவு
எம் மனதைவிட்டு நீங்காது.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (05.12.2013) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நவரட்ணராஜா வீதி,
கோண்டாவில் மேற்கு. (40852)(10.14) குடும்பத்தினர்.

# மாணவர்களுக்கு நூல் விநியோகம்

கொழும்பு,டிசெ.5

பாடசாலை மாணவர்களுக்கு பாடநூல்களை விநியோகிக்கும் தேசிய வைபவம் ஹோமாகம மகா வித்தியாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, பிரதி அமைச்சர் மொஹான் லால் கிரேரு, கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க உட்பட பலர் கலந்து கொள்வர்.

37,441,264 மில்லியன் பாட நூல்கள் நாடு முழுவதும் விநியோகிக்கப்படும்.

அதிகளவான பாடநூல்கள் மேல் மாகாணத்துக்கே விநியோகிக்கப்படும். இந்த மாகாணத்தில் 9,081,607 மில்லியன் பாடநூல்கள் விநியோகிக்கப்படும் என்று கல்வி வெளியீட்டு ஆணையாளர் திஸ்ஸ ஹேவாவித்தான தெரிவித்தார்.

நாட்டிலுள்ள 41 லட்சம் மாணவர்களுக்கு இவ்வார இறுதிக்குள் பாட நூல்கள் விநியோகித்து முடிக்கப்படும் என்று அவர் கூறினார். (ச)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழகம் சித்த மருத்துவத் துறை நூலக் ஊழியர்

### இராசையா பாஸ்கரன்

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

18,19,20ஆம் அணி
சித்த மருத்துவத் துறை, மாணவர்கள்.
(40853)(10.14)

## மத்திய கிழக்கில் உடனடி வேலை வாய்ப்பு

### 10 நாள்களுக்குள் பயணம்
### QATAR (நெஸ்லே வோட்டர்)

| | | |
|---|---|---|
| ★ விற்பனை விநியோகஸ்தர்கள் | 45,000/= இற்கு மேற்பட்ட சம்பளம் | 130 பேர் |
| ★ உற்பத்தி தொழிலாளர் | 45,000/= இற்கு மேற்பட்ட சம்பளம் | 96 பேர் |
| ★ A/C டெக்னீஷியன் | 52,000/= இற்கு மேற்பட்ட சம்பளம் | 04 பேர் |
| ★ சாரதிகள் | 72,000/= இற்கு மேற்பட்ட சம்பளம் | 80 பேர் |
| ★ வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர் | 100,000/= இற்கு மேற்பட்ட சம்பளம் | 04 பேர் |

கடந்த 16.11.2013 யாழ் மாவட்ட செயலகத்தினால் யாழ் மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட தொழிற்சந்தையில் கலந்துகொண்டு பயன்பெற்றோர் அதிகம் அதிகம்.....

நேர்முகப் பரீட்சை 08.12.2013

பதிவுகளுக்கு முந்துங்கள் ....
தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதி இலவசம்
அரச அங்கீகாரம் பெற்றவர்கள் PV72052 LL2502
(40819)(10.6.3)

தொடர்புகளுக்கு:
T.P.No: 077 843 6475
021 221 7085
Email: rifraajaffna@gmail.com
www.rifraa.com

Branch Office
Rifraa International (Pvt) Ltd,
No: 95, Muslim College Road,
Jaffna. Sri Lanka.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13.02.1926

மறைவு 16.11.2012

### அமரர் முத்தம்மா ஐயாத்துரை

திதி: திருதியை 05.12.2013

அன்பின் தெய்வமாய் கடமையில் கண்ணியமாய்
பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளி விளக்காய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்று
விட்டாலும் உங்களைப் போன்ற ஒரு அன்புத் தெய்வத்தை
நாங்கள் பாரினில் கண்டதில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் நினைவுடன்

(40845)(10.14)

கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். குடும்பத்தினர்.

## பல்துறை செயற்றிட்டம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.5

தேசிய போஷாக்குச் சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட போஷாக்குக்காக பல்துறை செயற்றிட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் மொனறாகல பொது நூலக கேட்போர் கூடத்தில் தொடக்கி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-7)

## கிணறு அமைக்க கிடைத்தது நிதி

மட்டக்களப்பு,டிசெ.5

ஒலுவில் துறைமுக மாற்றுக் காணி வீட்டுத்திட்ட குடும்பங்களுக்கு குடிதண்ணீர் கிணறு அமைப்பதற்கான இரண்டாம் கட்ட காசோலைகள் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.


திராய்க்கேணி பிரதேசத்திலுள்ள வீட்டுத் திட்ட குடும்பங்களுக்கே, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி,நீர்ப்பாசன, வீடமைப்பு அமைச்சினால் இதற்கான நிதி யொதுக்கீடு செய்யப்பட்டது.

குடிதண்ணீர் கிணறுகளை அமைக்கும் பொருட்டு 10 தமிழ், முஸ்லிம் குடும்பங்களுக்காக தலா 23,000 ரூபாவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன. (ச)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையினை நடைமுறைப்படுத்துதல்

உள்நாட்டு யுத்தத்தினால் உயிரிழந்த/காயமடைந்த நபர்கள் மற்றும் சொத்துச் சேதங்கள் தொடர்பான தொகைமதிப்பு - 2013

1982 மற்றும் அதன் பின்னர் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தினால் உயிரிழந்த/காணாமல் போயுள்ள, காயமடைந்த/ அங்கவீனமடைந்த நபர்கள் மற்றும் சொத்துச் சேதங்கள் தொடர்பான தொகைமதிப்பானது தற்பொழுது இடம்பெறுகின்றது.




தங்களின் குடும்பத்திற்கு ஏற்பட்டுள்ள வாழ்வாதாரம் மற்றும் சேதங்கள் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக தங்களிடமுள்ள சகல ஆவணங்களையும் கணக்கெடுப்பு உத்தியோகத்தரிடம் சமர்ப்பிப்பதற்குத் தயார்படுத்தி வைக்கவும்.

(சி/14130)

அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
மற்றும்
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

## சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்
Kids Park Pre School & Day Care Center
## சிறுவர் ஆக்கத்திறன் கல்விக்கண்காட்சி - 2013

| | |
|---|---|
| காலம்: | -07.11.2013 (சனி) 08.11.2013 (ஞாயிறு) |
| நேரம்: | -காலை 8.30 am - 4.00 pm |
| இடம்: | -சிறுவர் பூங்கா முன்பள்ளி பிரதான மண்டபம் |
| தலைவர்: | -திருமதி கர்ணி தனபாலன் (பணிப்பாளர்) |

பிரதம விருந்தினர்
திரு. K.R. கமலநாதன் அவர்கள்
(சிரேஸ்ட விரிவுரையாளர்-யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி)
திருவாட்டி இராஜபத்மினி கமலநாதன் அவர்கள்

சிறார்கள், பெரியோர்கள், ஆசிரியர்கள் கற்க வேண்டிய விடயங்கள். சிறுவர்கள், பெரி யோர்களுக்குத் தேவையான மாபெரும் நூல் கண்காட்சியும் மலிவு விற்பனையும், சிறுவர் களுக்கான கற்றல் சாதனங்கள், விளையாட்டுப் பொருள்கள் மலிவு விற்பனை

புக்லாப்
பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி

உங்கள்
அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்

அபி பேபி மேட்
267, பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்

(சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகக் குடுபத்தினரும்)

அசாத்திய அர்ப்பணிப்பின் பிரதிபலன் வெற்றியாகும்! Breaking Every Barrier to Victory!

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 5

இமையாணன் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு தின நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. வித்தியாலய அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் தலைமையில் இடம்பெறும். (த-400)

# கிளிநொச்சி பஸ் விபத்தில் ஐவர் படுகாயம்



யாழ்ப்பாணம், டிசெ. 5

கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் சாரதி உட்பட ஐந்து பேர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று இரவு 9.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸே பாலை மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் சாரதியும் மற்றும் நான்கு பயணிகளும் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காயமடைந்தவர்கள் விவரங்களை உடனடியாகப் பெற முடியவில்லை. (ஐ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### காணாமற்

டுள்ளது. காணாமற்போனவர்களை இறந்தவர்களாகக் கருதி பதிவு செய்யும் விசேட நடவடிக்கை 2010 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க சட்டத்தினூடாகக் கொண்டு வரப்பட்டது.

இந்த விசேட சட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதியுடன் முடிவடைவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும், தற்போது அதனுடைய காலம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாகப் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையில், வடக்கில் இதுவரை 87 பேரே காணாமற் போனோரை இறந்தவர்களாகக் கருதிப் பதிவு செய்துள்ளனர்.

பெரும்பாலானவர்கள் தமது உறவுகள் திரும்பி வருவார்கள் என்று இன்னமும் நம்பிக் கொண்டிருப்பதால் இந்தப் பதிவு நடவடிக்கையில் நாட்டம் செலுத்தவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5-86)

### குற்றச்சாட்டு

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசு பொறுப்புக்கூறல் விடயங்களில் தனது சொந்த நடவடிக்கைகளை உறுதியாக மேற்கொள்ள வேண்டும். தனது சொந்த நடைமுறைகளினூடாக, இலங்கை போர்க் குற்ற விவகாரங்களுக்குப் பதிலளிக்கும் என்பதையே நாம் விருப்புடன் எதிர்பார்க்கின்றோம். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இலங்கையினால் அதனைச் செய்யமுடியும் என்று நம்புகின்றோம்.

உண்மையான முன்னேற்றம் இல்லாவிட்டால், அனைத்துலகச் சமூகத்தின் பொறுமை குறைந்து போகத் தொடங்கிவிடும் என்றார். (த-5)

### அமெ.

வரப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உயர் மட்டக் குழுவினர் இலங்கைக்கு இன்று வருகின்றனர்.

அவர்கள் இன்று இரவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் பின்னர் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கும் இந்தக் குழுவினர் பயணம் செய்து நிலைமைகளை அவதானிக்கவுள்ளனர். அத்துடன் பல தரப்பினரையும் இந்தக் குழுவினர் சந்தித்துப் பேசுவர் என்று தெரியவருகிறது. (த-5)

### இராணுவம்

பெயானி கூறியிருப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான். போர்க் காலத்தின் போது இடம்பெயர்ந்த மக்களை நிச்சயமாக அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும். இது அவர்களுக்கான உரிமையாகும். சில பகுதிகளைப் பாதுகாப்புக் காரணம் கருதி உடனே பொதுமக்களிடம் ஒப்படைக்க முடியாதிருப்பினும் ஏனைய காணிகளை உடனடியாக அவர்களிடம் ஒப்படைக்க அரசு முன்வரவேண்டும்.

அத்தோடு, வடக்கில் தமிழர்களின் காணிகளில் இராணுவத்தினர் முகாம்களை அமைத்து இருப்பதாலும் காணிகளை மீள வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதனால், இராணுவத்தினர் மக்களின் காணிகளில் இருந்து உடனடியாக முகாம்களை அகற்றி அங்கிருந்து வெளியேற வேண் டும். அத்துடன், குறித்த காணிகளை இடம்பெயர்ந்தவர்களிடம் அல்லது குறிப்பிட்ட காணிக்குச் சொந்தக்காரர்களிடம் மீள ஒப்படைக்க வேண்டும்" என்றார். (த-சி)

### கள்ளத்

னாய்வுப்பிரிவு மேற்கொண்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

றெக்ஷயன் தற்கொலை செய்துகொண்டார் என்ற கதையை அனைவரும் நம்பும் வகையில், கட்டவிழ்த்துவிட்டு, அவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை மூடிமறைப்பதற்கு அவரது மனைவி முயற்சித்துள்ளார். பொலிஸாருக்கும் தவறான தகவலை வழங்கியுள்ளார் என்பது விசாரணைகளின் மூலம் தற்போது தெரியவந்துள்ளது.

தனது கணவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்றும், எனவே, மரணம் தொடர்பில் தனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை என்பதுதான் றெக்ஷயனின் மனைவியின் வாக்குமூலம் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

### எங்கள்

நாடுகள் சபையின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான விசேட பிரதிநிதி கலாநிதி சலோகா பெயானி, யாழ்.மாவட்டத்துக்கான பயணத்தை நேற்று முன்தினம் முடித்துக்கொண்டு, நேற்று முல்லைத்தீவுக்குச் சென்றார்.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், முல்லைத்தீவு மாவட்ட இராணுவத் தளபதி ஆகியோரை அவர் சந்தித்தார்.

இதன் பின்னர் இறுதிப் போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் பகுதிக்குச் சென்றார்.

முள்ளிவாய்க்கால் முன்பள்ளியில் அவர் பொதுமக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது போரின் இறுதிக் கட்டத்தில் வட்டுவாகலில் வைத்து தமது கைகளால் படையினரிடம் கையளிக்கப்பட்ட பிள்ளைகள் எங்கே என்றும், அவர்களை மீட்டுத் தருமாறும் ஐ.நா. அதிகாரிகளிடம் கூறிக் கதறினார்கள் தாய்மார்கள்.

தனக்குச் சொந்தமான காணி ஒன்றைப் பிக்கு ஒருவர் அடாத்தாகக் கைப்பற்றி அதில் விகாரை அமைத்திருப்பதாகவும் இந்தக் காணியை மீட்டுத் தருமாறும் ஐ.நா. பிரதிநிதியிடம் கொக்கிளாயைச் சேர்ந்த ஒருவர் முறையிட்டார்.

இதன்போது ஐ.நா. அதிகாரி பெயானி, 'காணிக்குப் பதிலாக நட்டஈடு தந்தால் ஏற்றுக்கொள்வீரா?' என்று கேட்டார். இதற்குக் குறித்த நபர் தனக்கு காணிதான் வேண்டும் என்று தெரிவித்தார்.

தென்னிலங்கை மீனவர்கள் இங்கு வந்து சட்டவிரோதமான தொழில் நடவடிக்கையில் ஈடுபடுகின்றமையால் தமது தொழில் வளம் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் ஐ.நா. அதிகாரியிடம் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், வெலி ஓயா என்ற சிங்களப் பிரதேசத்தை முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைத்து சிங்களக் குடியேற்ற முனைப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ் மக்களின் வயல் நிலங்கள் 2 ஆயிரத்து 556 ஏக்கர் காணி சிங்கள மக்களுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்களுக்குக் காணிக் கச்சேரி நடத்தப்பட்டுக் காணிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. தமிழ் மக்களுக்கும் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

இதில் இன்னொரு மாகாண சபை உறுப்பினரான அன்ரனி ஜெகநாதனும் கலந்துகொண்டு கருத்துக்களைத் தெரிவித்தார்.

காணாமற்போனோர் தொடர்பில் இன்னொரு குழுவினர் வந்து விபரங்களைத் திரட்டுவர் என அங்கிருந்த மக்களிடம் தெரிவித்த பெயானி, மக்கள் தெரிவித்த விடயங்களை உரிய இடத்துக்குச் சமர்ப்பிப்பதாகவும் குறிப்பிட்டார். (த-5)

#### தடுக்கப்பட்ட மக்கள்

கேப்பாப்பிலவைச் சேர்ந்த மக்கள் சூரியபுரம் காட்டுப் பகுதியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களைச் சந்திப்பதற்காகப் பெயானி சூரியபுரம் சென்றார். அங்கு 4 பேரை மாத்திரமே சந்திப்பதற்கு அனுமதித்ததுடன் ஏனையோரைச் சீருடையினர் அடித்து விரட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-5)

### ஈ.பி.டி.பியின்

ரக பிஸ்டல் அவரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இதேவேளை தற்போது கைது செய்யப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளரான கமலேந்திரனின் மெய்ப் பாதுகாவலர் எனக் கூறப்படும் ஜோசப் பற்றிக் அமல்ராஜ் என்பவர் கடந்த ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி 9 எம்.எம். ரக பிஸ்டலுடன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார். உணவகம் ஒன்றில் துப்பாக்கியுடன் இருந்த போதே இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவங்களையடுத்து ஈ.பி.டி.பியிடம் இப்போதும் சட்டவிரோத ஆயுதங்கள் உள்ளமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இந்த ஆயுதங்கள் சட்டவிரோத படுகொலைகளுக்குப் பயன் படுத்தப்பட்டுள்ளனவா என்றசந்தேகமும்எழுந்துள்ளது.

தமது பாதுகாப்புக்காக வைத்திருந்த ஆயுதங்களை கடந்த 2002 ஆம் ஆண்டே அரசிடம் ஒப்படைத்து விட்டு முழுமையான அரசியல் நீரோட்டத்தில் கலந்து விட்டதாக அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தொடர்ச்சியாக தெரிவித்து வந்தார்.

அத்துடன் போர் முடிவடைந்த பின்னர் முப்படையினரைத் தவிர வேறு எவரிடமும் ஆயுதங்கள் இல்லை எனவும், ஒட்டுக்குழுக்களிடமிருந்த ஆயுதங்கள் களையப்பட்டு விட்டதாகவும் அரசு கூறியிருந்தது.

சட்டவிரோத ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்ற வலுவான கோரிக்கைகள் சர்வதேச சமூகத்தால் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்ட போதும் அவ்வாறு எதுவுமில்லை என்று அரசு தொடர்ச்சியாகச் சமாளித்து வந்தது. இந்நிலையில் இந்தச் சம்பவங்கள் இப்போது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளன.

### அமைச்சர்

எனவே, இனியும் அடிவருடிகளை நம்பி அரசு செயற்படுவது நாட்டை மீண்டும் சேற்றுக்குழிக்குள் தள்ளுவதற்கு ஒப்பானதாகும்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்றுச் சபையில் தெரிவித்தார்.

வடக்கிலுள்ள உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களும் உத்தியோகத்தர்களும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு அதிகாரங்கள் இல்லை யென்றும் தங்களுக்கே அதிகாரங்கள் இருக்கின்றன என்ற தொனியிலும் செயற்படுகின்றனர். இதனைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றினால்கூட எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வறுமை ஒழிப்பு பற்றியும் சமுர்த்தி குறித்தும் இங்கு பேசுகின்றீர்கள். ஆனால், வன்னி மக்களின் இரண்டாயிரம் கால்நடைகளை இராணுவம் ஆக்கிரமித்துவைத்துள்ளது. இவற்றை மீளவும் மக்களிடம் கையளிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேவேளை, பலாலி விமானநிலைய சேவையை ஆரம்பித்தால் திருச்சி, சென்னை ஆகிய இடங்களிலிருந்து பயணிகள் வருவார்கள். இது உங்களின் சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு ஏதுவான காரணியாக அமையும். வடக்கில் இன்று மாவிட்டபுரத்துக்கு அப்பால் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கின்றது. அண்மையில் மக்களின் பிரச்சினைகளை அறிவதற்காகக் காங்கேசன்துறைக்குச் சென்ற வடக்கு மாகாண முதல்வர் மாவிட்டபுரத்துடன் திருப்பி அனுப்பப்பட்டார். இவ்வாறான கட்டுப்பாடுகளை அரசு இல்லாது செய்ய வேண்டும்.

போர் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்துள்ள போதிலும் அரச தரப்பில் உரையாற்றும் அனைவரும் புலிப் பல்லவியையே பாடுகின்றனர். இந்த வருடத்துடனாவது இத்தகைய செயல்களைக் கைவிட்டு விடுங்கள். வடக்குத் தேர்தல் பற்றிப் பேசினீர்கள். சர்வதேசத்தின் நிர்ப்பந்தத்தால்தான் அதை நடத்தினீர்கள். மாறாக வடக்கு மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்கவேண்டும் என்ற நோக்கில் தான் அது நடத்தப்பட்டது.

அதேவேளை, நமது பிரச்சினைகளை நாமே பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என அரச தரப்புக் கூறுகின்றது. 2011ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் 18 தடவைகள் பேச்சுகளை நடத்தியது. சரியான கோணத்தில் பேச்சு இடம்பெறாததால் அதைத் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாமல் போனது. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற முழு ஆர்வத்துடன் நாம் இருந்தோம்- என்றார். (த-சி)

### சகாவின்

றெக்ஷயனின் படுகொலைக்கு ஒத்தாசை புரிந்த குற்றச்சாட்டில் அவரது மனைவி மற்றும் பிரதான சந்தேகநபரான கமலேந்திரன், அவரது உதவியாளர் ஜசிந்தன் ஆகிய மூவரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.எம்.மகேந்திரராஜா நேற்று உத்தரவிட்டார்.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் டானியல் றெக்ஷயன் கடந்த மாதம் 26ஆம் திகதி அவரது வீட்டில் வைத்து சடலமாக மீட்கப்பட்டார். அவர் தற்கொலை செய்துகொண்டார் என்றே முன்னர் கூறப்பட்டது. ஆயினும் உடற்கூற்றுப் பரிசோதனையின் போது அவரது தலையில் 9 எம்.எம். துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன. விசாரணையின் போது அவர் மிக நெருக்கமாக வைத்து தலையின் பின்புறத்தில் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டார் என்பது தெரியவந்தது. அவரது வயிற்றிலும் காயம் காணப்பட்டது.

இதன்பின்னர் பொலிஸ்மா அதிபரின் விசேட உத்தரவின் பேரில் கடந்த 29 ஆம் திகதி இது தொடர்பான விசாரணைகள் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸ்மா அதிபரின் இந்த கட்டளையின் பிரகாரம், பல கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்த பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு, நெடுந்தீவுக்கும் விசேட குழுவொன்றை அனுப்பியது.

இந்தக் கொலைச் சம்பம் தொடர்பாக றெக்ஷயனின் மனைவி, பிள்ளை ஆகியோர் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் சாட்சியமளித்தனர். இந்தக் கொலை தொடர்பில் ஈ.பி.டி.பியின் வங்களாவடி அலுவலகத்தில் பணியாற்றும் ஜசிந்தன் (வயது - 29) என்பவரைக் கொழும்பு 4 ஆம் மாடியிலிருந்து வருகை தந்த பொலிஸ் குழு கடந்த திங்கட்கிழமை இரவு வங்களாவடி அலுவலகத்தில் வைத்துக் கைது செய்தது.

பலகோணங்களில் துருவித் துருவி முன்னெடுக்கப்பட விசாரணைகளின் மூலம், உயிரிழந்தவரின் மனைவியின் ஒத்துழைப்புடனேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்பது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் யாழ். அமைப்பாளருமான கந்தசாமி கமலேந்திரன் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டார். அத்துடன் கொல்லப்பட்டவரான றெக்ஷயனின் மனைவியும் கைதானார்.

கொலை நடந்த இடத்துக்கு கமலேந்திரனை ஜசிந்தன் என்பரே வாகனத்தில் ஏற்றிச்சென்றுள்ளார் என்று கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட மூவரும் நேற்று மாலை ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவானிடம் நேற்று முற்படுத்தப்பட்டனர். அங்கு விசாரணைகளின் பின்னர் இவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

படுகொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் 9 எம்.எம். ரக பிஸ்டலும் 11 துப்பாக்கி ரவைகளும் சூடு நடத்திவிட்டுச் சந்தேகநபர்கள் இருவரும் தப்பிச்சென்ற மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட பொருள்களைப் பொலிஸார் நேற்று நீதிமன்றில் சமர்ப்பித்தனர். அவற்றைப் பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

ஜசிந்தன் என்பவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் என்றும் அவர் மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும் 2010 ஆம் ஆண்டு அவர் ஈ.பி.டி.பியில் இணைந்து கொண்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-4)




தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த வாரம் இடம்பெற்ற வடக்கு மாகாண சபையின் 4 ஆவது 'வர்ண இரவு' நிகழ்வில் பாடசாலைகளுக்கான தேசியமட்டப் போட்டியில் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உடற்பயிற்சி போட்டியில் முதலாமிடத்தை பெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியினர் கௌரவிக்கப்பட்டனர். கௌரவம் பெற்ற வீரர்கள் விருந்தினர்களுடன். (த-23)

## இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம் , டிசெ.5

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று வியாழக்கிழமை பி.ப 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## மேசைப்பந்தாட்ட பயிற்சி முகாம் இன்று

யாழ்ப்பாணம், டிசெ.5

யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்டப் பயிற்சி முகாம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை யாழ். மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-23)

## 'மைலோ' வெற்றி கிண்ணத்துக்கான உதைபந்தாட்டம் இன்று ஆரம்பம்

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுத் துறையினரால் நடத்தப்படும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான 'மைலோ' வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை இரு கட்டங்களாக நடைபெறவுள்ளன.

இதில் வடமராட்சிக் கழகங்களுக்கான போட்டிகள் இன்றுமுதல் இமையானா மத்திய விளை யாட்டுக் கழக மைதானத் தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம், வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம், வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம்-

மணற்காடு சென்.அன்ர னீஸ் விளையாட்டுக் கழ கம், கம்பர் மலையங்கம் பன் விளையாட்டுக் கழகம், நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம், உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகம், பொலிகை விண்மீன் விளையாட்டுக்கழகம் , சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் மற்றும் வல்வை விளையாட்டுக் கழகம் ஆகிய அணிகள் இதில் மோதவுள்ளன.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கான போட்டிகள் எதிர்வரும் 9 ஆம், 10 ஆ ம், 11 ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றுள் ளன.

இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி, இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி, தீவக அணி, அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி, மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி, மானிப்பாய் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி , குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி, ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி, பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி, நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி, யாழ்.ஐக்கிய விளையாட்டுக் கழக அணி, நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி ஆகியவை பங்கு கொள்ளவுள் ளன.

இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் இரவு யாழ். கிறீன்கிறாஸ் ஹோட்டலில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றிய நெஸ்லே நிறுவனத்தின் செயற்பாட்டு முகாமையாளர் பந்துல எக்கொடகே, யாழ்.மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மரதன் ஓட்டப் போட்டியை நடத்தினோம். அதில் சுமார் எண்ணாயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்த வகையில் இந்த முறை உதை பந்தாட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் நாம் உதைபந்தாட் டப் போட்டியை நடத்துகிறோம்- என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டப் பொலிஸ் உயர் அதிகாரிகள் , இராணுவ அதிகாரிகள், யாழ்ப்பாணம் மாநகர முதல் வர் மற்றும் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர்கள் போட்டி களில் கலந்து கொள்ளும் கழகங்களின் முகாமையாளர்கள், அணித் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண் டார்கள். (த-86-400)

## கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் வெற்றி

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கிழக்கு மாகாண அமைச்சுகள், திணைக்களங்களுக்கிடையிலான சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் 17 அணிகள் பங்கு பற்றின. இறுதிப் போட்டியில் கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தை கடும் போட்டியின் மத்தியில் கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கி கொண்டது.

## நட்பு ரீதியான உதைபந்தில் சென்.ஜோன்ஸ் வென்றது

யாழ்ப்பாணம் , டிசெ.5

சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரி யர் அணிக்கும், யாழ். மத்திய கல்லூரி ஆசிரிய அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டி கடந்த திங்கட்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



## ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம் , டிசெ.5

வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 19ஆவது ஆண்டு நிறைவை முன் னிட்டு நடத்தப்படும் மின்னொளியிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இதுவரை இடம்பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் நியூபைட் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக 'சி' அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 22 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அமலன் 9 ஓட்டங்களையும், கண்ணன் 6 ஓட்டங்க



ளையும் பெற்றனர்.

பந்து வீச்சில் நியூபைட் விளையாட்டுக்கழக அணி சார்பில் ராஜா, கார்த்திக், சிவாகர் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினை வீழ்த்தினர்.

23 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூபைட் விளையாட்டுக்கழக அணி 1.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை மாத்திரம் இழந்து 27 ஓட்டங்க ளைப் பெற்றது.

இதில் ராஜா 18 ஓட்டங்களையும், கார்த்திக் 7 ஓட்டங்களையும் விளாசினர்.

பந்து வீச்சில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக 'சி' அணி சார்பில் அமலன் ஓர் இலக்கை வீழ்த்தினார். நியூபைட் விளையாட்டுக்கழக அணி 4 இலக்குகளால் வெற்றி பெற்றது.

தமிழ் யூனியன் விளையாட்டுக்கழக அணிக்கும் குட்லக் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தமிழ் யூனியன் விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கேதீஸ் 11 ஓட்டங்களையும், நிஷாந்தன் 8 ஓட்டங்களையும், சஞ்ஜித பிரசாந் 6 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் குட்லக் விளையாட்டுக்கழக அணி சார்பில் ஹக்கீம், ஜெறிக் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

37 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய குட்லக் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 35 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் ஹக்கீம் 12 ஓட்டங்களையும், ஜெறிம் 9 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தமிழ் யூனியன் விளையாட்டுக் கழக அணி சார்பில் சஞ்ஜீத் பிரகாஸ், செந்தாழன் ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

தமிழ் யூனியன் விளையாட்டுக் கழக அணி அணி ஓட்டத்தினால் வெற்றி பெற்றது. (த-23)

"-"

பந்து வீச்சில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக 'சி' அணி சார்பில் அமலன் ஓர் இலக்கை வீழ்த்தினார். நியூபைட் விளையாட்டுக்கழக அணி 4 இலக்குகளால் வெற்றி பெற்றது.

## றோயலை வென்றது பாஷையூர் அன்ரனிஸ்

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான ஆட்டம் ஒன்றில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



# அடிலெய்ட்டில் பெய்லிக்கு பதிலாக ஜேம்ஸ் பல்க்னர்?

ஆஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்கும் இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஷ் தொடரின் இரண்டாவது போட்டியில் சகலதுறை வீரர் ஜேம்ஸ் பல்க்னர் பங்குபற்றுவார் என்ற கருத்துக்கள் எழுந்துள்ளன.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது போட்டிக்காக அறிவிக்கப்பட்ட 12 பேர் கொண்ட குழாமே இரண்டாவது போட்டிக்கும் அறிவிக்கப்பட்டது. முதலாவது போட்டியில் ஜேம்ஸ் பல்க்னர் 12ஆவது வீரராகச் செயற்பட, ஜோர்ஜ் பெய்லி தனது அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

எனினும் இரண்டாவது போட்டி இடம்பெறவுள்ள அடிலெய்ட் ஆடுகளம் தட்டையானதாகவும் துடுப் பாட்ட வீரர்களுக்குச் சாதகமானதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் மேலதிக துடுப்பாட்ட வீரரைத் தவிர்த்து வேகப்பந்து வீசும் சகலதுறை வீரரான ஜேம்ஸ் பக்னரை களமிறக்க ஆஸ்திரேலிய அணி நிர்வாகம் சிந்தித்து வருகிறது.

முதலாவது போட்டியில் பங்குபற்றிய பதினொருவர் பற்றித் தனக்கு முழுமையான திருப்தி இருப்பதாகத் தெரிவித்த டரன் லீமன், தற்போது இரண்டாவது போட்டிக்கான பதினொருவர் பற்றிச் சிந்திக்த வேண்டியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

போட்டித் தன்மையான குணத்தைக் கொண்ட வரான ஜேம்ஸ் பல்க்னர், தனது அறிமுகப் போட்டியில் தி ஓவல் மைதானத்தில் அதை வெளிப்படுத்தியிருந்ததாகக் குறிப்பிட்ட டரன் லீமன், முதலாவது போட்டியில் முதல் பதினொருவரில் அவருக்கு துரதிர்ஷ்டவசமாக இடம் கிடைத்திருக்கவில்லை எனக் குறிப்பிட்டார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டி இன்று ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# துடுப்பில் பெயர் பதிக்க டோனிக்கு ரூபா 75 கோடி



இந்திய அணி தென் னாபிரிக்காவுடன் 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாட உள்ளது. இந்தத் தொடரில் டோனி சில சாதனைகளை படைக்க உள்ளார். ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் எடுத்த அசாருதீனின் சாதனையை முறியடித்து டோனி முதல் இடம் பிடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. டோனி 151 போட்டிகளில் விளையாடி 5213 ஓட்டங்கள் குவித்துள்ளார். அசாருதீன் சாதனையை தகர்க்க டோனிக்கு இன்னும் 27 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்படுகிறது.

இந்தியா 3-0 என்ற கணக்கில் வென்றால், இந்திய அணிக்காக ஒருநாள் போட்டிகளில் அதிக வெற்றிகளைக் குவித்த அணித்தலைவர் என்ற பெருமையும் டோனிக்கு கிடைக்கும். இந்த வகையில் அசாருதீன் 90 வெற்றிகள் பெற்று முதலிடத்திலும், டோனி 88 வெற்றிகளுடன் 2ஆவது இடத்திலும் உள்ளனர்.

இந்த முறை அவர் தனது துடுப்பில் ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஸ்பார்ட்ன் ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் பெயரைப் பதித்துள்ளார். துடுப்புத் தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் இந்த நிறுவனம் டோனியை ஓராண்டுக்கு ரூபா 20 கோடிக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

இது தவிர அமைட்டி பல்க லைக்கழகத்தின் பெயரும் டோனியின் துடுப்பில் இடம்பெற்றுள்ளது. இதற்காக டோனிக்கு ரூபா 15 கோடி கொடுக்கப்பட்டுள்ளதாம். இந்தியா- ஆஸ்திரேலியா தொடர் வரை டோனி ரிபோக் நிறுவனத்தின் பெயர் பதித்த துடுப்பைத் தான் பயன்படுத்தி வந்தார். இந்த நிறுவனம் டோனியை 5 ஆண்டுக ளுக்கு ரூபா 15 கோடிக்கு ஒப்பந்தம் செய்திருந்தது. இந்த ஒப்பந்தம் முடிவடைந்ததை தொடர்ந்து டோனியைஸ்பார்ட்ன் நிறுவனம் பிடித் துக்கொண்டது. (த)

# மூன்றாம் இலக்க வீரராக ஜோ ரூட் களமிறங்குவார்



ஆஷஸ் தொடரின் இரண்டாவது போட்டியில் ஜோ ரூட் மூன்றாம் இலக்க வீரராக களமிறங்கலாம் என இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் கிரஹம் கூச் சமிக்ஞை தெரிவித்துள்ளார்.

முதலாவது போட்டியில் மூன்றாம் இலக்க வீரராகக் களமிறங்கிய ஜொனதன் ரொட் நாடு திரும்பியுள்ள நிலையில், ஜோ ரூட்டுக்கு இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜொனதன் ட்ரொட் டுக்குப் பதிலாக உபாதையில் இருந்து மீண்டுள்ள ரிம் பிரஸ்னன், இங்கிலாந்து அணியில் பெயரிடப்பட்டுள்ளார்.

இதேவேளை ஹரி பலன்ஸ், பென் ஸ்டொக்ஸ் அல்லது ஜொனி பேயார்ஸ்டோ ஆகியோரில்ஒருவருக்குஇரண்டாவது போட்டியில் சந்தர்ப்பம் வழங்கப்படலாம்எனதெரிவிக்கப்பட்டுள்ளது.


# தொடர் தோல்வியில் பார்சிலோனா அணி

லயனல் மெஸ்ஸி விளையாடாத நிலையில் பார்சிலோனா அணி தொடர்ச்சியாக இரண்டாவது தோல்வியைச் சந்தித்துள்ளது.

லா லிகா உதைபந்தாட்டப் போட்டியொன்றில் அத்திலட்டிக் பில்பபாவோ அணி 1:0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனாவை வெற்றிகொண்டது. 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் பார்சிலோனா அணி இவ்வாறு தொடர்ச்சியான தோல்விகளைச் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உபாதை காரணமாக இவ்வாண்டின் மீதமாகவுள்ள பருவகாலப் போட்டிகளில் லயனல் மெஸ்ஸி விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. லயனல் மெஸ்ஸி விளையாடாத நிலையில் கடந்த வாரம் சம்பியன்ஸ் லீக் போட்டியில் அஜெக்ஸ் அணிக்கெதிரான போட்டியில் பார்சிலோனா அணி தோல்வியடைந்திருந்தது. (த)

# ஐ.சி.சி சிறந்த வீரருக்கான விருது பட்டியலில் சங்கா



சர்வதேச கிரிக்கெட் சபையின் வருடாந்த விருதுகளில் இவ்வாண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர், சிறந்த ஒரு நாள் சர்வதேச போட்டி வீரர் ஆகிய விருதுகளுக்கு இலங்கை அணியின் சிரேஷ்ட வீரர் குமார் சங்கக்காரவும் போட்டியிடவுள்ளார்.

ஆறு வீரர்களில் ஒரு வீரராக அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சர்வதேச கிரிக்கெட் சபையின் விருதுகளுக்கான குறும் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே குமார் சங்கக்கார இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

இதில், குமார் சங்கக்கார தவிர, இலங்கையின் மஹேல ஜெயவர்த்தன சர்வதேச கிரிக்கெட் சபையின் விளையாட்டுப் பண்புகளை மதிப்பதற்கான விருதுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டு நவம்பரில் நியூசிலாந்துக்கெதிரான போட்டியில் நடுவர் ஆட்டமிழப்பு வழங்க முன்னரே களத்தை விட்டு வெளியேறியமைக்காக அவர் இந்த விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

முழுமையான குறும் பட்டியல்

*சிறந்த கிரிக்கெட் வீரர்:*
ஹசிம் அம்லா (தென்னாபிரிக்கா)
ஜேம்ஸ் அன்டர்சன் (இங்கிலாந்து)
மைக்கல் கிளார்க் (ஆஸ்திரேலியா)
அலஸ்ரெயர் குக் (இங்கிலாந்து)
மகேந்திரசிங் டோனி (இந்தியா)
குமார் சங்கக்கார (இலங்கை)

*சிறந்த டெஸ்ட் வீரர்:*
ஹசீம் அம்லா (தென்னாபிரிக்கா)
ஜேம்ஸ் அன்டர்சன் (இங்கிலாந்து)
இரவிச்சந்திரன் அஷ்வின் (இந்தியா)
மைக்கல் கிளார்க் (ஆஸ்திரேலியா)
செற்றேஸ்வர் புஜாரா (இந்தியா)
டேல் ஸ்ரெய்ன் (தென்னாபிரிக்கா)

*சிறந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி வீரர்:*
சயீட் அஜ்மல் (பாகிஸ்தான்)
ஷீகர் தவான் (இந்தியா)
மகேந்திரசிங் டோனி (இந்தியா)
மிஸ்பா உல் ஹக் (பாகிஸ்தான்)
இரவீந்திர ஜடேஜா (இந்தியா)
குமார் சங்கக்கார (இலங்கை)

*சிறந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி வீராங்கனை:*
சுசி பேற்ஸ் (நியூசிலாந்து)
சார்லற் எட்வேர்ட்ஸ் (இங்கிலாந்து)
மெ‌ன் லெனிங் (ஆஸ்திரேலியா)
டேன் வான் நியேகேர்க் (தென்னாபி ரிக்கா)
அனியா ஸ்ரப்சோல் (இங்கிலாந்து)
ஸ்ரபானி ரெய்லர் (மேற்கிந்திய்த் தீவுகள்)

*சிறந்த வளர்ந்து வரும் வீரர்:*
ட்ரென்ட் போல்ட்ற் (நியூசிலாந்து)
செற்றேஸ்வர் புஜாரா (இந்தியா)
ஜோ றூட் (இங்கிலாந்து)
மிற்சல் ஸ்ரார்க் (ஆஸ்திரேலியா)

*சிறந்த உப அங்கத்துவ நாடுகளின் வீரர்:*
கெவின் ஓ பிரையன் (அயர்லாந்து)
கைல் கோர்ட்செர் (ஸ்கொட்லாந்து)
எட் ஜொய்ஸ் (அயர்லாந்து)
நவ்றோஸ் மங்கல் (ஆப்கானிஸ்தான்)

*சிறந்த 20/20 சர்வதேசப் போட்டி பெறுபேறு:*
உமர் குல் - 2.2-0-6-5 தென்னாபிரிக்கா வுக்கெதிராக மார்ட்டின் கப்ரில் 69 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 101 - தென்னாபிரிக்காவுக் கெதிராக
பிரென்டன் மக்கலம் - 53 பந்துகளில் 123 - பங்களாதேஷ்க்கெதிராக அஜந்த மென்டிஸ் - 4-2-8-6 சிம்பாப்வேக்கு எதிராக

*சிறந்த 20/20 சர்வதேசப் போட்டி வீராங்கனை:*
சுசி பேற்ஸ் (நியூசிலாந்து)
ஷனெல் டேலி (மேற்கிந்தியத் தீவுகள்)
டீன்ட்ரா டொற்றின் (மேற்கிந்தியத் தீவுகள்)
மெக் லெனிங் (ஆஸ்திரேலியா)
சாரா ரெய்லர் (இங்கிலாந்து)
ஸ்ரபானி ரெய்லர் (மேற்கிந்தியத் தீவுகள்)

*சிறந்த நடுவர்:*
அலீம் தார்
ஸ்டீவ் டேவிஸ்
குமார் தர்மசேன
மராயஸ் எரஸ்மஸ்
இயன் கூல்ட் ரொனி ஹில்
றிச்சர்ட் இலிங்வேர்த்
றிச்சர்ட் கெற்றல்புரோ
நைஜல் லோங்
புரூஸ் ஒக்ஸென்போர்ட்
போல் றெய்பல்
றொட்னி ரக்கர்

*விளையாட்டு உணர்வுக்கான விருது:*
மஹேல ஜெயவர்த்தன
பர்ஹத் றேஸா

*மக்கள் தெரிவு விருது:*
அலஸ்ரெயர் குக்
மைக்கல் கிளார்க்
மகேந்திரசிங் டோனி
விராட கோஹ்லி
ஏபி.டி.வில்லியர்ஸ்

# 20/20 போட்டிகளில் விளையாட ஆர்வம்



20/20 கிரிக்கெட் போட்டியில் விளையாட பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் விருப்பம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணியின் தலைவராக உள்ள மிஸ்பா உல் ஹக் 20/20 போட்டிகளில் விளையாடுவதில்லை.

இந்த நிலையில் 20/20 போட்டியில் மீண்டும் விளையாட ஆர்வம் காட்டி வரும் அவர் மேலும் கூறியது:

இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கொடுக்கும் வகையில் சர்வதேச 20/20 கிரிக்கெட் போட்டியிலிருந்து விலகினேன். எனினும் உள்ளூர் 20/20 போட்டிகளில் தொடர்ந்து விளையாடி வருகிறேன். பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் தேர்வுக் குழுவினரும் நான் 20/20 போட்டியில் விளையாட வேண்டும் என விரும்பினால் மீண்டும் 20/20 போட்டியில் விளையாடுவேன் என்றார்.

சமீபத்திய தொடர்களில் பாகிஸ்தான் மோசமாக விளையாடியிருந்தாலும் தனக்கு எவ்வித நெருக்கடியும் இல்லை என்று குறிப்பிட்ட மிஸ்பா, என் மீது நம்பிக்கை வைத்திருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நான் தலைவர் பதவியை சவாலாக எடுத்துக் கொள்கிறேன். தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தோற்றாலும் அது மோசமான தோல்வியல்ல. தோல்வியில் இருந்து மீள முடியும் என்பதில் நாங்கள் எப்போதுமே உறுதியாக இருக்கிறோம். இப் போது தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் தொடரை வென்று நாங்கள் மீண்டும் வெற்றிப் பாதைக்கு திரும்பியிருக்கிறோம் என்றார். (ரு)

## மக்களின் மனம் கவர்ந்த வீரர் டோனி

ஐ.சி.சியின் மக்களின் மனம் கவர்ந்த வீரர் விருதை இந்திய அணியின் அணித் தலைவர் டோனி வென்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த வீரர்கள் அடங்கிய டெஸ்ட், ஒருநாள் அணி தெரிவு செய்யப்படும்.

இதேபோன்று இணையத்தள வாக்கெடுப்பின் மூலம் மக்களின் மனம் கவர்ந்த வீரர் தெரிவு செய்யப்படுவார்.

இந்த ஆண்டுக்கான விருதை அணித் தலைவர் டோனி தட்டிச் சென்றுள்ளார்.

சச்சின் டெண்டுல்கருக்கு பிறகு இவ் விருதைபெறும்இரண்டாவதுஇந்தியர்டோனி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டுக்கான பட்டியலில் இந்திய அணியின் டோனி, வீராட் கோஹ்லி, ஆஸ்திரேலியாவின் மைக்கல் கிளார்க், இங்கிலாந்தின் அலெஸ்டர் குக், தென்னாபிரிக்காவின் டி வில்லியர்ஸ் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். (ரு)


**யாழ். நகரில் எண்கணித நிபுணர்**



உலகெங்கும் புகழ் பெற்ற எண்கணித நிபுணர்
வாஸ்து ஆலோசகர்
கலாநிதி
JNS.செல்வன்
இப்பொழுது யாழ்ப்பாணத்தில் நேரில் ஆலோசனை தருகிறார்.

தொடர்பு:
Dr. JNS.செல்வன்
20, இந்துக் கல்லூரி சாலையில்
(யாழ். இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக)
சந்திக்கலாம் 3 நாள்கள் மட்டும்
(06.12.2013 வரை மட்டும்)
தொலைபேசி இல: 071 421 1484

---

26 ஆவது வருட கல்விச் சேவையில்...
புதிய
**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

**புதிய கல்வியாண்டு - 2014**
தரம் 1 முதல் O/L வரை
● தமிழ் மொழிமூலம் ● English Medium
**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**
07.12.2013 சனி பி.ப. 3.00 மணி
புதிய அனுமதிகள் இன்று முதல்

---

**யாழ்.நகரில்கடைவிற்பனைக்கு**

ஸ்ரான்லி வீதியில் அடுக்கு மாடிக் கடையும், அதனுடன் சேர்ந்த களஞ்சியமும் (வாகனத் தரிப்பிட வசதி உள்ளது) 2¾ பரப்புக் காணியில் அமைந்துள்ளது.

தொடர்பு: 077 387 6615 / 077 772 5258 / 077 559 0069

---

**மலேசியா நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**

(3 Years Contract (Work Permit) Furniture Factory மரத்தளபாட உற்பத்தி உதவியாளர் Helpers -Nos 20 அதி உயர் சம்பளம் +OT+மேலதிக உற்பத்திக்கு Commission 3வருட முடிவில் கை நிறைய சம்பளத்துடன் தொழில் ஒன்றையும் கற்றுக்கொள்ள அரியதோர் சந்தர்ப்பம் வயதெல்லை 22 - 38 ( ஒரு மாதத்துக்குள் பயணம் விரையுங்கள்)

உங்கள் Passport சகிதம் எதிர்வரும் 7 ஆம் திகதி இல. 24 Station Road வவுனியா Lanka Voice இலும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் Hospital வீதி ஆசிர்வாதம் ஒழுங்கையில் அமைந்துள்ள Green Grass Hotel இலும் காலை 9.00 மணி முதல் பி.ப. 1.00 மணி வரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

வீட்டுப்பணிப்பெண்களும் உடன்தேவை. (2 Years work permit செய்து கொடுக்கப்படும்)
தொடர்பு: Lanka Voice 075 0650084, 024 5615610

---

**எதிர்வரும் 23 ஆம் திகதி A/L பரீட்சை முடிவுகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.** -இது செய்தி

வீணே 5 வருடங்கள் காத்திருக்கவேண்டாமே........

உங்கள் பரீட்சை முடிவு
- சாதகமாக அமைந்தால் → 1 வருடம் செல்ல → பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி பெறலாம் → 4 வருடம் கழிந்து → தொழில்தேட ஆரம்பிப்பீர்கள்
- பாதகமாக அமைந்தால் → 2 வருடங்கள் பொறுமை காத்து → மீண்டும், மீண்டும் முயற்சி செய்து சிலசமயம் சித்தி பெறலாம். (1 வருடம் காத்திருந்து)

ஏனிந்த காலதாமதம் விரைந்து வாருங்கள் சித்தியோ, தோல்வியோ O/L உடன் நியூசிலாந்து சைப்பிரஸ், UK படித்துக் கொண்டே கை நிறையச் சம்பாதிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி- 20.12.2013
திசைகாட்டி (பிறை) லிமிற்
175, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்
0212219016, 0215689090
WWW. thisaivisa. com

---

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

---

**பயிற்சி வகுப்புகள்**
**பொதுநிதி முகாமை**

பொது முகாமை உதவியாளர் அதிசிறப்பு தேர்வுக்கும் ஏனைய பரீட்சைகளுக்கும் 07.12.2013 முதல் (சனி, ஞாயிறு காலை/மாலை) நடைபெறும்.

விரிவுரையாளர்: செ.நாகராஜா
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P : 077 181 0836

---

**மணமகள் தேவை**

பிரான்ஸ் பிரஜா உரிமை பெற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்ல குடும்பத்தைச் சேர்ந்த (றோமன் கத்தோலிக்) 28 வயதுடைய மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.
தொடர்பு கொள்ள - 0771272569

---

**வீடு வாடகைக்கு தேவை**

திருநெல்வேலி, அத்தியடி, ஆனைப்பந்தி, நல்லூர் போன்ற இடங்களில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு:- 0770376549

---

**NEW SCIENCE HALL**
KANNATHIDDY ROAD, JAFFNA

*2015 BATCH A/L*
PHYSICS
அலைகளும் அதிர்வுகளும்
Sat, Sun-6.30 am

BY.MR.S. SOTHILINGAM
ஆரம்பம்: 07.12.2013

---

**SUBRA சித்தன்கேணி**
கிளை - வட்டுக்கோட்டை
தரம் 1 முதல் O/L வரை
(தமிழ் - ஆங்கில மொழிமூலம்)
புதிய பிரிவுகள் ஆரம்பம்
07.12.2013 சனி மாலை 3.30மணி
வலி. மேற்கில் கல்விக்குத் தனியிடம் பெற்ற ஒரே நிறுவனம்
SUBRA
அனுமதிகள் வழங்கப்படுகின்றது.
40 மாணவர்களுக்கு மட்டும் ஒரு வகுப்பில் அனுமதி

* மாதாந்தம் பயிற்சிப் பரீட்சைகள்
* நவீன கற்பித்தல் சாதனங்களுடன் புதிய பிரவேசம்
* மாணவர்களுக்கான இலவச நூலக வசதி
* கடமை - கண்ணியம் கட்டுப்பாட்டுடனான தனித்துவமான நிறுவனம்

---

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| BATCH - I | BATCH - II | BATCH - III |
|---|---|---|
| 07/12/2013 | 09/12/2013 | 11/12/2013 |

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1½ Months
*(Quick Learning Course)*

**Diploma In English** 2½ Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

**எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேசப் பரீட்சைகள்**

**A1 Exam - Sponsor /Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**BI Exam - Student Visa** மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**IELTS** (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)
We guarantee minimum band 5.0 Upwards 2½ Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.